
வைரவிழா ஆண்டு
KALKI 21.7.2002
ரூ. 6.00

கல்கி



மீண்டுமொரு மும்பை நாயகி!



ESTABLISHED
1968
உங்களின்
ஃபர்னிச்சர் தேவைகள்
அனைத்திற்கும்
கைராசியான நிறுவனம்
Sathya
ஃபர்னிச்சர் உலகம்
LIFETIME INVESTMENT
தரமான இந்திய
ஃபர்னிச்சர்களையே வாங்குவோம்!
இந்தியாவை வளமாக்குவோம்!
Major Credit Cards accepted
LIVING ROOM FURNITURE
BEDROOM FURNITURE
DINING SETS
STEEL ALMIRAHS
COMPUTER FURNITURE
OFFICE FURNITURE
மாபெரும் ஃபர்னிச்சர் ஷோரூம்கள்
மைலாப்பூர் : சத்யா கார்ப்பரேஷன் (20,000 சதுர அடி) 69 & 70, இராயப்பேட்டை ஹைரோடு
(வள்ளுவர் சிலை அருகில்) சென்னை - 4. ஃபோன் - 498 2930 / 31, 498 3929
அண்ணாநகர் மேற்கு - DABC Bldg., 6, M T H Rd, (TVS - பாடி எதிரில்),
சென்னை - 50. ஃபோன் - 6544929/ 6545029
266, மேட்டுப்பாளையம் ரோடு, (சாயிபாபா கோயில் பஸ் ஸ்டாப்), கோயம்புத்தூர் - 43 ஃபோன் : 452929, 452930, 98422 42929
23, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 2, ஃபோன் - 704414





வைகோ கைது

-ஆதியும் அந்தமும்!

● "வைகோ தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசியிருப்பதால் அவரைக் கைது செய்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று அத்வானிக்குக் கடிதம் எழுதிவிட்டு மத்திய அரசின் 'தகவலுக்காக' காத்திருந்தார் ஜெ. ஆனால் மத்திய அரசு 'நீங்கள் ஏதாவது செய்து விட்டுப் போங்கள்" என்று விட்டேத்தியாக இருக்கவே முதல்வருக்கு உஷ்ணம் ஏறிவிட்டது. காரியத்தில் சீரியஸாக இறங்கி விட்டார். வைகோமீது ஜாமீனில் வெளிவர முடி யாத வாரண்ட் கோர்ட்டிலிருந்து பெறப் பட்டது.

● உயர் போலீஸ் அதிகாரிகள் உள்துறைச் செயலர், தலைமைச் செயலர் ஆகியோரிடம் தெளிவாகவே ''எந்த ஒரு பிரச்னையும் இருக்கக் கூடாது'' என்று சொன்னவுடன் குறிப்பை உணர்ந்து அதிகாரிகள் முழு மூச்சாக குதித்துவிட்டனர். சென்னையா, மும்பையா? எங்கு வைத்து கைது செய்வது என்பதில் குழப்பம் இருந்தது. கடைசியில் ''நம்ம ஊர்தான் சரி. எதுவாக இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம்'' என்று முடிவு செய்யப்பட்டு மீனம்பாக்கம் விமான நிலையத்திலேயே கைது செய்வது என்று முடிவாகியது. தமிழ்நாடு முழுவதும் தடுப்புக் காவல் சட்டப்படி பிரமுகர்கள் கைது செய்யப் பட்டனர்.

● வெளியூர்களிலிருந்து வரும் வாகனங்களைத் தாம்பரம், பல்லாவரத்திலும், சென்னையிலிருந்து செல்லும் வாகனங்களை நந்தனம், கத்திப்பாரா அருகிலும் சோதனை செய்தது போலீஸ். 'கட்சிக்காரர்கள் என்று தெரிந்தால் அங்கேயே மடக்கிப் பிடித்தார்கள். இது தவிர வீடியோவும் எடுத்தார்கள். வைகோ மனைவி, மகன் குடும்பத்தாரை, கத்திப்பாரா அருகில் மடக்கி கேள்விகள் கேட்டு சில நிமிடங்கள் முடக்கினார்கள்.

● திரிசூலம் ரயில் நிலையத்தில் ரயிலிலிருந்து இறங்கும் ஒவ்வொருவரையும் மடக்கியது போலீஸ். வெளிப்புற வாயிலைக்

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

கடந்து விமான நிலையத்தின் உள்ளே நுழைவது பத்திரிகையாளர்களுக்கே பெரிய பிரச்னையாய் இருந்தது. அப்படியும் கிட்டத்தட்ட நூறு ம.தி.மு.க.வினர் உள்ளே நுழைந்துவிட்டனர். போலீஸ் அவர்களை விரட்டிப் பிடித்து வேன்களில் ஏற்றியது. இதில் கட்சித் தொடர்பில்லாத பயணிகளும் மாட்டிக் கொண்டு வேனுக்குள் ஏற்றப்பட்டதுதான் பரிதாபம்.

● முதல் நாளிரவு மும்பையில் வைகோவைச் சந்தித்துவிட்டு சென்னைக்கு விரைந்து வந்து அவரை வரவேற்கக் காத்திருந்தார்கள், மத்திய அமைச்சர்கள் செஞ்சி ராமச்சந்திரனும், கண்ணப்பனும். அவர்கள் ஏற்பாடு செய்த ஸ்பெஷல் பாஸ் உதவியுடன், தாணு, விஜயா தாயன்பன், டைரக்டர் நடிகர் சுந்தர்ராஜன், செய்தி தொடர்பாளர் நன்மாறன், சட்டப் பிரிவு செயலாளர் தேவதாஸ் ஆகியோர் உள்ளே சென்று விட்டார்கள். காலை பதினோரு மணியிலிருந்து, போலீஸுக்கும் ம.தி.மு.க. தொண்டர்களுக்கும், விமான நிலையத்துக்குள்ளேயே சடுகுடு ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. 12 மணி வாக்கில் இயந்திர கோளாறு காரணமாக விமானம் கிளம்பவில்லை என்று தெரிந்ததும் எல்லோரும் காற்றிறங்கிய பலூனாக ஆகிவிட்டார்கள் போலீஸ் உட்பட. மதுரையிலிருந்து வாரண்டுடன் வந்திருந்த போலீஸ் கண்காணிப்பாளர் ஆயுஸ்மணி திவாரி, டென்ஷனுடன் வெளியே கிளம்பிப் போனார். செங்கை சரக டி.ஐ.ஜி. ஜாங்கிட், டி.ஜி.பி. நெயில்வால் மற்றும் கூடுதல் டி.ஜி.பி. வெங்கடகிருஷ்ணன் ஆகியோருடன் ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை செல், வாக்கி டாக்கியில் பேசிக் கொண்டிருந்தார். அரை மணிக்கொருமுறை தகவல்கள், கோட்டையில் இருந்த ஜெவுக்கு செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் மூலம் சொல்லப்பட்டன.


● வைகோ குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர்களுக்கு அனுமதி பாஸ் கோரப்பட்டது. ஆனால் மனைவி மற்றும் மகனுக்கு மட்டும்தான் அனுமதி என்று சொல்லிவிட்டார்கள். பா.ஜ.க. பிரமுகர்கள் யாரும் விமான நிலையத்துக்கு வரவில்லை.

● போலீஸ், விமான நிலையத்துக்குள்ளே வைத்து வைகோவை கைது செய்து பிரமுகர்கள் வெளிவரும் வாயிலைத் தவிர்த்து, வேறு வழியாக கூட்டிச் சென்று விடலாம் என்று திட்டம் போட்டது. ஆனால் ஏர்போர்ட் அதிகாரிகள் உள்ளே கைது செய்வது என்றால் தில்லியில் உயர் அதிகாரிகளிடமும், உள்துறை அதிகாரிகளிடமும் அனுமதி பெற வேண்டும் என்று சொல்லி விட்டனர். விமானம் தாமதம் என்றவுடன் உயர் போலீஸ் அதிகாரிகள் உள்துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டபோது "இது சிவில் ஏவியேஷன் இலாகா விவகாரம்" என்று கைவிரித்தது உள்துறை. கடைசியில் வாரண்டை மட்டும் விமான நிலையத்துக்கு உள்ளேயே வைகோவிடம் காட்ட அனுமதி பெற்றது போலீஸ்.



● வைகோவுக்கு இதன் மூலமாக கிடைக்கும் விளம்பரம் மிகவும் குறைந்தபட்சமாகவே இருக்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டது போலீஸ். காவல் துறை சார்பாக ஏழு பேர் வீடியோ காமிராவைக் கையாண்டார்கள். ஒவ்வொரு பத்திரிகையினரையும் படம் பிடித்துக் கொண்டனர். பிரமுகர்கள் வெளிவரும் வாயிலின் இருபுறமும் போலீஸ் அணிவகுத்து நின்றது. இரண்டு பக்கமும், இரண்டு தடுப்புகள் போடப்பட்டு தொலைக்காட்சி காமிராக்களும், பத்திரிகையாளர்களும் ஓரங் கட்டப்பட்டனர். எந்த பத்திரிகையாளரும் வைகோவிடம் பேசக் கூடாது என்ற அளவில் செயல்பட்டது போலீஸ்.

● இதனால் எரிச்சலடைந்த பத்திரிகையாளர்கள் கொஞ்சம் கடுப்புடன் இருந்தார்கள். இதில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ''நான் நினைத்தால் பத்திரிகையாளர் ஆகலாம். நீங்க போலீஸ் வேலைக்கு வர முடியாது'' என்று வேறு சீண்டிவிட்டார். டி.எஸ்.பி. மற்றும் எஸ்.பி. அளவில் இருந்த அதிகாரிகள் மட்டும் நட்போடு நடந்து கொண்டார்கள்.



வைகோ கைது பற்றி காங்கிரஸ் சட்டப் பிரிவு செயலாளர் வழக்கறிஞர் சூரியப் பிரகாசம் என்ன சொல்கிறார்?

பொடா சட்டப்படி கைது செய்யப்பட்டுள்ள தம்மைக் காவலில் வைக்க, மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது என்பது வைகோ வாதம். எந்தச் சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தன் முன் நிறுத்தப் படும் குற்றம் சாட்டப்பட்டுள்ளவரை 15 நாள் காவலில் வைக்க எல்லா மாஜிஸ்டிரேட்களுக்கும் குற்றவியல் நடைமுறை சட்டம் 167 (2) கீழ் அதிகாரம் உண்டு.

அந்த 15 நாட்கள் முடிவதற்குமுன் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளை விசாரிக்க, தகுதியாக நியமிக்கப்பட்டிருக்கும் கோர்ட்டில் ஆஜர் செய்தால் போதும். மேலும் விசாரணை நடத்தப் போவது பொடா நீதி மன்றம்தானே தவிர, மாஜிஸ்டிரேட் கோர்ட் அல்ல. இந்த வழக்கில் ஜாமீனில் வெளி வர முடியாத வாரண்ட் பிறப்பிக்க, மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது என்று வைகோ சொல்வது சரிதான்.

பொடா கோர்ட்டுக்கு மட்டுமே அந்த அதிகாரம் உண்டு. இதுதவிர வைகோவுக்குப் பதினைந்து நாட்களுக்கு மேல் காவல் போட்டிருப்பதாலும் ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்டை, தகுதியில்லாத நீதிமன்றம் கொடுத்திருந்தாலும், கைது சட்ட விரோதம் என்று கோர்ட்டில் 'ஹேபியஸ் கார்பஸ்' பெட்டிஷன் போட முடியும்.

ஆனால், இந்த 15 நாட்களுக்குள் வைகோவை மதுரையில் உள்ள பொடா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சட்ட நடவடிக்கைகளை முறைப் படுத்திக் கொள்ள அரசுக்கு வாய்ப்பு உண்டு.

● ஏர் இந்தியா விமானத்தில் இயந்திரக் கோளாறு என்றதும், அடுத்து சென்னைக்கு வரும் 'ஜெட்' ஏர்வேஸ் விமானத்தைப் பிடித்தார் வைகோ. மும்பையில் அந்த இடைப்பட்ட நேரத்தில் அவருடன் பேசியவர்கள், அருண் ஜெட்லி, பெர்னான்டஸ் ஆகியோர். சரியாக 4.35க்கு விமானம் சென்னையில் இறங்கியது. வாயிலுக்கு அருகே போலீஸ் கெடுபிடிகளையும் மீறி ம.தி.மு.க. வழக்கறிஞர்கள், இளைஞர் அணி சத்யா, ஸ்டூடன்ட்ஸ் ஜெராக்ஸ் சவுரிராஜன் மற்றும் திரளாகத் தொண்டர்கள் கூடி விட்டார்கள்.

● விமான நிலையத்திலிருந்து இறங்கியவுடன் தனது லக்கேஜ்களை தானே சரிபார்த்து எடுத்து வந்தார் வைகோ. அதற்குக் கொஞ்ச நேரம் பிடித்தது. அதன்பின் முகத்தை அலம்பிக் கொண்டு மனைவி மகனுடன் பேசினார். அமெரிக்காவில் இருக்கும் அவரது மகள் 'செல்'லில் அழைத்தார். "மதுரைக்கு யாரும் வர வேண்டாம். ஏனென்றால் அங்கு ரிமாண்ட் செய்துவிட்டு சேலம் அல்லது வேலூரில்தான் போடுவார்கள்" என்று அவர்களிடம் சொன்னார் வைகோ.

● செஞ்சியார், கண்ணப்பன் ஆகியோருக்கு அவர் விடுத்த முக்கியமான செய்தி "கைதைக் கண்டித்து நடக்க இருக்கும் போராட்டம் அமைதியான முறையில் நடக்க வேண்டும்" என்பதுதான். இதுதவிர பல்வேறு மாவட்டங்களில் கைதான கழகத் தோழர்களை ஜாமீனில் கொண்டு வரவும் தேவையான சட்ட உதவி செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சட்டப் பிரிவு செயலாளர் தேவதாஸிடம் சொன்னார்.

● விமான நிலையத்தில் உள்ளே இருந்தே போலீஸ் மத்தியில் நடந்து வந்த வைகோ, வெளிப்புற வாயிலைக் கடந்ததும் போலீஸின் தடுப்பை மீறி நின்றார். பிறகு மிக ஆவேசமாக பத்திரிகையாளர்களிடம் "இந்த பாசிச ஆட்சியை மக்கள் உதவியுடன் தூக்கி எறிவோம். எங்கள் தொண்டர்கள் எந்தச் சூழ்நிலையிலும் வன்முறையில் ஈடுபட மாட்டார்கள்" என்று கொதிக்கும் குரலில் முழங்கினார். கேள்வியெழுப்பிய பத்திரிகையாளர்களுக்குப் பதில் சொல்ல முடியாத வகையில் அவரைத் தள்ளிக் கொண்டு போனது போலீஸ். வேனில் ஏறிய பின் கை முஷ்டியை மடக்கி 'வெற்றி நமதே' என்று சைகை செய்தார் வைகோ. ம.தி.மு.க. தொண்டர்கள் கட்சிக் கொடியை உயர்த்திப் பிடித்து "அராஜகம் ஒழிக" என்று கோஷமிட்டார்கள். ஒரே தள்ளுமுள்ளு.

● இவ்வளவு பரபரப்பான விவகாரம் நடந்து கொண்டிருந்தபோது ஆண்டிகிளைமாக்ஸாக ஒரு போலீஸ்காரர் (பெயர் பாபு) தனியார் தொலைக்காட்சி காமிராமேன் ஒருவர் காலைத் தட்டிவிட்டு மிரட்ட, அது பெரிய பிரச்னையாகி விட்டது. ஏற்கெனவே கடுப்புடன் இருந்த பத்திரிகையாளர்கள் அந்த போலீஸ்காரர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தர்ணா செய்யத் துவங்கிவிட்டார்கள். அந்தப் போலீஸ்காரரை சப்தம் போடாமல், வெளியே தள்ளிச் செல்லப் பார்த்தது போலீஸ். ஆனால் அவர் மன்னிப்பு கேட்கும் வரையில் பத்திரிகையாளர்கள் விடவேயில்லை.

● நெல்சன் மண்டேலா, சேகுவாரா, ஆபரகாம் லிங்கன், சார்லஸ் டிகாலே ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களை வைகோ சிறைக்கு கொண்டு சென்றிருக்கிறார்.

— கௌசி

படங்கள் : ராஜன்



• திவ்யாஸ்ரீ

பொய் பேசாத வக்கீல்!

ரஜினி, கமல், விஜய்காந்த், சத்யராஜ், சரத்குமார் போன்ற சீனியர் ஹீரோக்கள், அஜித், விஜய், சூர்யா மாதிரியான அடுத்த நிலை ஹீரோக்கள் நீங்கலாக, (இந்தக் கட்டுரையை எழுதத் தொடங்கும் நேரம் வரை) தமிழில் புதிதாக அறிமுகமாகியிருக்கும் இளம் ஹீரோக்களைப் பட்டியல் போட்டதில் கிடைத்த கூட்டுத்தொகை ஐம்பத்தி ஆறு. நான்கு ஹீரோ, இரண்டு ஹீரோயின், ஒரு



• சத்தியமூர்த்தி, மம்ஸ், ரம்யா



● காலாட்படையில்

கல்லூரி அல்லது பள்ளி வளாகம் என்று தொற்று நோய் மாதிரி பரவி வரும் இளமைக் கூட்டணிப் படங்களின் எண்ணிக்கையினால்தான், தமிழ் சினிமாவுக்கு இத்தனை ஹீரோக்கள் கிடைத்திருக்கிறார்கள். சோழா கிரியேஷன்ஸ் தயாரிப்பில் ஜே. ரமேஷ் இயக்கி வரும் 'காலாட்படை' படத்தில் மட்டும் மொத்தம் எட்டு ஹீரோக்கள்!

ஒவ்வொரு ஹீரோவின் பெயரையும் தனித்தனியே ஞாபகம் வைத்துக் கூப்பிட்டு, இயக்குனர் எப்படி வேலை வாங்குவார்? என்று எண்ணும்போது தலை சுற்றுகிறது! ஆனால் பெரிய ஹீரோக்களின் கால் ஷீட்டிற்காக அலைந்து அலைந்து தலை சுற்றுவதைவிட இது எவ்வளவோ தேவலை என்கிறார்கள் பாதிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள்.



'சத்திய மூர்த்தி' பட பூஜைக்கு வெள்ளை வேஷ்டி வெள்ளைச் சட்டையில் வந்திறங்கிய மம்முட்டியின் கெட்-அப்பே மாறியிருந்தது. தலையில் கொஞ்சமாய் முடி, டிரிம் செய்யப்பட்ட தாடி மீசை... 'படத்தின் தலைப்பு வேறு சத்தியமூர்த்தி என்று இருக்கிறதே, என்ன காரசாரமான அரசியல் படமா?' என்றால் மம்முட்டியின் உதட்டோரம் புன்னகை கசிகிறது. "நடிகன்கிறதைத் தவிர நிஜ வாழ்க்கையில் நான் யாரோ, எப்படி இருக்கணும் என்று நினைத்தேனோ அந்த கேரக்டர்தான் இந்த படத்தில் எனக்கு."

"வழக்கறிஞராக பயிற்சிபெற வரும் ஒருவர், நிறைய பொய் சொல்ல வேண்டி வருகிறது. ஆனால் சொல்லாமல் கறுப்பு அங்கியின் கௌரவத்தைக் காப்பாற்றப் போராடுகிறார். அதில் ஜெயித்தும் காட்டுகிறார். இது முழுக்க முழுக்க நீதித் துறையில் நடக்கும் போராட்டம். துளிகூட அரசியல் இல்லை. இதுதான் சத்திய மூர்த்தியின் ஒரு வரிக் கதை." என்றார் இயக்குனர் அமுதேஷ்வர்.

நிஜ வாழ்க்கைகளில் மம்முட்டி ஒரு வழக்கறிஞர் என்பது கொஞ்சம் தாமதமாய்த் தான் மண்டையில் உறைத்தது!

மாடலிங் துறையிலிருந்து சினிமா. பிறகு சினிமாவிலிருந்து மாடலிங் என்று ஹோர்டிங்களில் சிரித்துக் கொண்டிருந்த கோவைத் தமிழ்ப் பெண் திவ்யாஸ்ரீயை

மறுபடியும் 'விக்ரம் தர்மா' படத்தில் பார்க்கலாமாம்.

"தெலுங்கு கன்னடம்னு கொஞ்சம் படங்கள் நடிச்சாலும், தமிழ்ப் படத்திலே நடிக்கிற சந்தோஷம் வர்லை... நான் அறிமுகமான 'பெண்கள்' படத்தை ரொம்பவே நம்பினேன். அப்புறம் 'சகி'... இரண்டுமே கைகொடுக்கலை. இனி சென்னையில் நிரந்தரமா தங்கி வாய்ப்பு தேடுறதுதான் முதல் வேலை. மாடலிங்கையும் விட மாட்டேன். அதுதான் என்னை வாழ வைக்குது" என்று தெளிவாக பேசும் திவ்யாஸ்ரீயின் பேச்சு வழக்கில் மருந்துக்குக்கூட கொங்கு தமிழ் வாசனை இல்லை!



• ஜங்ஷன். அபிநய். ஆம்னா.

'**து**ள்ளுவதோ இளமை' படத்தின் நாயகி ஷெரினுக்கு வாய்ப்புகள் குவிகின்றன என்பதைவிட கொட்டுகின்றன என்று சொல்லலாம். அப்படத்தின் திரைக்கதை அப்படியொரு விளம்பரம் தேடித் தந்துவிட்டது அவருக்கு! ஆனால் அதே படத்தில் இரண்டாவது ஹீரோவாக நடித்த அபிநய்க்கு ஏகப்பட்ட வாய்ப்புகள். "இது என்னோட நடிப்புக்குக் கிடைத்தவை." என்று விவரமாகப் பேசும் அபிநய்க்கு வயது வெறும் பத்தொன்பதாம்!

— ரவுண்ட்ஸ்பாய்

கல்கி

VBC Jewellery

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி முடிவு-20

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுவில் கையெழுத்து போடும் முன்பு, "5... 4... 3... 2... 1..." என்று, ராக்கெட் விண்ணில் ஏவப்படும் பாணியில் கூறிவிட்டுக் கையெழுத்திட்டார் அப்துல்கலாம். நம்ம லாலு பிரசாத் யாதவுக்கு இப்படியொரு வாய்ப்பு கிடைத்திருந்தால் அவர் என்ன சொல்லி கையெழுத்திட்டிருப்பார் என்று கேட்டிருந்தோம். தேர்வு பெற்று தலா நான்கு கிராம் பரிசு பெறும் இரண்டு கற்பனை பேச்சுகள் :

"ரா...ப்...ரி., தே...வி., ஸ்டார்ட்!"
(கையெழுத்திடுகிறார்)

அ. தமிழ்ச்செல்வி,
1-அ, அயன் தெரு,
சிதம்பரம் - 608 001.

"என் சிசுக்களும்
என் மாநிலத்தின் பசுக்களும்
நலமாக இருக்க வேண்டி
போட்டேன் நான்
கையெழுத்துப் போட்டேன்!"

எம்.ஐஸ்வர்யா,
C/o ஆர்.முரளி,
III, எஸ்.எஸ். காலனி,
ராம் நகர், 6வது தெரு,
மதுரை - 625 010.

நடிகர் திலகமே!

நடிப்பின் இமயமே!



சிவாஜியே!

தமிழகத்திற்கும் தமிழனுக்கும் பெருமைசேர்த்த ஒப்புயர்வற்ற கலைஞனே!

நீ, கலைவாணியின் கைவிரல் மீட்டும் வீணையின் நாதமாய் இழைந்து, கலந்து ஓராண்டு உருண்டோடிய இந்த வேளையில்...



வாய்த்த கலையை, உன்போல் ஆழ்ந்த பக்தியோடும், பற்றுதலோடும், ரசித்தும் கையாளுகின்ற அத்தனை கலைஞர்கள் சார்பாகவும் உலக முழுதும் வாழும் தமிழர்கள் சார்பாகவும் கண்ணீர் முத்துக்களோடு இதயக் கமலங்களையும் கோத்து அஞ்சலியாய் சமர்ப்பிக்கின்றோம்.

உன்புகழ் என்றும் ஓங்குவதாக.

உன்னை ரசித்துக் களித்த

பத்மவாசன்



வாழ்க்கைக்கு
மிக மிக
உபயோகமான
மணம்வீசும்
குணம் சேர்க்கும்
நலம் பயக்கும்
தொடர்.

கன்னியாகுமரி
கடற்கரையிலிருந்து
தவழ்ந்து
மிதந்து வருகிறது.
தயாராகுங்கள்



ரூ.10,000
பரிசு பெறும் கதை.
ரூ.1000 பரிசு பெறும்
தமாஷ் ஹைகூ

ஆண்டு மலராச்சே!

அப்படியே 'கெட் அப்' மாறுது!
ஆச்சரியமான மாறுதல் இருக்குது!
ஆஹா! கொண்டாட்டம்... டம்... டம்...

தேதி : 29, ஜூன்,
தெரு : ஆர்ச்சார்டு ரோடு,
ஊர் : சிங்கப்பூர்

ஸ்கூலுக்குப் போகும் மூன்றாவது வகுப்பு மாணவனைப் போல் அரைமனதுடன் வானம் தூறல் போட்டுக் கொண்டிருந்தது.

மரமும், நிழலும், தூறலும், அளவானத் தென்றலும், வர்ண வர்ண விளக்குகளும், கட்டிடங்களின் முன் முகப்பில் ஓடும் சினிமாக் களும்...... ம்ம்ம்...... ஒரு விதத்தில் ஒரு மாய உலகம்தான்.

கூடவே நடை போட்டுக் கொண்டு வந்த கணேஷ் கேட்டான்: "எப்

சிங்கப்பூரில் Mid - Year Sales... சென்னையில் ஆடித்தள்ளுபடி

படிப்பா? நான்கா வது கியர் கூட போட முடியாத நிலை யில் உள்ள இந்த சின்ன ஊரில் பார்ஷே, லெக்ஸஸ் என்று எத்தனை கார்கள்!" என்றான்.

நான் சொன்னேன்: "வேகமாகப் போவதற்கு என்று மட்டும் அந்தக் கார்களை வாங்க வில்லை. தன்னைக் கண்டு மற்றவரும் போட்டி யாளரும் மிரளவேண்டும் என்று கூட அந்தஸ்து – அடையாளம் – காட்டிகளாகவும் இந்த கார்கள் பயன்படலாம்" என்றேன்.

பஸ், கார் ஹாரன்களே கேட்காத ஊர், 60 அடி நீள இரட்டை பஸ்கள் யாரையும் பயமுறுத் தாமல் ஊர்ந்து கொண்டிருந்தன. பஸ்களின் பக்கவாட்டில் முழு நீள அகலத்திற்கு கலர் விளம்பரங்கள். தானியங்கி கதவுகள் திறக்கும் போது விளம்பரப்படம் விநோதமாக உடைந்து கொண்டிருந்தது.

எங்களது கண்கள் "MIDYEAR SALE" போர்டுகள்பட்டு நின் றன.



கணேஷ் கேட்டான்: "இந்த டிஸ்கவுண்ட் எப்படிப்பா முடியும்? நீங்க அடிக்கடி சொல்வீர் கள் 'A dignified loss is better than a dishonest gain' என்று. டிஸ் கவுண்ட்டுக்கு முன் னால் அப்ப எப்படிப் பட்ட gain இருந்தி ருக்கும்." நான் சொன்னேன்: "இது நடுத்தர வர்க்க வாடிக்கையாளர்களது மனதில் எழுகின்ற சராசரி உள் மன எதிர் நிகழ்வு. தேங்கிப் போன ஸ்டாக்கும், சோர்ந்து போன சேல்ஸும், வதங்க வைக்கும் பொருளாதாரப் பின்னடைவுகளும் வியாபாரிகளின் புதைமணல் தருணங்கள். தன்னையும் மார்க்கட்டையும் வேலையாட் களையும் மீண்டும் உயிர்ப்பிக்கிற முயற்சிகள் தான் இவை. தவறில்லை."

"டிஸ்கவுண்டில் லாஸ் வராதா?" என்றான்.

"லாபம் குறையும், நஷ்ட மும் வரலாம்...

ஆனாலும் பலப்பல கோடி பெறு மான ஸ்டாக், சுழலாமல் தேங்கி கிடப்பதைவிட, பரபரப்பான புது, சிறுகால சுழற்சி நல்லது. நானும், சென்னைக்குத் திரும்பியவுடன் ஆடித் தள்ளுபடி சேல்ஸ் போடுவேன். நம்ம ஊர் "MIDYEAR SALES" புன்னகையுடன் கணேஷ் சொன்னான்: ஐ அண்டர்ஸ்டாண்ட்"

தேதி : 15.7.2002
கடை : "ஸ்வர்ணாலயா ஜுவல்லரி"
இடம் : 5, பசுல்லா ரோடு, தி.நகர், சென்னை.

கடையின் First கியூபிகலில் அமர்ந்து 'ஸ்வர்ணா அட்வர்டைசிங்' விஷயமாக பிரபல நாளிதழின் அலுவலரிடம் வாடிக்கையாளரின் விளம்பரத்தினை ரிலீஸ் செய்து கொண் டிருந்தார் திரு. சுகுமாரன். சிரித்த முகத்துடன் வரவேற்று அடுத்த CUBICLE ல் அமர வைத்து விட்டு, அவர்களை அனுப்பிவிட்டு வந்தார்.

"எப்படி இருக்கிறீர்கள்" என்றார்.

"வணக்கம் சார். நன்றாக இருக்கிறோம்" என்றேன்.

அவர் சொன்னார், "நானும் பார்த்தேன். நிறைய விளம்பரங்கள் உங்கள் பத்திரிகையில் வருகின்றன. மார்க்கெட் சப்போர்ட் உங்களுக்கு நன்றாகவே இருக்கிறது."

"ஆடி..." என்று இழுத்தேன்.

"ஆடித்தள்ளுபடி சென்ற வருடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. பஜாரைவிட்டு அர்த் தத்துடன் தள்ளி இருக்கிற எங்கள் முகவரியும் பிரபலமானது. இந்த வருடமும், அதே உப சரிப்பும், அமைதியான சூழ்நிலையும், மயக்க

வைக்கும் தினுசுகளும், பெரும் பாலான பொருட்களுக்கு கூலி இல்லை என்கிற சலுகையும் குறைந்த சேதாரமும், வைரத்தில் காரட்டுக்கு ரூ. 2000/- தள்ளு படியும், SAN GOLD (மார்க்கட்டை பரபரப்புடன் கவர்ந்து கொண்ட அய்ட்டம்) வளையல்களுக்கும் 24கேரட் கோல்டு ஃபார்மிங் சிலைகளுக்கும் 10% சிறப்பு தள்ளுபடியும், பரிசுப் பைகளும், ப்ளவுஸ் பிட்டும், மஞ்சள் குங்குமத்துடன் மங்களமான டெலிவரியும் உண்டு, உண்டு'' என்றார்.



• சிங்கப்பூரில் MIDYEAR SALE

''ஏதோவொரு புதுமையிருக்கணுமே?'' என்றேன்.

''முதல் முறையாக white gold நகைகளை அறிமுகப்படுத்துகிறோம். பிளாட்டினம் மாதிரி ஆளை அசரவைக்கும் விலையில்லை. தங்க



விலைக்கே தருகிறோம், ஆடி மாதம் முழுவதும். SAMPLE சேல்ஸ் முயற்சியில் WHITE GOLDக்கு இவ்வளவு வரவேற்பிருக்கிறது என்று அசந்து போனோம். "WHITH GOLD & DIAMOND IS A SUPER COMBINATION" என்றார்.

மேலும் சொன்னார்; ''எங்களது நிறுவனம் WESTERN UNION அமெரிக்க நிறுவனத்துடன் சேர்ந்து, அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் தனது குடும்பத்துக்கு அனுப்பும் பணம் 10 நிமிடங்களுக்குள் கிடைக்கும் ஏஜென்ஸி ஆரம்பித்திருக்கிறோம். அவர்கள் அமெரிக்காவில் WESTERN UNION கிளைகளில் பணம் கட்டி விட்டு, அவர்களது குடும்பத்தினருக்கு போன் பண்ணி சொல்லிவிட வேண்டும். அடையாள எண் கொண்டு வந்து தந்த 10வது நிமிடம் எங்கள் Counter ல் பணம் தரப்படும்.

அதுபோக, எங்களது "FSBI" (Foreign Studies Bureau of India) நிறுவனம், Sydney, London, Cambridge University Degree Courses in Engineering Business, Commerce, Law, Accountancy, English Litt பட்டப் படிப்புகளுக்கு சிங்கப்பூரில் படிக்க ஏற்பாடு செய்கிறோம். சிங்கப்பூரிலேயே தேர்வு எழுதலாம். விரும்பினால் அந்தந்த நாடுகளுக்குச் சென்று பாதி படிப்பு படிக்கலாம். இது தவிர சிங்கப்பூரில் மற்ற எந்த கோர்ஸ் படிப்பவர்களுக்கும் ஏர்கண்டிஷன் ஹாஸ்டல் வசதி வாங்கித்தருகிறோம்'' என்கிறார்.

''வெரிகுட் சார், ஆடித்தள்ளுபடி, WHITE GOLD, டயமன் தள்ளுபடி, SANGOLD, WESTERN UNION

பணம் மாற்றும் வசதி, சிங்கப்பூரில் DEGREE COURSE... நிறைய செய்திகள்... போதும் சார்..

நன்றி'' என்று விடைபெற்றேன்.



கல்கி சந்தாதாரருக்குக் கொண்டாட்டம்!

★ ஓராண்டுச் சந்தா ரூ.330/- செலுத்துவோருக்கு (அயல்நாடு ரூ.2000 ஏர் மெயில்) இரு பரிசுகள் :

● ரூ.70 பெறுமானமுள்ள கல்கி வைர விழா மலர் 2002

● மற்றும் அதன் ஓர் அங்கமாக "சுபம்-சிவம்" - எம்.எஸ். அவர்களின் இன் குரலில் அற்புதமான பாடல்கள் அடங்கிய ஆடியோ கேஸட்!

★ இரண்டு ஆண்டுச் சந்தா ரூ.660/- செலுத்துவோருக்கு (அயல்நாடு ரூ.4000 ஏர் மெயில்) மூன்று பரிசுகள் :

● ரூ.70 பெறுமானமுள்ள கல்கி தீபாவளி மலர் 2002

● ரூ.70 பெறுமானமுள்ள கல்கி வைர விழா மலர் 2002

● மற்றும் அதன் ஓர் அங்கமாக எம்.எஸ். அவர்களின் இன் குரலில் அற்புதமான பாடல்கள் அடங்கிய ஆடியோ கேஸட்

★ குறிப்பிட்ட சில பிரதிகள் மட்டுமே சந்தாதாரர்களுக்காக இவ்வாறு ஒதுக்கப்படுகின்றன. எனவே மலர் ஸ்டாக் உள்ள வரைதான், இந்தத் திட்டத்தின்படி சந்தா தொகைகளை ஏற்க முடியும்.

★ முந்துங்கள். கடைசி தேதி ஜூலை 22, 2002.

★ ஏற்கெனவே சந்தாதாரராக உள்ளவர்களும் உடனடியாக சந்தா தொகை செலுத்தி இத்திட்டத்தால் பயன் பெறலாம். அவர்கள் சந்தா முடிவு தேதியிலிருந்து புதுப்பிக்கப்படும்.

★ DD அல்லது MO அனுப்பவும்.

★ வெளியூர் Cheques ஏற்கப்படமாட்டா.

★ ஏற்கெனவே சந்தாதாரராக உள்ளவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு எழுதவும்.

★ பின்கோடு உள்பட முழு விலாசம் தெளிவாக எழுதவும்.

★ 'கல்கி சந்தாதாரர் பரிசுத் திட்டம் 2002' என்று குறிப்பிடவும்.

★ DD, MO அல்லது Cheque (சென்னை மட்டும்) KALKI என்ற பெயருக்கு அனுப்பவும்.


★ அயல்நாட்டு சந்தாதாரருக்கு மலர் மற்றும் கேஸட் இந்திய விலாசத்துக்கு மட்டுமே அனுப்ப இயலும்.

★ நண்பர்கள், உறவினர்களுக்குப் பரிசாகவும் நீங்கள் சந்தா கட்டலாம். மலர், கேஸட் ஆகியன உங்கள் நண்பர், உறவினருக்கே அனுப்பப்படும்.

★ சந்தா தொகை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.







2002 ஜூலை 21
சித்ரபானு ஆடி 5
மலர் : 60
இதழ் : 51

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




துச்சமாகிறது உச்சநீதிமன்ற ஆணை!

இந்தியாவின் இருபத்தோரு கட்சிகள் இணைந்து, திருஷ்டி படுகிற ஒற்றுமையோடு இயங்கியிருக்கின்றன. தேர்தல் விதிகள் குறித்த உச்சநீதிமன்ற ஆணையை அமல்படுத்த முயன்ற தேர்தல் கமிஷனைத் தலையில் தட்டி அடக்கிவிட்டு, அவ்விதிகளை உள்ளடக்கிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் தாங்களே நிறைவேற்றுவதாகக் கூறியுள்ளன.

பொதுவாழ்வையும் அரசியல் சூழலையும் தூய்மைப்படுத்த உதவும் சட்டங்களின் கதி என்ன என்பது நமக்குத் தெரியாததல்ல. லோக்பால் மசோதா பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டு, மீண்டும் மீண்டும் விவாதிக்கப்பட்டு, சட்டமாகாமலே தூங்கிக் கொண்டிருக் கிறது.

தற்போது, உச்சநீதிமன்ற ஆணை காரணமாக அனைத்து கட்சிகளும் சேர்ந்து ஒரு சட்டமசோதாவை உருவாக்குவதாகக் கூறியுள்ளதால், அதில் தொய்வு ஏற்படாது என்றும் லோக்பால் மசோதாவைப் போல் அதைக் கிடப்பில் போட மாட்டார்கள் என்றும் எதிர்பார்க் கலாம்.

ஆயினும், சுப்ரீம் கோர்ட் ஆணையின் அடிப்படை நோக்கமே தோல்வியடையும் அளவுக்கு அதை நீர்த்துப் போகச் செய்ய அரசியல்வாதிகளால் முடியும். அவ்வாறு செய்வதில் அனைத்து



அரசியல் கட்சிகளும் பிரமிக்கத்தக்க ஒற்றுமை காட்டும் என்றும் நம்பலாம்.


உச்சநீதிமன்ற ஆணை என்ன சொல்கிறது? தேர்தலில் நிற்கும் வேட்பாளர், தமது வேட்பு மனுவுடன் கல்வித் தகுதி, சொத்து விவரங்கள், கிரிமினல் வழக்குகள் இருக்குமாயின் அவை குறித்த விவரங்கள் ஆகியவற்றை இணைக்க வேண்டும் என்கிறது. வாக்காளர்கள் இத்தகவல்கள் அறிய உரிமை பெற்றவர்கள்: அவ்வுரிமையை மதிக்கும் வண்ணம் தேர்தல் விதிகள் திருத்தப்பட வேண்டும் என்கிறது. இத் திருத்தம் கொண்டுவர ஒரு கெடு தேதியையும் (ஜூலை 6) அறிவித்தது உச்சநீதி மன்றம்.

அரசோ எதிர்க்கட்சிகளோ இந்த உத்தரவையும் கண்டு கொள்ளவில்லை; கெடு தேதி குறித்தும் கவலைப்படவில்லை. வேறு வழியின்றி, தேர்தல் கமிஷனே உச்சநீதிமன்ற ஆணையை அமல்படுத்த முயன்றபோதுதான் அனைத்துக் கட்சிகளும் வரிந்து கட்டிக் கொண்டு ஆட்சேபித்திருக்கின்றன. கெடு தேதி முடிந்து இரு நாட்களுக்குப் பிறகு சர்வ கட்சிக் கூட்டம் நடந்திருக்கிறது.

இந்த ஆட்சேபனையும் அலட்சியமும் தாமதமும் தேர்தல் சீர்திருத்தத்தில், எந்தக் கட்சிக்கும் அக்கறையில்லை என்பதையே உணர்த்துகிறது. அனைத்து கட்சிகளிலும் கறை படிந்த கரங்கள் உள்ளதால் அனைவரையுமே பயம் பிடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலைமையில், உச்சநீதிமன்ற சிபாரிசுகளைத் தாங்களே ஒரு சட்ட முன்வடிவாக்கி பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்துவதாகக் கூறும் அரசியல்வாதிகளை நாம் எவ்வளவு தூரம் நம்ப முடியும்? அவர்களுள், ஒவ்வொருவருமே அச்சட்டத்துக்கு வலு தரப்படக்கூடாது என்கிற நோக்கில்தான் செயல்படுவார்கள்!

தேர்தல் சீர்திருத்தச் சட்டங்களைத் தாங்கள் விரும்பவில்லை என்று கூறாமல், உச்சநீதி மன்றமும் தேர்தல் கமிஷனும் தங்கள் அதிகார எல்லைக்குள் தலையிடுவதாக எம்.பி.க்கள், அரசியல்வாதிகள் கூறுவது பிரச்னையிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் முயற்சிதான்.



அரசிலையும் பொதுவாழ்வையும் தூய்மைப்படுத்தக்கூடிய தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டுவர இதுவரை எந்த அரசும் முனையவில்லை. இதற்கிடையே, அரசியலில் லஞ்ச - ஊழல் மட்டுமின்றி, இதர குற்றங்களும் புகுந்துவிட்டன. கிரிமினல் விசாரணைகளைச் சந்திப்போர், தீர்ப்பு வெளியாகாத நிலையில் எம்.பிக்களாக, எம்.எல்.ஏக்களாக இயங்கி வருகின்றனர். அரசியலையும் ஜனநாயகத்தையும் குற்றமயமாக்கும் இத்தகைய அநீதிகளைத் தொடர்ந்து அனுமதிக்கக் கூடாது என்ற நோக்கில்தான் உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

ஜனநாயக அமைப்பில் சட்டம், நீதி, நிர்வாகத் துறைகள் மூன்றுமே மக்கள் நலனுக்காகத்தான் இயங்குகின்றன. ஒன்றின் எல்லைக்குள் மற்றொன்று குறுக்கிடலாகாது என்றாலும் மக்கள் நலன் புறக்கணிக்கப்படும்போது, அவை ஒன்றையொன்று கண்காணித்து நெறிப்படுத்தித்தான் ஆகவேண்டும். அதற்காகத்தான் அவற்றுக்குத் தனித்தனியே இயங்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் கமிஷனும் தனி அதிகாரமுள்ள அமைப்பாக நிறுவப்பட்டிருக்கிறது.

"சட்டம் இயற்றுவது நீதிமன்றத்தின் வேலை அல்ல... அது நாடாளுமன்றத்தின் வேலை; இதை உச்சநீதிமன்றமே ஒரு தீர்ப்பில் கூறியிருக்கிறது" என்கிறார் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சட்ட அமைச்சர் ஜனா கிருஷ்ணமூர்த்தி.

இந்த வாதம் நிர்வாகச் சட்டங்களுக்குப் பொருந்தும்; மக்கள் நலனைக் காக்க, அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கோரவும், வலியுறுத்தவும் எந்த அமைப்புக்கும் உரிமை உண்டு. அதற்குச் செவி சாய்க்கும் பொறுப்பும் கட்டாயமும் அரசுக்கு உண்டு.

அந்தப் பொறுப்பைத் துச்சமாக மதிப்பதில் அத்தனைக் கட்சிகளும் காட்டுகிற ஒற்றுமையே நம்மைப் பயமுறுத்துகிறது. உச்சநீதிமன்றத்தின் ஆணை எவ்வளவு அவசியமானது, நியாயமானது என்பதற்குச் சாட்சி கூறுகிறது. ○

திருப்பூர் கிருஷ்ணன்



எழுத்து உருவாகிறது...

• காஞ்சனா

எழுத்தாளர்கள் இயங்கும் விதங்கள் பல வகை. தொடர்கதையை வாரந்தோறும் எழுதி அனுப்புபவர்கள் உண்டு. மொத்தமாக எழுதிக் கொடுப்பவர்களும் உண்டு. பி.வி.ஆர். வாரந் தோறும் எழுதுபவர். வாராவாரம் மிகச் சரியாக ஒரு குறிப்பிட்ட நாளன்று அவர் அத்தியாயம் அலுவலகம் தேடி வந்து விடும். 'அரை வெள்ளைத் தாளில்' அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதி அனுப்பவார். எத்தனை வாரங்கள் என்று முன்கூட்டிப் பேசிக் கொண்டாரோ, சரியாக அத்தனை வாரங்களில் கதையை முடித்து விடுவார். 'என் பெயரைச் சற்றுப் பெரிதாக வெளியிடலாமே? ஓவியத்தை இந்த வாரம் ஏன் சின்னதாக வெளியிட்டீர்கள்?' என்பது போன்ற அநாகரிகமான கேள்வியையெல்லாம் அவர் ஒருபோதும் கேட்டதில்லை. பத்திரிகையின் உரிமையிலும் சுதந்திரத்திலும் அவர் தலையிட்டதே இல்லை.

சில பிரபல எழுத்தாளர்கள் இத்தகைய கேள்விகளையெல்லாம் இப்போது கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். இதெல்லாம் பத்திரிகையின் பொறுப்பு என்பதையோ, அதன் ஆசிரியரும் துணையாசிரியர்களும் எத்தனையோ சிரமங்களுக்கு இடையில் பத்திரிகையைக் கொண்டு வருகிறார்கள் என்பதையோ அவர்கள் அறிவதில்லை. வாரப் பத்திரிகை என்பது வாரந்தோறும் ஒரு கல்யாணம் நடத்துவது மாதிரி. ஓர் எழுத்தாளர் தன் எழுத்தைப் பற்றி மட்டும்தான் கவனிக்கிறார். ஆனால் ஒரு பத்திரிகை ஆசிரியர் அந்தப் பத்திரிகையில் இடம் பெறும் எல்லா எழுத்துகளுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும். பூத் தொடுப்பது மாதிரி கவனமாக ஒரு பத்திரிகையைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. பத்திரிகைகளில் பணிபுரிபவர்களின் பெரிய பிரச்னையே புகழ் வேட்கை கொண்ட பிரமுகர்களின் தொலைபேசித் தொல்லை தான்.

ஆர்.வி, பி.வி.ஆர் இருவருக்கும் ஒரு பெருமை உண்டு. அவர்கள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரே நேரத்தில் ஆறு பத்திரிகைகளில் தொடர்கதை எழுதியிருக்கிறார்கள். அசாதாரணமான சாதனை இது. ஒரு சரியான வேலை ஒழுங்குக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டால்தான் இவ்விதம் இயங்க இயலும்.

ர.சு. நல்ல பெருமாள், ராஜம் கிருஷ்ணன் போன்றோர் தொடர்கதைகளை முழுவதுமாக எழுதி அனுப்பிவிடுவார்கள். லட்சுமி வாரா வாரம் எழுதியவர். கதிரில் 'மங்களாவின் கணவன்' என்றொரு தொடர் எழுதினார். மாருதியின் ஓவியங்களோடு வெளி வந்த அந்தத் தொடர் பலத்த வரவேற்பைப் பெற்றது. லட்சுமியுடன் தொலை பேசியில் பேசும்போது சொந்த சகோதரியுடன்



• பி.வி.ஆர்



• லட்சுமி

பேசுவதுபோல் தோன்றும். பந்தா கிடையாது அவரிடம் ('என்ன திருப்பூர், ஒருதடவைகூட நீங்க என் சமையலைச் சாப்பிட்டதே இல்லியே? இன்னிக்கு மிளகு ரஸம், வாசனை ஃபோன் வழியா வறதா?') வாஸந்தி, சிவசங்கரி, இந்துமதி, அனுராதா ரமணன் எல்லோரும் வாராவாரம் எழுதி அனுப்புபவர்கள்தான்.

தி. ஜானகிராமன் கதிரில் எழுதிய படைப்புகளின் பல அத்தியாயங்கள் கதிர் அலுவலகத்திற்கே வந்து எழுதியவை. கதிர் ஆசிரியர்களான சாவி, நா.பா, கஸ்தூரிரங்கன் எல்லோருமே தி.ஜா. ரசிகர்கள். 'செம்பருத்தி, அபூர்வ மனிதர்கள்' ஆகிய தொடர்களை அவர் கதிரில் எழுதினார். அவர் படைப்புகள் சுடச் சுடக் கையெழுத்துப் பிரதியாகத் தயாராகும்போதே, அவர் பக்கம் பக்கமாக எழுத, எழுத, அவர் பக்கத்தில் அமர்ந்து வாங்கி வாசித்து மகிழ்ந்திருக்கிறேன். 'எப்படி அலுவலகச் சூழலில், இரைச்சல்களுக்கு மத்தியில் எழுதுகிறீர்கள்?' என்று கேட்டால், 'உள்ளே இரைச்சல் இல்லாமல் இருந்தால் போதும்' என்று நெஞ்சைத் தொட்டுக் காண்பிப்பார். நீங்கள் மறுபடி ஏதாவது எடிட் செய்ய வேண்டுமா?' என்று கேட்டால் தம் தலையைத் தொட்டுக் காண்பித்து 'இங்கே ஏற்கெனவே எடிட் ஆகிவிட்டது!' என்பார். தோளில் ஒரு ஜோல்னாப் பை. வாயில் வெற்றிலை பாக்கு. மலர்ந்த முகம். அவரைப் போல் தன்னடக்கம் நிறைந்த மனிதர்கள் மிகக் குறைவு. 'அபூர்வ மனிதர்கள்' என்ற தலைப்பில் கட்டுரைத் தொடர் எழுதிய தி.ஜா.வே ஓர் அபூர்வ மனிதர்தான்.

ஜெயகாந்தன், அத்தியாயங்களை அனுப்பும் விதமே தனி. முதலில் ஒரு நாலுபக்கம் அனுப்புவார். பின் திருத்துவதற்காக ப்ரூஃபைத் தமக்கு அனுப்பச் சொல்வார். அச்சுப் பிழையைத் திருத்துவதோடு கூட, கொடி கட்டின மாதிரி பக்கத்தின் இரண்டு ஓரங்களிலும் வார்த்தைகளைச் சேர்த்துச் சேர்த்து, எழுதின விஷயத்திற்கு மெருகேற்றுவார். இறுதியில் அது மூலப் பிரதியைப் போல் நீளத்தில் சுமார் இரு மடங்காகிவிடும். தொடர்ந்து செய்யும் நுணுக்கமான வேலைப்பாடுகளால் சிற்பம் அழகு கூடுவது போல், எழுத்தை மெருகேற்றும் ரசவாதம் ஜெயகாந்தனுக்குக் கைவந்த கலை.

எப்போதும் கதைகளை டைப் செய்து அனுப்பும் ஜோதிர்லதா கிரிஜாவின் பெண்ணியம் பேசும் கதைகள் ஒரு தனி டைப்! கணிப்பொறி எழுத்தாளர்களில் சுஜாதாதான் முன்னோடி. இப்போது மாலன், இரா. முருகன் வெளிநாட்டிலிருந்து எழுதும் காஞ்சனா தாமோதரன் போன்ற பலர் கணிப்பொறி மூலம் எழுதுகிறார்கள். (கணிப்)பொறியில் சிக்கும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை கூடி வரும் காலம் இது! நானும் சில ஆண்டுகளாகக் கணிப்பொறி மூலமாகவே இயங்குகிறேன். கணிப்பொறி என்பது விஞ்ஞானம் எழுத்தாளனுக்கு அருளியுள்ள வரம். அதன் மூலம் எழுதும்போது கிட்டும் வசதிகள் ஏராளம். முக்கியமாக, எழுதிய பிறகு எழுத்துக்கு மவுஸ் ஏற்படுவது ஒருபுறமிருக்க, எழுதும்போதே மவுசுடன் எழுதுவது ஒரு தனி விசேஷமல்லவா!



அக்தர்!

"அக்தரின் பந்து வீச்சு சிறப்பாக இருக்கிறது. சரியான இடத்தில் விரைவாக அவர் வீசும் பந்து விக்கெட்டை காலி செய்கிறது. நூற்றி ஐம்பது கிலோமீட்டர் வேகத்தில் (மணிக்கு 94 மைல்) பந்து வீசும்போது அதை எதிர்கொள்வது ஆட்டக்காரர்களுக்குச் சிரமம்தான். அக்தரிடம் அந்தத் திறமை இருக்கிறது. ஆனால் அவரை எப்படிச் சமாளிப்பது என்பதை நாங்கள் கண்டுபிடித்துவிட்டோம்."

— ரிக்கி போண்டிங்

ஒரு மாத நாவல் வெளியீட்டில் நடந்த உண்மைச் சம்பவம் இது. மர்மக் கதாசிரியர் ஒருவரின் நாவல், அச்சில் 96 பக்கம் வர வேண்டும். ஆனால் 86 பக்கங்களிலேயே நாவல் முடிந்துவிட்டது. நீளம் அதிகமாக இருந்தால் எடிட் செய்யலாம். நீளம் குறைவாக இருக்கும் போது என்ன செய்வது? ஒரு பத்துப் பக்கம் வேண்டுமே என்று கதாசிரியருக்கு ஃபோன் செய்யப்பட்டது. அன்றிரவே வெளிநாடு போகும் அவசரம் அவருக்கு. கதையை இடையே கொஞ்சம் வளர்த்தி எழுதிக் கொடுக்க அவருக்கு நேரமில்லை. ஓரிரு நாள் காத்திருக்கப் பத்திரிகைக்கு அவகாசமில்லை. அவர் ஒரு யுக்தி செய்தார். ஏற்கெனவே வெளியான தம் பத்துப் பக்கச் சிறுகதை ஒன்றை அனுப்பினார். நாவலின் கதாநாயகி ஒரு வார இதழை வாங்கி, அதில் வெளியான ஒரு கதையை வாசிப்பதாக சில வரிகளைச் சேர்க்கச்சொன்னார். சிறுகதையை அப்படியே அந்த இடத்தில் முழுமையாகப் பிரசுரித்து, பிறகு நாவலின் இறுதிப் பகுதியை வெளியிட்டு நாவலை முடிக்கச் சொன்னார். அவ்விதமே செய்யப்பட்டது. அந்த மர்ம நாவலில் எல்லா மர்மங்களும் துப்புத் துலக்கப்பட்டிருந்தன. ஆனால் தொடர்பில்லாமல் ஒரு சிறுகதை ஏன் இடையே திடீரென இடம் பெற்றது என்ற மர்மம் மட்டும் வாசகர்களுக்கு இறுதிவரை விளக்கப்படவே இல்லை!

(தொடரும்)

காஷ்மீர்



• மசூத் அசார்

இந்தியாவில் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது ஜம்மு காஷ்மீரில் வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகம்தான். ஆனால் பலரும் நினைப்பதுபோல் அது முஸ்லிம்கள் மட்டுமே வாழும் மாநிலமல்ல.

64 சதவிகிதம் முஸ்லிம்கள், 33 சதவிகிதம் இந்துக்கள். புத்தமதத்தினர், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் மீதமுள்ள மூன்று சதவிகிதத்தில் இருப்பவர்கள்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இயற்கைச் சூழலின்படி மூன்றாகப் பிரிக்கலாம். பல மலைப்பகுதிகள் அமைந்த லடாக், மாநிலத்தின் 58 சதவிகிதத்தை ஆக்கிரமித்துக்கொள்கிறது. ஆனால் இதில் வசிப்பவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. இவர்கள் லடாக்கி, பாலி

ஜி.எஸ்.எஸ்

6



ஆகிய மொழிகளைப் பேசு கிறார்கள். ஜம்முவின் பரப்பளவு 26 சதவிகிதம், மாநிலத்தின் 45 சதவிகிதம் பேர் இங்கே வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் டோக்ரி என்ற மொழிப்பிரிவைப் பேசுபவர்கள்.

வெறும் 16 சதவீதம் பரப்பு கொண்டதுதான் காஷ்மீர். ஆனால் மாநில மக்கள் தொகையில் 52 சதவீதம் பேர் இந்தச் சிறிய பகுதிக்குள்தான் வசிக்கிறார்கள். இவர்களில் பலரும் பேசுவது காஷ்மீரி மொழி. குஜாரி, பஹாரி போன்ற மொழிகளைப் பேசுபவர்களும் ஜம்மு காஷ்மீரில் கணிசமாக உண்டு. இன்றைய சூழலில் காஷ்மீரில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தினால் அதன் முடிவு என்னவாக இருக்கும்?

பொதுவாகவே முஸ்லிம் அல்லாதவர்கள் பாகிஸ்தானோடு தாங்கள் இணைவதை விரும்ப மாட்டார்கள். காரணம் பாகிஸ்தான் தன்னை ஒரு முஸ்லிம் நாடாகவே தனது அரசியல் அமைப்புச் சட்டப்படி பிரகடனப் படுத்திக் கொண்ட நாடு என்பதால் பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகவே நடத்தப்படுவார்கள். ஒரு தொகுதியின் மக்கள் அத்தனைப் பேரும் விரும்பினாலும் கூட முஸ்லிம் அல்லாத ஒருவர் அந்தப் பகுதியின் அதிகாரபூர்வ பிரதிநிதியாக ஆக முடியாது. அந்த அளவு கடுமையானச் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன அங்கு.

லடாக்கில் உள்ள புத்த மதத்தினர் இந்தியாவோடு இணைவதையே நிச்சயம் விரும்புவார்கள். ஜம்மு பகுதியில் இந்துக்கள் அதிகம். ஆனால் அதன் வடக்குப் பகுதியில் உள்ள





சில பிரிவனர் 'ஆஜாத் காஷ்மீருடன்' இணையத் துடிக்கிறார்கள்.

அதேசமயம் ஜம்மு மற்றும் லடாக் பகுதியில் வசிக்கும் முஸ்லிம்களில் பலரும் கூட இந்தியாவுடன் இணைந்திருப்பதையே விரும்புகிறார்கள். ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில் இந்த ஆதரவை வெளிப்படையாகக் காட்டியிருக்கிறார்கள் அவர்கள்.

காஷ்மீரில் வசிக்கும் முஸ்லிம்கள் அனைவருமாவது பாகிஸ்தான் ஆதரவாளர்களாக இருக்க மாட்டார்களா? பெரும் சந்தேகம். காரணம் இவர்களில் 13 சதவிகிதத்தினர் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள். "யார் பெரியவன்?" என்ற மோதலில் பல காலமாக ஈடுபட்டு வருகின்றன முஸ்லிம் மதத்தின் இரு பெரும் பிரிவுகளான ஸுன்னியும் ஷியாவும். பாகிஸ்தான் அரசு தொடர்ந்து ஸுன்னி பிரிவினரின் கைகளிலேயே இருந்து வந்திருக்கிறது. இந்த நிலையில் பாகிஸ்தானோடு இணைய ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள் முன் வர மாட்டார்கள்.

காஷ்மீரில் சில நாடோடிப் பிரிவினர் உண்டு. குஜர் அல்லது பகர்வால் ஆகிய பிரிவைச் சேர்ந்தவர்களாக இவர்கள் பெரும்பாலும் இருப்பார்கள். இந்திய ராணு

வத்துக்கு ஆதரவு கொடுப்பவர்கள் இவர்கள். சொல்லப் போனால் "காஷ்மீர் தீவிரவாதிகள் குறித்து இந்திய ராணுவத்துக்குத் துப்பு கொடுக்கிறார்கள்" என்று குற்றம் சாட்டி (இதில் பெரும்பாலும் உண்மையிருக்கிறது) பாகிஸ்தான் ராணுவம் இவர்களை மிகக் கொடூரமாக நடத்துவது வழக்கம். எனவே இந்த நாடோடிப் பிரிவினர் இந்தியாவின் பக்கமே நிற்பதற்கு வாய்ப்பு மிக அதிகம்.

காஷ்மீரில் பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஸுன்னி முஸ்லிம்கள் கணிசமாக உண்டு. இந்தியாவை விட்டு காஷ்மீர் பிரிய வேண்டும் என்பதில் வெறி கொண்ட இவர்கள் காஷ்மீரில் நடக்கும் கலவரங்கள் பலவற்றிற்கும் துணை போகிறார்கள்.

காஷ்மீரில் கருத்துக் கணிப்பு எனும் போது வேறு சிலவற்றையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

சில லட்சம் இந்துக்கள் மாநிலத்தின் கலவரங்கள் காரணமாக காஷ்மீரை விட்டு வெளியேறி பல்வேறு பகுதிகளில் வசிக்கிறார்கள். கணிப்பில் இவர்களையும் இணைத்துக் கொள்வதுதானே நியாயம்? தவிர, எந்த அடிப்படையில் கருத்துக் கணிப்பை நடத்துவது? 'நீங்கள் இந்தியாவில் சேர விரும்புகிறீர்களா? பாகிஸ்தானுடன் சேர ஆசையா? அல்லது காஷ்மீர் தனி நாடாக விளங்க வேண்டும் என்கிறீர்களா?" இப்படியொரு கேள்வியை எழுப்பி கருத்துக் கணிப்பை நடத்தினால், அது இந்தியாவுக்குத்தான் சாதகமாக இருக்கும். காரணம் காஷ்மீர் தனி நாடாக வேண்டும் என எண்ணும் முஸ்லிம்கள் வாக்குகளைப் பிரிப்பார்கள்.

ஆனால் காஷ்மீர் தனி நாடாவதற்கு வாய்ப்பில்லை. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு தரப்பினருமே இதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

"அரசியல்வாதிகளே முழுக்க முழுக்க நடித்து, இயக்கி, ஓடற இரண்டு மெகா தொடர் சொல்லு பாக்கலாம்..."

"தெரியலையே..."

"பாராளுமன்ற கூட்டத் தொடர், சட்ட மன்ற கூட்டத் தொடர்!"

- சித்ரா கிருஷ்ணமூர்த்தி



இந்த நிலையில் "இந்தியாவா? பாகிஸ்தானா?" என்ற கேள்வியை முன் வைத்தால் என்ன ஆகும்?

உருவானபோது இருந்த ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் 12.80 மில்லியன் மக்களுள் (தற்போது இந்தியாவின் வசம் உள்ள) ஜம்மு காஷ்மீரில் வசிப்பவர்கள் 8.5 மில்லியன் பேர். ஆஜாத் காஷ்மீரில் வசிப்பவர்கள் வெறும் 2.8 மில்லியன் பேர்தான். இந்தியாவுக்கு 6.6 மில்லியன், பாகிஸ்தானுக்கு 6.2 மில்லியன் என்கிற அளவில் வாக்குகள் பிரியும் என்கிறது ஒரு அதிகாரபூர்வமற்ற சாம்பிள் கருத்துக்கணிப்பு. இதுபோன்ற கணிப்புகள் துல்லியமாக இருக்க வாய்ப்பில்லைதான்.

மன்னர் ஹரிசிங் ஆண்டு வந்த பகுதிதான் ஜம்மு காஷ்மீர் என்பதால், பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள (ஆஜாத் காஷ்மீர் என்று குறிக்கப்படும்) பகுதியும் சேர்ந்ததுதான் ஜம்மு காஷ்மீர் என்றாகிறது. ஆஜாத் காஷ்மீரில் உள்ளவர்கள் நிலை என்ன?

காஷ்மீரில் இந்தியா வசம் உள்ள பகுதியில் படித்தவர்கள் 59 சதவிகிதம் இருக்கிறார்கள். பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் படிப்பறிவு உள்ளவர்கள் 44 சதவிகிதம் மட்டுமே. சராசரி வருமானம், சிசு மரண தடுப்பு, தகவல் தொடர்பு, ரயில் வசதி என்று எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இந்தியா வசம் உள்ள காஷ்மீர்தான் முன்னணியில் உள்ளது. ஆஜாத் காஷ்மீரில் ஆராய்ச்சி பட்டம் பெற்ற ஐயாயிரம் பேரில் 4500 பேர் இஸ்லாமிய கல்வியில் மட்டுமே ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது ஜம்மு காஷ்மீரில் ஆராய்ச்சி மேற்படிப்பு செய்து முடித்த 75,000 பேர்களில் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் அறிவியல் துறையில் அந்தச் சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

தீவிரவாதம் மிகவும் தலை தூக்கி வருகிறது ஜம்மு காஷ்மீரில். ஆனால் பிடிபட்ட தீவிரவாதிகளின் பின்னணியைப் பார்க்கும் போது மேலும் ஒரு அதிர்ச்சிகரமான தகவல். இவர்களில் எழுபது சதவிகிதம் பேர் காஷ்மீரிகள் அல்ல. அரேபியர்கள், பாகிஸ்தானியர்கள், செசன்யாவைச் சேர்ந்தவர்கள் என்று பட்டியல் நீள்கிறது.

1989ல் முன்னணியில் இருந்த தீவிரவாதம் இயக்கம், ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கம் என்பதாகும். பாகிஸ்தான் மட்டுமல்ல, ஆப்கானிஸ்தானின் பெரும் ஆதரவும் இது போன்ற அமைப்புகளுக்கு இருக்கிறது. ஆனால் ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கத்துக்குத் தான் அளித்த ஆதரவைக் குறைத்துக் கொண்டு விட்டது பாகிஸ்தான். அதற்குப் பதிலாக ஹிஸ்புல்

முஜாஹிதின் என்ற இயக்கத்து பெரும் உதவிகளைச் செய்து வருகிறது. காரணம் ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கம் பாகிஸ்தானோடு இணைவதைவிட, தனி நாடாக காஷ்மீர் உருவாவதிலேயே குறியாக இருப்பதும், முஸ்லிம்கள் அல்லாதவர்களையும் தனது உறுப்பினர்களாகக் கொண்டிருந்ததும்தான்.

ஐக்கிய ஜிகாத் கவுன்ஸில் என்பதன் தலைமையகம் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில்தான் இருக்கிறது. சென்ற டிசம்பர் பதிமூன்றாம் தேதி நம் பாராளுமன்றத்தைத் தாக்கியதில் ஜெய்ஷ்-இ-முகமத் மற்றும் லஷ்கர் - இ - தொய்பா ஆகிய அமைப்புகளுக்கு முக்கிய பங்குண்டு. ஜெய்ஷ்-இ-முகமத் அமைப்பின் தலைவன் மௌலானா மசூத் அசார். டிசம்பர் 99 அன்று இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டதல்லவா? அப்போது பயணிகளின் மீட்புக்காக சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தீவிரவாதிதான் இவன். பாகிஸ்தான் மதவாதிகளின் பெரும் ஆதரவு இந்த அமைப்புக்கு இருக்கிறது.

லஷ்கர் - இ - தொய்பா கார்கில் ஊடுருவலில் முக்கிய பங்கு வகித்த ஓர் அமைப்பு. ஜம்மு காஷ்மீரில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இஸ்லாமிய ஆட்சியை நிறுவுவதே இதன் நோக்கம். செங்கோட்டை தாக்கப்பட்ட நிகழ்ச்சியிலும், பால் தாக்கரே கொலை முயற்சியிலும் இந்த அமைப்புக்குப் பங்கு உண்டு.

மன்னர் ஹரிசிங் இந்தியாவில் இணையக் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை மட்டுமல்ல, தான் இந்தியாவுடன் செய்து கொண்ட சிம்லா ஒப்பந்தத்தையே மதிக்கத் தயாரில்லை பாகிஸ்தான். சிம்லா ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனையான 'காஷ்மீர் பிரச்னையை இரு தரப்பினரும் மட்டுமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்' என்பதைக் காற்றில் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார் முஷாரஃப். பாகிஸ்தானின் நடவடிக்கை நிஜமாகவே 'எல்லை மீறிப்' போய்க் கொண்டிருக்கிறதுதான்.

அதற்கு முக்கிய காரணம் தங்கள் நாட்டில் பலவித பொருளாதாரப் பிரச்னைகள் என்கிற நிலையில் பாகிஸ்தானை ஒன்றிணைக்கும் சக்தி காஷ்மீருக்குத்தான் உண்டு என்பது பாக். அரசியல்வாதிகளின் எண்ணம். அதன் காரணமாகவும் அவர்கள் காஷ்மீரை அல்லது குறைந்தபட்சம் அது குறித்த விவாதத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

ஆக அமைதியான காஷ்மீர் என்பது குறைந்தது சில வருடங்களுக்காவது ஒரு பகல் கனவுதான்.

(முற்றும்)

கல்கி

VBC Jewellery

House of Vummidi

• 78, G.N.Chetty Road, **Vani Mahal Circle,** (Opp. Hotel Residency), T.Nagar, Chennai - 600 017. ✆ : 8229556, 8229560

• 11-B, Nageswara Rao Road, **Panagal Park,** T.Nagar, Chennai - 600 017. ✆ : 4342407, 4346297

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!


நச் கமெண்ட்!

கர்நாடகம் இப்படி டபாய்க்கிறதே தண்ணீர் தராமல்! கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவுக்கு அட்வைஸ் பண்ணுவதுபோல் சிரிப்பூட்டும் 'நச்' கமெண்ட் அனுப்பலாமே. அசத்தல் கமெண்ட்டுகள் இரண்டுக்கு தலா நான்கு கிராம் தங்கம் பரிசு

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

புன்னகைப் போட்டி - **23**
என்று குறிப்பிட்டு
முகவரியைக் குறிப்பிடுங்கள்.
தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.
கடைசி தேதி : **29.7.2002**

ஆசிரியர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.



பொய்யில் பூத்த நிஜம்

மெல்லிய நீல நிற விளக்கொளியில் அந்தப் பச்சைநிற அறைத் தடுப்புகள் பிரும்மாண்ட கவர்களைப் போன்ற பாவனையை ஏற்படுத்தின. அந்த கவருக்கப்பால் இருக்கும் உலகம் தனக்குத் தெரியாது என்ற கவலை அவனை அரித்தது. சின்ன வயதில் வாகனங்கள் விரையும் சாலையைக் கடக்க பயந்து, அப்பா அல்லது அம்மாவின் விரலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நடந்தது நினைவுக்கு வந்தது. இப்பவும் அந்த நிலைக்குத்தான் ஆளாகிவிட்டது போல அவனுக்குப் பீதி ஏற்பட்டது. இரவு நேரத்தில் நீல விளக்கின் கீழ் ஒரு நாற்காலியிலோ ஸ்டூலிலோ வழக்கமாக வந்து அமரும் அந்த இளைஞன், ப்ரூஸ் வில்லிஸை ஞாபகப்படுத்திய கதிர் என்ற பெயர் கொண்டவன் நேற்றிலிருந்து காணும். நர்ஸைக் கேட்கத் தயக்கமாக இருந்தது. அப்படி ஒரு ஆளே இல்லை, எல்லாம் உன் பிரமை என்று அவன் சொல்லலாம். உன் மனைவி நான் என்று சொன்ன பெண்ணும் காணும். உண்மையிலேயே தன்னுடைய பிரமைகள் அகலும் அறிகுறியாக இது இருக்கக்கூடும் என்று அவன் நம்ப ஆசைப்பட்டான். ஆனால் அவை வெறும் பிரமையில்லை என்று இரண்டு நாட்களாக வலுவாகத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

இரண்டு நாட்களாக வார்டை ஒட்டிய தாழ்வாரத்தில் சற்று நடக்க ஆரம்பித்த பிறகு வாழ்வின் சில, பல தருணங்களை, கணிசமான அதன் அனுபவங்களை, எந்தத் தாழ்வாரத்திலேயோ தொலைத்துவிட்ட மாதிரி அவனுக்குப் புலப்பட ஆரம்பித்திருந்தது. அறைவாயிலின் இடது கோடியில் ஒரு மேஜை போட்டு ஒரு நர்ஸ் அமர்ந்திருந்தான். மேஜையில் இருந்த காலண்டரை அவன் அகஸ்மாத்தாகப் பார்த்தபோது 2002 என்று கவனித்து முதலில் அவனுக்குச் சிரிப்பு வந்தது. நர்ஸை "இதுதான் இந்த ஆண்டு காலண்டரா?" என்றபோது அவன் காலண்டரை உற்றுப் பார்த்தான். பிறகு அவனை உற்றுப் பார்த்தான்.

"ஆமாம், பின்னே?" என்றவன் அவனை சந்தேகத்துடன் பார்த்தான். 'ஒன்றுமில்லை' என்று அவன் நடந்தான். பிறகு திரும்பிப் பார்த்தபோது நர்ஸ் ட்யூட்டி டாக்டரிடம் காலண்டரைச் சுட்டிக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். அவன் தன்னுள் படர்ந்த இனம்புரியாத அவமானத்துடன் நடந்தான். வார்டிற்குத் திரும்பியதும் முதல் பெட்டில் இருந்தவர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். 'கொஞ்சம் பேப்பர் கொடுக்கிறீர்களா, படித்துவிட்டுக் கொடுக்கிறேன். இங்குதான் நாலாம் நம்பர் பெட், ராஜ மோகன்" என்றான்.

"தெரியும்" என்று அவர் புன்னகைத்தார். "இந்தாருங்கள், என்ன நியூஸ் போங்கள், குஜராத் இன்னும் பற்றி எரிகிறது. எல்லாவற்றையும் மறந்துவிட முடிந்தால் நல்லது. பேப்பர் படித்தால் மறுபடி ஹார்ட் அட்டாக் வந்துவிடும்."

அவன் பேப்பரை வாங்கிக் கொண்டு தன் படுக்கைக்குச் சென்றான். மறதியை ஏன் அவர் குறிப்பிடுகிறார் என்று சந்தேகப்பட்டபடி

வாஸந்தி

பேப்பரை பிரித்தபோது இது 2002ம் வருஷம் என்று ஊர்ஜிதமாயிற்று. அவன் ஆயாசத்துடன் பேப்பரை மடித்து வைத்துக் கண்ணை மூடியபடி படுத்தான். என்ன ஆகிவிட்டது நமக்கு என்று கலவரமேற்பட்டது. கம்ப்யூட்டரில் சில சமயம் ஃபைல்கள் காணாமல் போகும். ஏதாவது ஒரு தருணத்தில், ஏதோ ஒரு விசையைத் தட்டிய வேகத்தில் வந்து

15



நிற்கும் - ஒரு அற்புதம்போல. பல சமயம் தலைகீழ் நின்றாலும் ஃபைல் திரும்பக் கிடைக்காது. ஒரு சமயம் அவனது அலுவலகத்தின் முக்கியமான ப்ராஜெக்டின் பைல் காணாமல் போய்விட்டது. யாரோ வேண்டுமென்றே அழித்துவிட்டதுபோல. அப்படி ஒரு சந்தேகம்கூட இருந்தது. அவனுக்கு அப்படித்தான் நேர்ந்திருக்க வேண்டும். சில வருஷத்தின் ஃபைல் காணாமல் போய்விட்டது. வேண்டுமென்றே யாரோ அழித்தது போல. எத்தனை விசித்திரம் அது? யாரையும் சந்தேகிப்பதற்கில்லை. ஆனால் அவனது சரித்திரத்தை, அவன் மறந்துபோன அத்தியாயங்களைப் பிறர் புரட்டிக் காண்பிக்கும்போது சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. சாமான்யர்களின் வாழ்க்கைக் குறிப்புகளுக்கு ஆவணங்கள் ஏது? அவனுக்கு நினைவு இருக்கிற காலம் வரை அவனுக்கு டயரி எழுதும் பழக்கம் கிடையாது. ஆனால் அவன் இப்போது வேலை பார்க்கும் இடத்தில் அவன் சேர்ந்ததற்கான கோப்புகள் இருக்கும். அவனுடன் இப்போது வேலை பார்ப்பதாக அந்த இளைஞர்கள் சொல்கிறார்கள். பிறகு அந்தப் பெண்.

ஆ. அந்தப் பெண். 'உன் குழந்தைக்கு நான் அம்மா டாமிட்!' என்றவள். உன் மனைவி என்று சொல்லாதது வேடிக்கை. குழந்தை

என்றதும் அவனது நினைவு அலைகள் சிலிர்த்துக் கொண்டு விழித்தெழும் என்று அவன் நினைத்திருக்கலாம். மறக்கப்பட்ட இடைவெளியில் அவளை மணந்ததது, குடித்தனம் செய்தது, குழந்தை பெற்றது எதுவும் நினைவு இல்லாமல் போனது எப்படி? என்று திகைப்பேற்பட்டது. அலுவலகத்திலாவது அறுந்துவிட்ட நூலிழையைச் சேர்ப்பதுபோல சேர்த்துக் கொள்ளலாம். புதிதாக வேலையில் சேர்ந்ததைப் போலத் துவங்கலாம். ஆனால் இப்போது முன்பின் தெரியாதவளைப் போல ஆகிவிட்ட ஒரு பெண்ணுடன் வாழ்க்கையைத் துவங்குவது சாத்தியமா? ஒரு குழந்தை வேறு. எல்லாவற்றிற்கும் ஆவணம் வைத்திருப்பாள். அவளுடன் குடித்தனம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தான் அந்த இளைஞர்கள் சொல்வார்கள். அதிசயமாக அம்மாவும் அப்பாவும் அந்தப் பெண்ணைத் தெரியாது என்கிறார்கள். அம்மா அப்பாவுக்குச் சொல்லாமல் தான் ஒரு திருமண பந்தத்தில் ஈடுபட வேண்டிய தன் அவசியம் ஏற்பட்டிருக்குமா? என்று அவன் யோசித்தான். அப்பாவுடன் அவனுக்கு என்றுமே அதிக நெருக்கம் இல்லாவிட்டாலும் அம்மாவின் நெருக்கத்தை அவனால் புறக்கணித்திருக்க முடியாது என்று தோன்றிற்று. அவனாகத் தேர்ந்தெடுத்தப் பெண்ணாக இருந்தாலும் ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டிருப்பான் என்பது அபத்தமாகப் பட்டது. அதோடு ஒரு குழந்தை - கடவுளே என்ன மாதிரியான சிக்கல் இது?

நேற்று மாலை டாக்டர் சென்குப்தா வரவில்லை. அவசர கேஸ் வந்துவிட்டது. ஆனால் உங்களுடன் பேச விரும்புகிறார், நாளைக் காலை அவரது அலுவலகத்திற்கு அழைத்திருக்கிறார் என்றான் அந்த இளைஞன் டாக்டர் பிரகாஷ்.

'உங்களுக்குக் கௌன்ஸலிங் தேவைப்படுகிறது' என்றான்.

'என்ன மாதிரி கௌன்ஸலிங்' என்று அவன் கேட்கவில்லை. தன்னுடைய பிரச்னைக்கு டாக்டர் எப்படிப்பட்ட உதவி செய்ய முடியும் என்று குழப்பம் ஏற்பட்டது. நல்ல வேளை தூக்க மாத்திரை கொடுக்கிறார்கள். மனத்தை உறுத்தும் கேள்விகள் எல்லாம் வீர்யம் இழந்து போகின்றன. கண்களை மூட வைத்து மனத்தையே மழுங்கடிக்கின்றன. விழிப்பு வரும் வரை.

காலையில், பத்தரை மணிக்கு அவனை சக்கர நாற்காலியில் உட்காரவைத்து பளபளத்த க்ரானைட் ஃப்ளோரில் தள்ளிக் கொண்டு போய் லிஃப்டில் ஏற்றி டாக்டரின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றபோது, ஏதோ சினிமாக் காட்சிக்குள் தான் புகுந்து கொண்டதுபோன்ற வினோத உணர்வு ஏற்பட்டது.

"உங்களிடம் ஒரு சின்ன வேண்டுகோள்" என்றார் சரவணன் டாக்டரைப் பார்த்து. பிறகு அங்கு அமர்ந்திருந்த விவேக்கையும் சதிரையும் பார்த்து, "உங்களுக்கும் சேர்த்து தான் சொல்கிறேன்" என்றார். "தயவு செய்து ராஜாவிடம் எங்களுக்கும் அவனுக்கும் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்ததாகச் சொல்லாதீர்கள்."

விவேக் கதிரை ஒரு பார்வை பார்த்துவிட்டு வியப்புடன் அவரைக் கேட்டான்.

"பின் எப்படி சகுந்தலாவைப் பற்றி அவனுக்கு விளக்குவது? உங்களுக்குத் தெரியாமல் நிகழ்ந்த உறவுக்கு எப்படி காரணம் சொல்வது?"

"எப்படியாவது சொல்லிக் கொள்ளுங்கள்" என்றார் சரவணன் பிடிவாதத்துடன். "இப்போதுதான் என் மனைவி ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாள். எனக்கும் பெரிய பாரம் இறங்கினதுபோல இருக்கிறது. அது கெட்டுவிடக் கூடாது."

"மிஸ்டர் சரவணன், அதைச் சொல்லாமல் இருக்க முடியாது. அவனுக்கு அந்தச் சண்டையைப் பற்றி நினைவில்லாமல் போய் விட்டதால், அதை அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டான். அப்படிக் கோபப்பட்டது மடத்தனம் என்றுகூட இப்போது நினைக்கலாம்."

சரவணன் பிடிவாதமாகத் தலையசைத்தார்.

"நோ, நோ, அதை இப்போது சொல்லாதீர்கள், நாங்கள் நிம்மதியாக ஊர் திரும்ப ஆசைப்படுகிறோம்."

விவேக் டாக்டரைப் பார்த்தான் - "விவேக் சொல்வதில் ஒரு பாயின்ட் இருக்கிறது" என்றார் டாக்டர். "சகுந்தலாவை உங்களுக்குப் பரிச்சயம் இல்லாமல் போனதெப்படி என்கிற குழப்பத்தை நாம் தெளிவாக்கணும்."

சரவணனுக்கு அதில் சம்மதமில்லை என்று விவேக் உணர்ந்துகொண்டான். சரியான மூர்க்கன் என்ற நினைப்புடன் இவருடன்

"'சேதப்படுத்த வேண்டாம், இது உங்கள் சொத்து'ன்னு பஸ்ல எழுதினது தப்பாப் போச்சு!"
"ஏன்... என்ன ஆச்சுங்க?"
"பஸ்ஸை தள்ளிட்டுப் போய் எவனோ வித்துப்புட்டான்!"
- குமார்

ராஜா சண்டைபோட்டு பிரிந்ததில் எந்த வியப்பும் இல்லை என்று தோன்றிற்று.

சக்கர நாற்காலி உள்ளே நுழைந்தது.

"வாருங்கள் ராஜா" என்று டாக்டர் உற்சாக வரவேற்பு அளித்து அவன் கையைக் குலுக்கினார். விவேக்கும் கதிரும் அவனைப் பார்த்து "ஹை!" என்றார்கள்.

பதிலுக்கு அவன் "ஹை! என்றான்.

"ஹௌ டு யூ ஃபீல் நௌ?" என்றார் டாக்டர்.

"ஃபைன்!"

"குட்! வீட்டிற்குக் கிளம்ப தயாராகி வருகிறீர்கள்!"

ராஜா பதில் சொல்லாமல் அவரைப் பார்த்தான். "உங்களுக்குச் சில விஷயங்கள் சொல்ல வேண்டும். அதை நீங்கள் ஒரு மருத்துவ ரீதியான பிரச்னை என்று புரிந்து கொண்டீர்களானால் சகஜ வாழ்க்கைக்குத் திரும்புவது சுலபம். உங்கள் நிலையைப் பற்றி உங்களுக்கே சில அனுமானங்கள் இருக்கும்."

"ஆமாம். எனக்குப் புரிகிறது. சில வருடத்து நினைவுகளை இழந்துவிட்டேன் என்று தெரிகிறது. கம்ப்யூட்டர் ஃபைல் ஒன்று தொலைந்து போனதுபோல."

"குட்!" என்று டாக்டர் சிரித்தார். "நீங்கள் இதை உணர்ந்து கொண்டிருப்பதே நல்ல விஷயம். ஆனால் இந்த உடம்பு கம்ப்யூட்டரைவிட அதிக நம்பகத்தன்மை கொண்டது. தொலைந்து போன ஃபைல் திரும்பக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ரத்த ஓட்டம் சீரடைந்து டாமேஜ் ஆன மெமரி செல்களுக்குப் பாயும் போது நினைவு திரும்பிவரும்."

"அதுவரை?"

"நீங்கள் மற்றவர்கள் சொல்வதை நம்ப வேண்டும். பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் - அதை இந்த நண்பர்கள் உங்களுக்குச் சரளமாக்குவார்கள்."

"நீ கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும் ராஜா" என்றான் விவேக்.

"நான்கு வருஷங்களுக்கு முன்பு நீ ஏஸெர் கம்பெனியில் சேர்ந்தாய். நானும் கதிரும்கூட அப்போதுதான் அங்கு சேர்ந்தோம். நமக்குப் பெரிய சிநேகித வட்டம். நீ வீட்டிற்குச் சென்றபிறகு எல்லாரும் உன்னைச் சந்திக்க வருவார்கள். இந்தியா கேட் புல்தரையில் அமர்ந்து நாம் கொட்டமடித்தது உனக்கு ஞாபகம் வரலாம்."

பதிலேதும் சொல்லாமல் ராஜா அவன் பேச்சைக் கேட்டான் கதை கேட்பது போல.

"இரண்டு வருஷத்துக்கு முன் நீ சகுந்தலாவை கனாட் ப்ளேஸ் பஞ்சாபி டாபா ஒன்றில் சந்தித்தாய். கண்டவுடன் காதல் கொண்டதாக எங்களிடம் பிறகு சொன்னாய்" என்று விவேக் இலேசான புன்னகையுடன் சொன்னதை கதிரும் ஆமோதித்துப் புன்னகையுடன் தலையசைத்தான்.

விவேக் தொடர்ந்தான். "உனக்கு ஏற்றவள் அவள் என்று நாங்களும் அங்கீகரித்தோம். அவள் ஒரு அற்புதமான பெண். ஒரு விளம்பர ஏஜென்ஸியில் நல்ல வேலை பார்க்கிறாள். உன்னிடம் தீவிர காதல் கொண்டிருக்கிறாள். அவளும் உன் எட்டுமாதக் குழந்தையும் உனக்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை நீ உணர வேண்டும்."

"நௌ, வெயிட் எ மினிட்" என்றான் ராஜா. "நீங்கள் இதுவரை என் பெற்றோரைப் பற்றி எதுவும் பேசவில்லை. அந்தப் பெண்ணைப் பற்றி என் தாய்க்குத் தெரியவில்லை. நீங்கள் அங்கீகரித்தீர்கள் என்று சொல்வது எனக்குப் புரியவில்லை."

விவேக் சரவணனைப் பார்த்துவிட்டு டாக்டரைப் பார்த்தான்.

"சொல்லுங்கள்" என்றார் டாக்டர்.

"நாங்கள் அங்கீகரித்தோம் என்று சொன்னது ஒரு பேச்சுக்கு. உன்னுடைய முடிவுதான் இதில் முக்கியம். எங்கள் எல்லாருக்கும் கூட அவள் நல்ல சிநேகிதி. அவளைப் பற்றி உன் பெற்றோருக்குத் தெரியாது. நீ அவர்களிடம் அவளைப் பற்றிச் சொல்லவில்லை."

"ஏன்?"

"ஏனென்றால் நீ உங்கப்பா அம்மாவோடு அப்போது உறவு வைத்திருக்கவில்லை" என்றான் விவேக் மெல்லிய குரலில்.

"என்னது?" என்றான் ராஜா நம்ப முடியாதவன் போல. "என்னப்பா இது? என்ன சொல்றாங்க இவங்க?" என்றான் தமிழில்.

சரவணனின் முகம் சிவந்திருந்தது. "அதெல்லாம் ஏதோ பழைய கதை. நடந்தது நடந்து போச்சு. அதைப்பத்தி இப்பப் பேச்சு வேண்டாம். நானும் மறந்தாச்சு நீயும் மறந்தாச்சு. இனிமே நடக்க வேண்டியதைப்



பாரு!" என்றார் தமிழில்.

"எனக்கு இதையெல்லாம் நம்பமுடிய வில்லை." என்றான் ராஜா விவேக்கைப் பார்த்து.

"என் திருமணத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்காத அளவுக்கு... அவன் நம்ப முடியா மல் தலையசைத்தான்." எனக்கு எதுவுமே ஞாபகம் வராதது எத்தனைப் பெரிய துரதிர்ஷ்டம்!" இரு கைகளாலும் அவன் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு கேட்பதைப் பார்த்து விவேக்கிற்குப் பாவமாக இருந்தது. அதிகம் கேள்வி கேட்டு இவன் சங்கடத்துக்கு உள்ளாவதற்குள் வீட்டிற்குத் திரும்ப அவன் சம்மதத்தைப் பெற வேண்டியது அவசியம் என்று பட்டது. சரவணனையும் அவர் மனைவியையும் சென்னையிலிருந்து வரவழைத்தது முட்டாள்தனம் என்று முதல் முறையாகத் தோன்றிற்று. தெரியாத்தனமாக சரவணனிடம் பேச்சுக் கொடுத்து தான் வெகுளியாக உளறியதைச் கதிர் அவனிடம் சொன்னதிலிருந்து அவனுள் ஒரு கவலை புகுந்திருந்தது.

"நீ வீட்டிற்கு வந்து விட்டாயானால் மெல்ல மெல்ல ஞாபகம் வந்து விடும் ராஜா. குழந்தையைப் பார்த்தாயானால் வந்து விடும்."

ராஜா அவனைப் பார்த்த பார்வையில் நிச்சயமின்மையும் தயக்கமும் தெரிந்தன.

சரவணன் திடீரென்று படபடத்தார். "நீங்கள் சொன்னவுடன் அவன் எப்படிக் கிளம்பி வருவான்?" சும்மா ஆபீசுக்குக் கிளம்பிப் போவது போலில்லை இது. ஒருத்தியுடன் அவள் தன் மனைவி என்று நம்பி அவன் வாழ வேண்டும். அவளை அவனுக்கு நினைவில்லை. அவள் அவன் மனைவி என்பதற்கு ஆதாரம் காண்பியுங்கள். கல்யாண போட்டோ கொண்டு வந்தீர்களா? இல்லை, ரெஜிஸ்ட்ரேஷன் காப்பி கொண்டு வந்தீர்களா?"

விவேக் திடுக்கிட்டான். இவருடைய குரலில் குரோதம்! அவர் வேண்டுகோளை மீறி தான் ராஜாவிடம் அவர்களது சண்டையைப் பற்றிச் சொன்னது குரோதத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று தோன்றிற்று. அவரது கேள்வியை டாக்டரும் ராஜாவும் அங்கீகரித்தது போல காத்திருந்தார்கள். விவேக், ராஜாவை நேராகப் பார்த்தான்.

"ராஜா அப்படிப்பட்ட நிருபணங்கள் இல்லை. ஆனால் குழந்தையின் அப்பா நீதான் என்பதற்கு ஆஸ்பத்திரி பில்கள் இருக்கின்றன."

"வாட் டு யூ மீன்?" என்றான் ராஜா. "எனக்குப் புரியவில்லை, தெளிவாகச் சொல்லுங்கள்."

"நீயும் சகுந்தலாவும் சேர்ந்து வாழ்கிறீர்கள். திருமணம் செய்து கொள்ளாமல்."

ஒரு விநாடி அதிர்ந்த மௌனம் அறையில் நிலவிற்று. டாக்டரின் தாடைகூட விழுந்திருந்தது.

"என்னடா இது, இத்தனை அடாவடித் தனமா இந்தப் பசங்க பேசறாங்க. இதை நம்புறியா?" என்றார் சரவணன் தமிழில்.

ராஜா, விவேக்கைப் பார்த்து இலேசான படபடப்புடன் கேட்டான். "யு மீன் நான் திருமணம் செய்து கொள்ளாமல் ஒருத்தியுடன் வாழ்ந்தேன், குழந்தையும் பெற்றுக் கொண்டேன் என்கிறீர்களா."

கதிர் புகுந்து சொன்னான்.

"இதப்பார் ராஜா, நானும் என் கர்ல் ஃப்ரெண்டோட அப்படித்தான் வாழறேன். திருமணம் என்கிற சடங்கிலே உனக்கும் நம்பிக்கையில்லே."

சரவணன் முகத்தில் ஒரு கோபம் படர்வதையும், ராஜாவின் முகத்தில் ஒரு அதிர்ச்சி நிலைத்திருப்பதையும் விவேக் கவனித்தான். தன்னை மீறி விஷயம் போய் விட்டது போல டாக்டர் கன்னத்தில் கைவைத்தபடி உட்கார்ந்திருந்தார்.

"ஐ கான்ட் பிலீவ் இட்" என்றான் ராஜா தொனமாக. "என்னால் இதை நம்ப முடியாது."

(தொடரும்)

தத்தளிப்பு!

நிரந்தர ஸ்பான்ஸர்ஷிப் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணிக்கு இது போதாத காலம்.

இங்கிலாந்தில் 45 நாள் டூர் செல்லும் இந்திய அணிக்கு ஸ்பான்ஸர் கிடைக்க பெரும் போராட்டம். கடைசியாக 'சஹாரா இந்தியா'வின் ஸ்பான்ஸர்ஷிப் கிடைத்துவிட 'அப்பாடா' என்று கிளம்பியிருக்கிறது அணி.

"நிரந்தர ஸ்பான்ஸரும், பணமும் இல்லாததால்தான் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியை முன்னேற்ற முடியவில்லை" என்று ஆதங்கப்படுகிறார் இந்த அணியின் கேப்டன் அஞ்சும் சோப்ரா.





அம்பானி!

அம்பானி, அதி புத்திசாலியான மனிதர். அவருக்கு வியாபார நுணுக்கம் மட்டுமில்லை; வாழ்க்கையின் நுணுக்கங்களும் தெரியும். தான் கஷ்டப்பட்டு உருவாக்கிய சாம்ராஜ்யம் தனக்குப்பின் சிதையக் கூடாது என்பதில் மிகவும் தீவிரமாக இருந்தார்.

''1986ஆம் ஆண்டு அவருக்கு முதல் தடவையாக ஸ்ட்ரோக் வந்தபோது, அவரது வலது பக்கம் பாதிப்புக்குள்ளானது. அதிலிருந்து அவர் ரிலையன்ஸ் குழுமக் கம்பெனிகளின் தினப்படி நிர்வாகப் பணியிலிருந்து விலகிவிட்டார். கம்பெனியைத் தனது மகன்கள் முகேஷ், அனில் மற்றும் சகோதரி மகன் நிகில் ஆகியோரிடம் ஒப்படைத்துவிட்டார். ஒட்டுமொத்தமாக, அவரை ஒரு பீஷ்ம பிதாமகர் போலவே அனைவரும் வைத்திருந்தார்கள். எந்த ஒரு புது புராஜக்ட் அல்லது முயற்சி என்றாலும் சீனியர் அம்பானியிடம் கலந்து ஆலோசித்து, அவர் பச்சைக் கொடி காட்டினால்தான் எதுவும் நகரும் என்பதே நிலைமை. அடிக்கடி கம்பெனியின் உயர்பொறுப்பில் இருப்பவர்களைக் கூட்டி வைத்து, சிறிது நேரம் பேசுவது வழக்கம். இது, அனைவருக்கும் உற்சாக டானிக்'' என்கிறார்கள் ரிலையன்ஸ் கம்பெனியைச் சேர்ந்தவர்கள்.

தவிர, ஒவ்வொரு பிரிவுக்கும், மிகவும் அனுபவம் வாய்ந்தவர்களை – முன்னணி பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவ சாலிகளை நியமித்து விட்டதால், கம்பெனி புரொபெஷனலாக இயங்குகிறது. தவிர, அரசாங்கத்துடன் இணக்கமாக இருக்க வேண்டும் என்பது ரிலையன்ஸ் பாலிசி. ''அதற்காக நான் அரசாங்கத்தில் யாருக்கும் சலாம் போடத் தயங்கமாட்டேன்'' என்று அம்பானியே பலமுறை சொன்னதுண்டு.

கம்பெனி நிர்வாகத்தில் நேரடியாகத் தலையிடுவதில்லை என்றாலும், தினமும் ஆபீஸ் வராமல் இருக்கமாட்டார். பிற்பகலில் இரண்டு மணிக்கு நடக்கும் அம்பானியின் தர்பார் ரொம்ப பிரபலம். அப்போது எவரும் அவரைச் சந்திக்க முடியும். அப்பாயிண்ட்மெண்ட் கூடத் தேவையில்லை. மகளுக்குத் திருமணம் என்று சொல்லி உதவி கேட்பவர், தன் மகனுக்கு வேலை கேட்டு வரும் ரிலையன்ஸ் ஊழியர் என்று பலதரப்பட்டவர்களும் இதில் அடக்கம்.

ஒவ்வொருவர் விஷயத்திலும் என்ன செய்வது என்று தம் செயலாளருக்கு இன்ஸ்டிரக்ஷன்ஸ் தருவார் அம்பானி.

அம்பானி இல்லாத சூழ்நிலையிலும் ரிலையன்ஸ் வளர்ந்து கொண்டுதான் இருக்கும். அவரது தர்பாருக்கு உதவி கேட்டு வரக்கூடியவர்கள்தான் அவர் விட்டுச் சென்றுள்ள வெற்றிடத்தை அதிகம் உணர்வார்கள்.

— கௌதம்



நம்பர் மந்திரம்!

புகைப்பது பற்றிய சில உண்மைகள்

★ புகைப்பதில் உள்ள மிக முக்கிய நச்சுக்கள் தார், கார்பன் மோனாக்ஸைட், நிக்கோடின்.

★ போதைப் பொருள்களைவிட அதிகமாக அடிமைப் படுத்துவது புகையிலை.

★ இந்தியாவில், புகை பிடிப்பதால் மட்டும் ஒரு வருடத்திற்குச் சுமார் எட்டு லட்சம் பேர் மடிகிறார்கள்.

★ நுரையீரலில் கேன்சர் நோய் உள்ளவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் புகைப் பழக்கம் உள்ளவர்கள்; ஹார்ட் - அட்டாக் ஏற்படும் நோயாளிகளில் 35 சதம் புகைப் பழக்கத்தால் நோய்க்கு உட்படுகின்றனர்.

★ உலகெங்கும் வருடத்திற்கு 40 லட்சம் பேர் மரணம் அடைகிறார்கள் - புகையிலை உபயோகிப்பதால்;

★ 2030ல், இந்த நிகழ்வு ஒரு கோடியாய் உயரும் அபாயம் உள்ளது.

- ஜி. கிருஷ்ணரத்தினம், சென்னை

பரமசுகம்!

நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் 'திற்பரப்பு' என ஒரு இடம் உள்ளது. இங்கு அழகிய நீர்வீழ்ச்சி ஒன்று உள்ளது. குற்றாலம் அருவியைப்போல இங்கு தண்ணீர் கொட்டுகிறது. கன்னியாகுமரி வருபவர்கள் மறக்காமல் இந்த அருவிக்கும் விஜயம் செய்து குளிக்கிறார்கள். குற்றாலம் போன்று கூட்டம் இல்லாததால், பல மணி நேரம் குளித்தாலும், விரட்டி அனுப்ப ஆள் இல்லாதது பரமசுகம்.

- ராஜி ராதா, திருச்சி

லோ பட்ஜட் திருமணம்

கர்நாடகா சட்டமன்ற உறுப்பினர் பைரே கெளடா மகன் திருமணம் மிகவும் எளிய முறையில் நடந்துள்ளது. 150 பேர் மட்டுமே வந்திருந்தனர். அதில் 50 பேர் உறவினர்.

''திருமணம் என்பது குடும்ப நிகழ்ச்சி, இதை ஆடம்பரமாக்க விரும்பவில்லை. என் அடுத்த மகன் திருமணத்தையும் இவ்வாறே நடத்துவேன். கோடிக் கணக்கில் பிறர் பணத்தைச் செலவழித்து திருமணம் செய்வது அர்த்தமற்றது. எளிய திருமணத்தை என் குடும்பத்தாரின் சம்மதத்துடன் நடத்தினேன்'' என்று கெளடா கூறினார்.


- ஜானகி ரங்கநாதன், சென்னை

நம்பர் மந்திரம்!

முத்தமிழ்க் காவலரிடம் ஒருவர் வந்து ''அய்யா, என் திருமண வாழ்க்கையில் நீங்கள் கூறியபடி எட்டு எழுத்து, ஏழு எழுத்து மந்திரங்கள் பயன் படுத்தி சரிப்படவில்லை. ஆறு எழுத்து மந்திரம் பலன் தந்தது. சந்தோஷமாக இருக்கிறேன்'' என்றார்.

அருகில் கேட்டுக் கொண்டிருந்த கலைஞர் கருணாநிதி ''அது என்ன 8, 7, 6 மந்திரம்?'' என்றார்.

அதற்கு கி.ஆ.பெ. விளக்கமளித்தார். ''மண வாழ்க்கையில் எட்டு எழுத்து மந்திரம் என்பது 'அனுசரித்துப் போ'. மனைவியிடம் இது சரிப்பட்டு வரவில்லை என்றால், ஏழு எழுத்து மந்திரம் 'அடக்கிப் பார்'. அதுவும் பயன் தரவில்லை என்றால்,



• திற்பரப்பு

ஆறு எழுத்து மந்திரம் 'அடங்கிவிடு'.
கலைஞர் ஒரு கூட்டத்தில் கூறக்கேட்டவர் :

திருச்சி ஞ. சண்முக சுந்தரம்

அடேயப்பா!


நீண்ட காலம் வாழக் கூடிய ஒரு மரம் கலி போர்னியாவில் வெண்பனி மலைச்சிகரங்களில் இருக்கும் 'பிரிஸ்டல் கோன்'. இது ஒரு வகை 'பைன்' மரம் ஆகும். இந்த மரத்தின் வயது 4,600 ஆண்டுகள்.

- பி. ருக்மணிபாய், சிதம்பரம்

அம்மாவுக்கு முக்கியத்துவம்!

டெல்லி பல்கலைக் கழகத்தின் விண்ணப்ப படிவங்களில் மாணவர்கள் விரும்பினால் தாய் பெயரைக் குறிப்பிட லாம். அம்மாவுக்கு முக்கியத்துவம் தந்த முதல் பல்கலைக் கழகம் இந்தியாவில் இதுவே!

- பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர்



கற்பனைப் பிரச்னைகள்



• கி.ஆ.பெ.

ஒரு பேராசிரியர் 3, 6, 12 என்ற எண்களை எழுதிவிட்டு, மாணவர்களைப் பார்த்து, "இது என்ன?" என்று கேட்டார்.

"இது ஒரு முன்னேற்ற வரிசை எண். அடுத்த எண் 24" என்றான் ஒரு மாணவன்.

"தவறு. அவற்றைக் கூட்டினால் 21 வரும்" என்றாள் ஒரு மாணவி.

"இதுவும் தவறு. இந்த மூன்று எண்களையும் பெருக்கினால் 216 வரும்" என்று ஒரு மாணவன் கத்தினார்.

"இல்லையில்லை. சரியான விடை, 'இந்த எண்களை என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்பதுதான். நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு முன்பே நீங்கள் விடை கண்டுபிடிக்க ஏன் அவசரப்படுகிறீர்கள்? முதலில் உண்மையான பிரச்னை என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள். அதைப் புரிந்து கொள்வதற்கு முன்பே, எப்படி அதற்கான தீர்வைக் கண்டு பிடிக்க முடியும்?" என்றார் பேராசிரியர்.

எல்லோரும் ஒப்புக் கொண்டு தலையாட்டினார்கள்.

"சரி, இப்போது மீண்டும் முயற்சி செய்யலாம்" என்ற பேராசிரியர், கரும்பலகையில் 232 41 82 என்ற எண்களை எழுதினார்.

எல்லோரும் ஒரே கோரஸாக "இந்த எண்களை என்ன செய்ய வேண்டும்? என்ன கணக்கு?" என்றார்கள்.

"இது எந்தவிதமான கணக்கும் கிடையாது?" என்றார் பேராசிரியர் சிரித்துக் கொண்டே.

"இது என்னுடைய தொலைபேசி எண். எனது இரண்டாவது அறிவுரை இது தான். எதைப் பார்த்தாலும் பிரச்னைகள் இருக்குமோ என கற்பனையை வளர்த்து இறுக்கமாக இருக்காதீர்கள். உடலையும், உள்ளத்தையும் தளர்த்தி இயல்பாக இருங்கள்."

- **ஆதித்யன், கோவை**



22 ஐ வென்ற இருபது!



"இந்த வருட தொடக்கத்திலேயே முடிவு செய்து விட்டேன், விம்பிள்டன் பட்டத்தை எப்படியாவது வெல்ல வேண்டுமென்று. நினைத்ததைச் சாதித்து விட்டேன். பிரெஞ்ச் கிராண்ட்ஸ்லாம் பட்டமும் எனக்கே கிடைத்தது போனஸ்'' என்கிறார் செரீனா வில்லியம்ஸ்.

மூன்றாவது முறையாக இவர் அள்ளியிருக்கும் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது.

"அடித்து நொறுக்க வேண்டும் என்று நினைத்துவிட்டால் எதிரில் யார் நின்றாலும் வெறி கொண்டு ஆடி வீழ்த்துவதில் செரீனாவை மிஞ்ச முடியாது. அது அக்காவாக இருந்தாலும் சரி" என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள்.

''ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. வீனஸின் அருமையான ஷாட்களைக்கூட அடித்து விரட்டியது அவ்வளவு ஈஸியான விஷயமல்ல; வீனஸ் ஒரு சிறந்த ஆட்டக்காரர்'' என்று சொல்லும் செரீனாவுக்கு விம்பிள்டன்னை வெல்வது கனவாக இருந்ததாம்.

தங்கை பற்றி வீனஸ் என்ன சொல்கிறார்?

"செரீனா நல்ல போட்டியாளர். அருமையான சர்வீஸ், நல்ல மூவ்மெண்ட், ஸ்ட்ராங்கான பவர், அவள் எதையும் செய்வாள்" என்று ஏகத்துக்குப் புகழும் வீனஸ், "அவள் பட்டம் வென்றது சந்தோஷமாகத்தான் இருக்கிறது. நான் வென்றிருந்தால் இன்னும் சந்தோஷப்பட்டிருப்பேன்'' என்கிறார்.

1884ம் ஆண்டில், மாட் வட்சன் (Maud Watson) லிலியன் (Lilian) சகோதரிகளுக்குப் பிறகு இப்போது தான் விம்பிள்டன் பைனலில் சகோதரிகள் மோதியிருக்கிறார்களாம்!

இப்போட்டியில் தோற்றதால் ரூ. 1.82 கோடியை வீனஸும், வென்றதால் ரூ. 3.64 கோடியை செரீனாவும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

— ஏக்ஜி

வட்டமேஜை



'நான் அரசியல் பண்ணவில்லை' என்று ஸ்ரீ ஜயேந்திரர் சொல்வது ஒப்புக் கொள்ளும்படியாக இல்லை. அயோத்தி விவகாரமே அரசியல் அடிப்படையில் பிறந்ததுதான். வலுக்கட்டாயமாக இந்து சமயத்தையும், இராமபிரானையும் நுழைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் அமைப்புகளிலிருந்து ஆன்மிகத் தலைவர் சற்று விலகியிருப்பதே நாட்டில் நல்லிணக்கம் பெற வழி வகுக்கும்.

எலந்தங்குடி, கா.மு.ஜக்கரியா

கொரிய கால்பந்துக் கழக வாலண்டியர், சங்கரின் டாக்டர் ஃபீஸை தானே செலுத்தியதும், போட்டிகள் முடிந்த பின்னர் மைதானத்தில் ஒரு குப்பையில்லாமல் சுத்தமாயிருந்தது என்றும் படித்த பின்னர் ஒரு 'பெருமூச்சு' விட்டுக் கொண்டேன்.

சென்னை, சி.மகேஷ்

'கிருஷ்ண கிருஷ்ணா' எனத் தெளித்திருந்த குட்டிக் கதைகள் பரவசமூட்டின!

ஸ்ரீரங்கம், எஸ்.கௌரிலஷ்மி

என்ன வோய் தராசு, எந்த லோகத்தில் இருக்கிறீர்? இன்று லாபகரமான தொழில் பற்றிய கேள்விக்கு வாஸ்து, கல்யாண மண்டபத்தைக் குறிப்பிட்டிருக்கிறீர், சரி. நர்ஸரி ஸ்கூலை விட்டுட்டீரே, நியாயமா வோய்?

அயன்புரம், த.சத்தியநாராயணன்

ஸ்ரீ ஜயேந்திரரின் பேட்டியைப் படித்தேன். ராமர் கோயில் பிரச்னையில் இவரின் அக்கறை பாராட்டத்தக்கது. இவரைப் போன்ற மதகுருமார்கள் ஒதுங்கி இருக்காமல் இது போன்ற பிரச்னைகளில் முடிவு காண ஆட்சியாளர்களுக்கு உதவுவது வரவேற்கத்தக்கது. அவருடைய ஈடுபாட்டுக்கு அரசியல் சாயம் பூச நினைப்பது வீண் வேலை!

மொரட்டுப்பாளையம், க.நா.இராஜேஸ்வரன்

விருதுநகர் சிறப்பிதழ், வசந்தமாய், வாசகர்கள் விருது வழங்கிச் சிறப்பிக்கும்படியாக ஜொலி ஜொலித்தது.

திருவண்ணாமலை, எல். மீனாட்சிசுந்தரம்


தென்காசிப் பட்டணம் திரைப்பட விமர்சனத்தில் தேவயானியின் நடிப்பைப் பற்றி ஒரு வரி கூட எழுதாதது ஏனோ..?

மணியக்காரன்பாளையம், ஏ.ஜி.கல்யாணசுந்தரம்

தமிழகத்துக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திடவேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த சங்கரலிங்கனாருக்கு அ.தி.மு.க. அரசு அஞ்சலி செலுத்துவதில்லை என்கிற செய்தி எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. அதுதானே அவர்களது சிறந்த (?) பண்பாடு.

பெங்களூர், ப.மூர்த்தி

* தலால் - ஹஸ்தக்




"ஹீரோவாக விருப்பமில்லை!"

வரி கொடுக்காமலிருக்க, வரிந்து கட்டிக் கொண்டு 'லகானில்' வேண்டு மானால் ஆமீர்கான் மட்டையைத் தூக்கியிருக்கலாம்; ஆனால் நிஜ வாழ்வில் மிக அதிகமான வருமான வரி செலுத்தியவர்களின் பட்டியலில் ஆமீரின் பெயர் நட்சத்திரமாய் ஜொலிக்கிறது! வரி கட்டாமல் வென்று, ஹீரோவானார்; வரி கட்டியும் 'ஹீரோ'வாகியிருக்கிறார். "டிஃபரண்ட் ஸ்ட்ரோக்!"

'ஸ்ட்ரோக்' அல்லது பராலிஸிஸ்- அதாவது "ப்ரெயின் அட்டாக்"தான், நம் நாட்டில் தினமும் 1880 உயிர்களைக் குடிக்கும், மூன்றாவது பெரிய வியாதியாமே? அண்மையில் 'அவந்திஸ்' ஏற்பாடு செய்திருந்த, பத்திரிகையாளர்களுக்கான 'மெடிகல் கான்ஃபரன்ஸில்' லீலாவதி ஹாஸ்பிடலைச் சேர்ந்த முன்னணி நியூராலஜிஸ்டுகளான டாக்டர் ஹஸ்தக்கும் டாக்டர் தலாலும், நம் நாட்டில் 'ஹார்ட் அட்டாக்'குக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தில் ஒரு கால் பங்குகூட இந்த 'ப்ரெயின் ஆட்டாக்'குக்குக் கொடுக்காமலிருப்பதை வருத்தத்துடன் சுட்டிக் காட்டி, இதை 'அனாதை வியாதி' என்று குறிப்பிட்டார்.

ஹைபர்டென்சன், டயாபடீஸ், கொலஸ்ட்ரால், இரத்த அழுத்தம், புகை பிடித்தல் போன்றவற்றால் உண்டாகும் இந்த நோய்க்கு, குழப்பம், மறதி, முகம், கை கால்கள் மரத்துப் போதல், பார்வை மங்குதல், பேச்சுத் தடுமாற்றம், திடீரென்று விழுதல் போன்றவைதான் ஆரம்ப அறிகுறிகளாம். இவை தோன்றிய சிறிது காலத்திலேயே மறைந்து விடுவதால் பலர், நோயினின்று விடுதலை அடைந்து விட்டதாக தப்பாக எண்ணி விடுகிறார்களாம். வந்தபின் அல்லல்படுவதைக் காட்டிலும் வருமுன் தடுப்பது மேல் என்கிறார்கள். தினம், வாழைப்பழங்கள் போன்ற பொட்டாசியம் அதிகமுள்ள உணவை உட்கொண்டு தவறாமல் உடற்பயிற்சி செய்யச் சொல்கிறார்கள். ஹார்ட் அட்டாக்குக்கு 'ஆஸ்ப்ரின்' உதவுவது போல் ப்ரெயின் அட்டாக்குக்கு 'ராம்ப்ரின்' என்கிறார்கள். ஆனானப்பட்ட அம்பானியே ஸ்ட்ரோக்குக்குப் பலியானாரென்றால்... டாக்டர்கள் கொடுக்கும் 'வார்னிங்' இதுதான். 'வார்னிங் சிக்னல்களை... டோண்ட் மிஸ்!'

மும்பை மசாலா



* அனில் கபூர்

மிஸ்ஸாவது ஹிட்டாவது? என்று அசால்ட்டாய் இருப்பவர் அனில் கபூர். குண்டு பஸ்க்காக வேஷம் போட்டுக்கொண்டு 'பதாய் ஹோ பதாய்'யில் ஆடிப் பாடிக் கூத்தடித்தும், படம் ஊற்றிக் கொண்டுவிட்டது. நம் சூப்பர் ஸ்டார் இவரிடம் "நீங்கள் ஏன் ஒரு ஜனரஞ்சக ஹீரோ இமேஜை உருவாக்கிக் கொள்ளக் கூடாது" என்றாராம். "எனக்கு நல்ல நடிகனாக வேண்டும். ஹீரோவாக விருப்பமில்லை" என்றாராம் அனில். "நீ பார்ப்பதற்கு அழகனில்லை (!) சுமாராகத்தான் இருக்கிறாய்" என்று யாராவது சொன்னால் ரொம்பக் குஷியாகி விடுவாராம். "தோற்றத்தால் அல்ல. திறமையால் வளர வேண்டும்" என்பதே நோக்கமாம். 'பதாய் ஹோ'வில் கிடைக்காமல் போன வாழ்த்துக்கள், 'ஓம் ஜெய் ஜகதீஷ் ஹரே'வில் கிடைக்கிறதா பார்ப்போம்... வெற்றி தோல்விகளால் இவருக்குப் பாதிப்பில்லை. தயாரிப்பாளருக்கு?

— ஜெயஸ்ரீ

புக்பேங்க்

அதிக ருசியான சமையல் குறிப்புகள்: ஆர்.எஸ். ராவ்

'உணவே மருந்து' என்பது நம் முன்னோர் வாக்கு. இதை மெய்ப்படுத்தும் விதமாக விதவிதமான உணவுக் குறிப்புகளை விளக்குகிறார் ஆசிரியர்.

ஜெய்ஷங்கர் பப்ளிகேஷன்ஸ், 38. நடேச அய்யர் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ. 20.

தூது இலக்கியம் ஒரு பார்வை - முனைவர் பி. பார்த்தசாரதி

கடந்த எழுநூறு ஆண்டுகளாகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தூது இலக்கியம் தடம் பதித்து வந்துள்ளது. அந்த இலக்கியம் பற்றி விரிவாக பேசுகிறது புத்தகம்.

வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17 விலை ரூ. 36.

ஒரு துளி துக்கம் - உமா ஜானகிராமன்

சிறுகதைகள். பல்வேறு இதழ்களில் ஆசிரியர் எழுதிய இருபத்தைந்து சிறுகதைகள் கொண்ட நூல். மிகவும் இயல்பாக, படிக்க அலுப்பூட்டாத வகையில் நிறைவான உணர்வை இக்கதைகள் தருகின்றன.

காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், சென்னை -24, விலை ரூ. 45



ஓஷோவின் வைரங்கள்

"படைப்பவனாயிருங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். ஒருவன் பலவற்றையும் செய்துதான் ஆக வேண்டும். ஆனால் எல்லாவற்றையும் படைப்பாளியாகப் பக்தியோடு செய்யுங்கள். அப்போது உங்கள் வேலையே வழிபாடாகிறது' - என்பன போன்ற தத்துவங்கள் புத்தகம் முழுவதும். அழகான வடிவமைப்புடனும், தெளிவான மொழிபெயர்ப்புடனும் வந்திருக்கிறது.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ. 96

நன்மையைத் தேடி - ஜனகன்

கர்மா, விதி, பாவம், புண்ணியம் போன்றவற்றைப் பேசுகிறது இப்புத்தகம். புராண இதிகாசங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கும் கதைகள் அழகாக இருக்கின்றன.

கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ. 25

— கார்கி



சிவகாமி

வீடு முழுக்கக் களேபரமாய் இருந்தது. மகனின் உபநயனத்துக்கு வந்தவர்கள் எல்லாம் போய்விட வீட்டில் அமைதி திரும்பியிருந்தாலும் இறைந்து கிடக்கும் பொருட்கள்... தாறுமாறாய் கொடியில் தொங்கும் துணிமணிகள்...' ஆங்காங்கே பூக்கள்... குப்பை என இருக்க, இவற்றை யெல்லாம் சீர்ப்படுத்த சில நாட்களாகும் எனத் தோன்றியது எனக்கு.

வேலைக்காரி சிவகாமி இருந்திருந்தால் இதுபோன்ற நேரங்களில் சட்டம் பேசாமல், முகம் கோணாமல் உதவியாய் இருப்பாள். என்ன செய்வது..? இரண்டு மாதத்திற்கு முன்பு நடந்த அசம்பாவிதத்தால் அவளை நிறுத்தும்படி ஆகிவிட்டது.

ஒரு வகையில் நம்பிக்கையான நல்ல வேலைக்காரி கிடைப்பதும், குடும்பத்தில் நல்ல மனைவி அமைவதுபோல ஒரு வரம் என்று தான் சொல்ல வேண்டும்.

நான்கு வருடங்களாய், இந்த ஊருக்கு நாங்கள் வந்ததிலிருந்து எங்கள் வீடே கதி என வளைய வந்தவளுக்கு அப்படியோர் எண்ணம் ஏன் ஏற்பட்டது? எனத் தெரிய வில்லை. தன் கஷ்டத்தை எங்களிடம் சொல்லியிருந்தால்கூட உதவி செய்திருப் போம். அதை விட்டு விட்டு...

வரலட்சுமி நோன்பிற்காக பெட்டியி லிருந்து எடுத்த வெள்ளிச் செம்பு, பூஜை முடிந்து உள்ளே வைப்பதற்கு முன் காணா மல் போனது.

"லட்சுமி! வெள்ளிச் சாமான்களை மெருகேத்தணும்னு சொல்லிக்கிட்டிருந் தியே. இன்னைக்குக் கொடுத்துட்டு ஆபீஸுக் குப் போறேன். ஒரு பையிலே போட்டுக் கொடு." என என் கணவர் சொல்ல, பூஜை அலமாரியைத் திறந்தபோதுதான் அது காணாமல் போயிருப்பது தெரிந்தது.

நான் பதறிப் போனேன். சட்டென வெளியாட்கள் வந்து புழங்கும் இடம் இல்லை என் வீடு. இங்கே நான், என் கணவர் மற்றும் மூன்றாவது படிக்கும் என் மகன் மட்டுமே. எனவே சிவகாமியின் மேல் சந்தேகம் வந்தது.

"அவதாங்க எடுத்திருக்கணும்..." என்றேன்.

"அவசரப்படாதே. நல்லா யோசிச்சுப் பாரு. வேற ஏதாவது பாத்திரங்களோட கலந்திருக்கப் போகுது." என்றார் அவர்.


சிவகாமி வந்ததும் கேட்டேன்.

"என்னம்மா. என்னைப் போய் சந்தேகப் பட்டுட்டீங்களே. எத்தனையோ தடவை வீட்டிலே கீழே கிடந்த காசையும், ஒரு முறை நீங்க கல்யாண மண்டபத்து பாத்ரூம்ல மறந்து வச்சிட்டு வந்த செயினையும் நான் எடுத்துக் கொடுக்கலையா..?" என்றாள் கெஞ்சும் குரலில்.

"அதெல்லாம் பழைய கதை. இப்ப நீ எடுத்திருந்தா உண்மையைச் சொல்லிடு. உனக்கு ஏதாவது பணக் கஷ்டமிருந்தா சொல்லு.. உதவறேன்." என்றேன்.

மானஸா

"ஐயோ... வேணாம்மா. திரும்பத் திரும்ப அப்படிச் சொல்லாதீங்க, உங்க வீட்டில் சாப்பிட்ட சோறு மேல சத்தியமாச் சொல் றேன். நான் எடுக்கலைம்மா. இங்கே வேலை



செய்யணும்னே நான் வேற எடங்களில் கூப்பிட்டப்பக் கூடப் போகலை..." என்றாள் கண்ணில் நீருடன். அவளது கெஞ்சல் பாவமாகத்தான் இருந்தது. பல நாட்கள் பழகியவள் என்பதால் போலீஸிடம் போக மனமில்லை. அடுத்த நாளிலிருந்து அவளை வர வேண்டாம் எனச் சொல்லிவிட்டேன்.

இப்போது சின்னப் பெண் ஒருத்தி வீட்டு வேலைக்கு வருகிறாள் என்றாலும் சிவகாமியைப் போல் உழைக்க அவளால் முடியவில்லை.

வாசலில் நிழலாடியது.

"அம்மா... அம்மா..."

பழக்கப்பட்ட குரலாய் இருக்க வெளியே போனேன். சிவகாமிதான் நின்றிருந்தாள்.

"எல்லாரும் நல்லா இருக்கீங்களாம்மா..." என்றாள். அவளோடு முகம் கொடுத்துப் பேசப் பிடிக்கவில்லை.

தன் சேலைத் தலைப்பில் வைத்திருந்த மஞ்சள் பையிலிருந்து எங்கள் வீட்டு வெள்ளிச் செம்பை எடுத்துக் கொடுத்தாள். என் கண்களையே நம்ப முடியவில்லை.

'அடிப் பாவி! அன்றைக்கு அவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் செம்பை எடுக்கவில்லை எனச் சத்தியம் செய்துவிட்டு இப்போது எந்த தைரியத்தில் இதைக் கொண்டு வந்து நீட்டுகிறாள்..?' என் மன ஓட்டத்தை உணர்ந்தவள் போல் அவளே பேசினாள்.

"நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு புரியுதும்மா. அன்னைக்கு நான் சொன்னதும் நிஜம். இப்ப சொல்லப் போறதும் நிஜம். உங்களுக்கு ஞாபகம் இருக்காம்மா... நம்ம வீட்ல சில சில்லறை வேலைகள் செய்யணும்னு தச்சு வேலை பாக்கற என் வீட்டுக்காரரை ஒரு தரம் வரச் சொன்னீங்களே... அந்தப் பாவி மனுசன் தான் இதைச் சுட்டுக்கிட்டுப் போயிருக்கான். போன வாரம் தான் எனக்கே இது தெரிய வந்துச்சு..."

"இப்ப மனசு மாறி வீட்டுக்காரர் உங்கிட்டே உண்மையைச் சொல்லிட்டாராக்கும்..."

"இல்லம்மா... அந்த ஆளுக்குக் குடிப் பழக்கம் இருந்திச்சு. இந்தச் செம்பை ஒரு வட்டிக் கடையிலே வெச்சிருக்காரு. போன வாரம் கள்ளச் சாராயம் குடிச்சி அந்த ஆளு பொட்டுன்னு போய்ச் சேந்துட்டாரு. வட்டிக் கடை சேட்டுதான் இதைப் பத்தி எங்கிட்டே சொன்னாரு. நான் நடந்ததைச் சொன்னதுமே காசு கூட வேணாம்னு இதைக் கொடுத்து அனுப்பினாரு..."

தவறு உணர்ந்து என் முகம் மாறியது என்றாலும் அவளிடம் மன்னிப்பா கேட்க முடியும்...?

"தாலி கட்டிய புருசன் போன துக்கத்தைவிட, செய்யாத தப்புக்கு இத்தனை நாளா பழி சொமக்க வச்சுட்டானேன்ற வருத்தம்தான் எனக்கு. இதை வட்டிக் கடையில வைக்காம, வித்து தின்னுட்டு இருந்தான்னா, நான் தப்பு செய்யலைன்றதை உங்களுக்கு நிரூபிக்க முடியாமலே போயிருக்கும். இப்பதான் என் மனசுல இருந்த பாரம் குறைஞ்சுச்சு. ஏழைங்கன்னா நிச்சயமா தப்பு செய்வாங்கன்ற நெனப்பு எல்லாருக்கும் இருக்கு... நான் புறப்படறேம்மா..." என் பதிலுக்காகக் காத்திராமல் வீதியில் இறங்கிப் போனாள் சிவகாமி.



டிராவிட்!

"**வி**க்கெட் கீப்பிங் அவரது பேட்டிங் திறனைப் பாதிக்கும்" என்று சிலர் விவகாரத்தைக் கிளப்பிவிட, "அப்படியெல்லாம் எதுவுமில்லையே" என்கிறார் ராகுல் டிராவிட்.

"விக்கெட் கீப்பிங்தான் எனது பேட்டிங்குக்கு அதிகமாக உதவுகிறது. ஏனென்றால் சரியான இடத்தில் நின்று பந்து வீச்சைக் கண்காணிக்க முடிகிறது. எப்படி அடித்தால் பந்து எப்படித் திரும்பும் என்பதையும் கவனிக்க முடிகிறது. இருந்தாலும் இது எனக்குச் சவால்தான். அதிகமாக உழைக்கிறேன். உண்மையிலேயே சந்தோஷமாக உணர்கிறேன்" என்கிறார் இந்த மிஸ்டர் கூல்!



செவாலியே!

சென்னையைச் சேர்ந்த வெ. ஸ்ரீராமுக்கு 'செவாலியே' விருது கொடுத்துக் கௌரவித்திருக்கிறது பிரெஞ்ச் அரசு.

'பிரெஞ்சு, இலக்கியம் மற்றும் கலாசாரத்தை தமிழகத்தில் பரப்பும் இவரது பணியைப் பாராட்டி இவ்விருதை வழங்கியிருக்கிறது அவ்வரசு.

''ஈரோட்டில் பிறந்து, திருச்சியில் பயின்று, சென்னையில் குடியேறி ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் ஊழியராகச் சேர்ந்து வாழ்க்கையைத் தொடங்கிய எனக்கு, கலை இலக்கியம் மீது தீராத காதல். 1970ல் பிரெஞ்சு மொழியைக் கற்றுத் தீருவதென்ற வெறியோடு அலையன்ஸ் பிரான்ஸிஸ்க்குள் ஒரு மாணவராக நுழைந்தேன். அடுத்த ஆண்டே அதன் நிர்வாகக் குழுவில் கௌரவ அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்'' என்று சொல்லும் ஸ்ரீராம், அங்கு பல்வேறு பதவிகளை வகித்த பின், இன்று வரை தொடர்ந்து பதினான்காவது முறையாக தலைவராக நீடிக்கிறார்.


''நடிகர் திலகத்திற்கு இதே விருது வழங்கப்பட்டபோது பரபரப்பாகப் பேசப்பட்டது, உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பது வெளியே தெரியவே இல்லையே?'' என்றதும், ''சிவாஜியின் துறை ஒரு பரபரப்பான ஊடகம். அதனால்தான் அதீதமான விளம்பரமாக அமைந்துவிட்டது'' என்கிறார் இந்த மொழி பெயர்ப்பாளர். பிரெஞ்சு மொழியில் புலமை பெற்ற பிறகு இவர் முதலில், தமிழுக்கு மொழி பெயர்த்து சில பிரெஞ்சுக் கவிதைகள்தான் என்றாலும், இவரைக் கவனிக்க வைத்தது 'அந்நியன்' நாவல். நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு, எழுத்தாளர், சிந்தனையாளர், ஆல்பர் காம்யுவின் உலகப் புகழ் நாவலை (ஒரு மரண தண்டனைக் கைதியின் உணர்வுகளை நுட்பமாகச் சொல்லும் கதை) தரமான மொழி பெயர்ப்பாக 1980ல் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து தனியாகவும், கூட்டு முயற்சியாகவும் பல மொழி பெயர்ப்புகள். இவற்றில் நாடகம், கவிதை, சிறுகதை, பிரெஞ்சு, சினிமா என்று எல்லாம் அடக்கம்.

''பிரெஞ்சு இலக்கியத்தில் நகைச்சுவை, இழையோடும் சொல்லும் உத்தியில் அழகியலும் ஆழ்மன வெளிப்பாடும் உண்டு. குறிப்பாக இலக்கியம், நாடகம், சினிமா, ஓவியம், புகைப்படம் என்று எல்லா கலைகளும் இணைந்து இயங்குகின்றன'' என்கிறார்.

அலையன்ஸ் பிரான்ஸிசின் பொன்விழாவை முன்னிட்டு அடுத்த வருடம் பிப்ரவரி பதினைந்தாம் தேதி சென்னையில் நடைபெறும் விழாவில் வெ. ஸ்ரீராமுக்கு விருது வழங்கப்படுமாம்!

— ஜெ

படங்கள்: ராஜன்



சிவகாமியின் சபதம்

நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

பிக்ஷுவின் மனமாற்றம்

பாறைகளைப் பார்வையிடுவதற்காக மகேந்திர பல்லவர், ஆயனர், சத்ருக்னன் ஆகிய மூவரும் மடத்திலிருந்து புறப்பட்டபோது, வாசலில் சிவகாமி வந்து நின்றாள்.

மகேந்திர பல்லவர் தற்செயலாக அவளைப் பார்ப்பதுபோலப் பார்த்து, "சிவகாமி, நீ கூட எங்களுடன் வருகிறாயா?" என்று கேட்டார்.

சிவகாமி மறுமொழி சொல்லத் தயங்கினாள். ஆயனர் அப்போது, "வா, சிவகாமி! போய்விட்டு வரலாம். இங்கே நீ தனியாக என்ன செய்யப் போகிறாய்?" என்றார்.

எனவே, சிவகாமியும் புறப்பட்டாள். அவளைத் தொடர்ந்து ரதியும் சுகரும் கிளம்பினார்கள்.

அமரர் கல்கி

சிவகாமி பின் தங்கியதற்குக் காரணம் இருந்தது.

பெட்டிக்குள் சிங்க இலச்சினையை வைத்துவிட்டுச் சிவகாமி நிமிர்ந்தபோது தூண் மறைவில் காவித்துணி தெரிந்தது. தூணில் மறைந்திருப்பது புத்த பிக்ஷுதான் என்பதையும் உணர்ந்தாள்.

அன்று அதிகாலையில் வந்து அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த புத்த பிக்ஷு வாசலில் வேற்று மனிதர் குரல் கேட்டதும், "பின்புறமாகப் போய் விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். 'போனவர், எப்படித் திரும்பி வந்தார், ஏன் மறைந்து

நிற்கிறார்?' என்று சிவகாமிக்குச் சற்று வியப்பாயிருந்தது.

நேற்று வரைக்கும் இம்மாதிரி சந்தர்ப்பம் நேரிட்டிருந்தால் அவள் உடனே கூச்சல் போட்டிருப்பாள்.

ஆனால், காலையில் புத்த பிக்ஷுவுடன் பேசிக் கொண்டிருந்ததிலிருந்து அவளுடைய மனம் அவர் விஷயத்தில் அடியோடு மாறிப் போயிருந்தது. அவர் மேல் முன்னம் அவளுக்கு ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் எல்லாம் நீங்கி நல்ல எண்ணமே உண்டாகியிருந்தது.



இந்த மன மாறுதலுக்குக் காரணமாயிருந்தது என்னவென்றால் குமார சக்கரவர்த்தி மாமல்லரைப் பற்றிப் பிக்ஷுவின் அபிப்பிராயம் அடியோடு மாறிவிட்டதாக அவர் கூறியதுதான்.

"மூட ஜனங்கள் கூறியதைக் கேட்டு, மாமல்லரைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் சொன்னேன். அப்படிச் சொன்ன நாவை அறுத்துக் கொள்ளலாம் என்று இப்போது தோன்றுகிறது. போர்க்களத்தில் நானே நேரில் பார்த்தேன். அடடா! 'வீரத்துக்கு அர்ச்சுனன்' என்ற பேச்சை இனிமேல் விட்டுவிட்டு, 'வீரத்துக்கு மாமல்லன்' என்று வழங்க வேண்டியதுதான். ஆயிரம் பேருக்கு மத்தியில் தன்னந்தனியாக நின்று வாளைச் சுழற்றி எப்படி வீரப்போர் புரிந்தான்! அசகாயசூரன் என்றால் மாமல்லன்தான்."

இவ்விதம் புத்த பிக்ஷு மாமல்லருடைய வீரத்தை வர்ணித்ததுடன், அவருடைய குணத்தையும் பாராட்டினார். மாமல்லனை 'ஸ்திரீலோலன்' என்று தாம் கூறியதும் பெருந்தவறு என்று அறிந்துகொண்டதாகவும், பெண்களைக் கண்ணெடுத்தே பார்க்காத பரிசுத்தன் என்றும், அப்பேர்ப்பட்ட உத்தம வீர புருஷனைக் காதலனாகப் பெறுவதற்கு எந்த இராஜகுமாரி பாக்கியம் செய்திருக்கிறாளோ என்றும் சொல்லச் சொல்ல, சிவகாமி தன்னுடைய மகத்தான பாக்கியத்தை எண்ணி இறும்பூது அடைந்ததுடன், புத்த பிக்ஷுவின் மீது முன்னெப்போதுமில்லாத நல்ல எண்ணமும் விசுவாசமும் கொண்டாள்.



அசோகபுரத்தில் திடீரென்று புத்த பிக்ஷு மறைந்த காரணத்தை ஆயனர் கேட்டதற்கு, நாகநந்தி கூறியதாவது: 'அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? கங்க நாட்டுத் துர்விநீதனை நான் அறிவேன். பௌத்த சங்கத்தைச் சேர்ந்தவன். என்னிடமும் அவனுக்குப் பக்தியுண்டு. குண்டோதரன் அன்று ஓர் ஓலை கொண்டு வந்து கொடுத்தானல்லவா? 'துர்விநீதன் காஞ்சி மேல் படை எடுத்து வருகிறான்' என்ற செய்தி அந்த ஓலையில் இருந்தது.

அத்தகைய விபரீத முட்டாள்தனமான காரியத்தை அவன் செய்யாமல் தடுக்கலாம், திரும்பிப் போகச் சொல்லலாம் என்ற எண்ணத்துடன்தான் இரவுக்கிரவே ஓடினேன். குண்டோதரனுடைய குதிரையைக் கூட அதற்காகத்தான் எடுத்துக்கொண்டேன். என் முயற்சி பயன்படவில்லை. நான் போவதற்குள் போர் மூண்டுவிட்டது. நான் எதிர்பார்த்தபடியே துர்விநீதன் வீரமாமல்லனால் முறியடிக்கப்பட்டு ஓட நேர்ந்தது. எங்கே ஓடினானோ, என்ன கதி அடைந்தானோ தெரியாது!''

இப்படியெல்லாம் மாமல்லருடைய புகழைக் கேட்கக் கேட்கச் சிவகாமிக்கு உள்ளம் குளிர்ந்ததுடன் புத்த பிக்ஷுவின் மீது அவளுடைய விசுவாசம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

''சுவாமி! தாங்களும் இந்தக் கிராமத்தில் எங்களுடனேயே தங்கியிருந்து விடுங்களேன்!'' என்று சொன்னாள்.

அதற்குப் பிக்ஷு; ''இல்லை அம்மா, இல்லை! ஓரிடத்தில் தங்கியிருப்பது என்னுடைய தர்மத்துக்கே விரோதம். தென்னாடு இப்போது என்னைப் போன்ற பிக்ஷு யாத்திரிகர்களுக்குத் தகுந்த இடம் இல்லை. தெற்கேயிருந்து பாண்டியன் படையெடுத்து வருகிறான். வடக்கேயிருந்து சளுக்கன் படையெடுத்து வருகிறான். உங்கள் இருவரையும் பத்திரமான இடத்தில் விட வேண்டுமென்றுதான் கவலைப்பட்டேன். இந்தக் கிராமம் உங்களுக்குத் தகுந்த இடம்தான். புத்த மகாப் பிரபுவின் அருள் இருந்தால் யுத்தமெல்லாம் முடிந்த பிறகு, மறுபடியும் உங்களைப் பார்ப்பேன். ஆயனரே! அடுத்த தடவை உங்களைப் பார்க்க வரும்போது, அஜந்தா இரகசியத்தைக் கட்டாயம் அறிந்து கொண்டு வருகிறேன். சிவகாமி! இங்கேயே தங்கி; உன்னுடைய தெய்வீக நடனக் கலையைப் பார்த்துக் கொண்டிருக்க எவ்வளவோ இஷ்டம்தான். ஆனால் அதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா...?'' என்று பிக்ஷு கூறியபோது, அவருடைய குரலில் தொனித்த கனிவு, சிவகாமியின் உள்ளத்தையும் உருக்கிவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான், வாசலில் குண்டோதரன் கதவை இடிக்கும் சப்தம் கேட்டது. அப்போது பிக்ஷு, ''ஆயனரே! உங்களுடைய சிஷ்யன் குண்டோதரன் என் பேரில் அநாவசியமான சந்தேகம் ஏதோ கொண்டிருக்கிறான். என்னை இங்கு பார்த்தானானால் வீணாக வலுச்சண்டைக்கு வருவான். இன்னும் யாரோ வேற்று மனிதர்கள் வாசலில் வந்திருப்பதாகக் கூடத் தோன்றுகிறது. நான் இப்படியே பின்புறமாகப் போய் விடுகிறேன். விடை கொடுங்கள்'' என்று கூறிப் புறப்பட்டார். போகும்போது, ''சிவகாமி! மறுபடியும் உங்களைப் பார்க்கிறேனோ என்னவோ? ஆனால், நான் எங்கே போனாலும், என்ன செய்தாலும் உன்னை மறக்க முடியாது. உன்னை மறந்தாலும் உன் நடனத்தை மறக்க முடியாது'' என்று கனிந்த குரலில் சொல்லி விட்டுப் போனார்.

அப்படிப் போனவரைத் திடீரென்று உள் அறையில் தூண் மறைவில் பார்த்ததும் சிவகாமிக்குச் சிறிது வியப்பாய்த்தானிருந்தது. ஆயினும் மறுபடியும் தன்னிடம் ஏதோ சொல்வதற்காக ஒருவேளை காத்திருக்கிறாரோ என்னவோ, சக்கரவர்த்தி போன பிறகு விசாரித்துக் கொள்ளலாம் என்று வெளி அறைக்கு வந்து விட்டாள். உண்மையில் பிக்ஷு போகாமல் தங்கியிருந்தது சிவகாமிக்குச் சிறிது மகிழ்ச்சியை அளித்தது என்றே சொல்ல வேண்டும்.



திருக்கோவிலூர்
வராகநதி
மண்டபப்பட்டு
திருவதிகை
கெடிலம் நதி

இப்போது மடத்து வாசலில் சக்கரவர்த்தி "நீயும் எங்களுடன் வருகிறாயா?" என்று கேட்டதும், தூண் மறைவிலிருந்த புத்த பிக்ஷுவை நினைத்துக்கொண்டு சிவகாமி ஒருகணம் தயங்கினாள். ஆனால் ஆயனரும் சேர்ந்து அழைத்ததும், தடுத்துச் சொல்ல முடியாமல், "ஆகட்டும், அப்பா!" என்று சொல்லிப் புறப்பட்டாள்.

நாகநந்தி பிக்ஷு தான் திரும்பி வரும் வரையில் ஒருவேளை அங்கேயே இருக்கலாம் என்ற எண்ணமும் அவள் மனத்தில் இருந்தது.

நாற்பத்து ஆறாம் அத்தியாயம்

திரிமூர்த்தி கோயில்

பாறைகளை நோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கும் போது, மாமல்லரைப் பற்றியோ, அவருக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றியோ சக்கரவர்த்தி ஒன்றும் பேசவில்லை. ஆயனரிடம் சிற்பக் கலையைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார். இரண்டு பேரும் இந்த உலகத்தையே மறந்து பேசிக்கொண்டு போனார்கள்.

பாறைப் பிரதேசத்தை அடைந்த பிறகும் அப்படித்தான். இந்தப் பாறையை யானையாகச் செய்யலாம், இதைச் சிங்கமாகச் செய்யலாம். இதைத் தேராக அமைக்கலாம், இதை வஸந்த மண்டபமாக்கலாம் என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியாக ஒரு பெரிய பாறையைக் குடைந்து கோயிலாக அமைப்பது என்றும் கோயில் வேலையையே முதன் முதலில் தொடங்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

"இந்த ஒரே கோயிலில் மூன்று மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்யலாம், ஆயனரே! மூன்று கர்ப்பக்கிருஹங்களை அமைத்து விடுங்கள்!" என்றார் மகேந்திர பல்லவர்.

"சுவாமி, மூன்று மதத்தினருக்கும் தனித்தனியாக மூன்று கோயில்கள் அமைத்து விட்டால் நல்லதல்லவா? சச்சரவுக்கு இடமில்லாமல் போகுமல்லவா?" என்று ஆயனர் கேட்டார்.

"மூன்று மதத்தினருக்கா? நான் அப்படிச் சொல்லவில்லையே? மும்மூர்த்திகள் என்று யாரைச் சொன்னதாக எண்ணினீர்கள்?"

"சிவபெருமான், புத்ததேவர், ரிஷபதேவர் இவர்களைத்தானே?"

"இல்லை, ஆயனரே! பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகளைச் சொன்னேன்."

"அப்படியா?"

"ஆம். இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பௌத்தர், சமணர் என்று என்னிடம் சொல்லாதீர்! ஆயனரே! அவர்கள் விஷயத்தில் அப்படி என் மனம் கசந்து போயிருக்கிறது!"

"ஐயோ! அருள் நிறைந்த தங்கள் உள்ளம் கசந்து போகும்படி அவர்கள் என்ன செய்துவிட்டார்கள்?"

"ஆஹா! சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் நான் எவ்வளவு கௌரவம் கொடுத்திருந்தேன்! அவர்களைத் திருப்திப்படுத்த என்னவெல்லாம் செய்தேன்! ஒன்றும் பயன்படவில்லை. பாடலிபுத்திரத்துச்



சமணப் பள்ளியில் துர்விநீதன் ஒளிந்துகொள்ள அவர்கள் இடங் கொடுத்தார்கள். பல்லவ சைனியம் அந்தச் சமணப் பள்ளியை இடித்துத் தரைமட்டமாக்கிப் பாதாள குகையில் ஒளிந்திருந்த துர்விநீதனைப் பிடிக்க வேண்டியிருந்தது. இப்போது அவர்கள் என்ன செய்யப்

போகிறார்கள், தெரியுமா? தேச தேசமெல்லாம் போய்க் 'காஞ்சி மகேந்திர பல்லவன் சமணப் பள்ளியை இடித்துத் தள்ளினான்' என்ற பழியைப் பரப்பப் போகிறார்கள்! அது போகட்டும், ஆயனரே, எனக்கு அதிகமாகத் தாமதிக்க நேரமில்லை. போய் வருகிறேன். யுத்தம் முடிந்து நான் திரும்பி வந்து பார்க்கும்போது கோயில் வேலை முடிந்திருக்க வேண்டும். சத்ருக்னா! நம்முடைய தெப்பத்தை எங்கே விட்டுவிட்டு வந்தோம்? சீக்கிரம் போய்ப் பார்த்துக் கொண்டு வா!" என்று கூறிவிட்டு, "ஆயனரே! நீங்களும் கொஞ்சம் பார்க்கிறீர்களா? இந்த நதிக்கரையில் எங்கேயோ தெப்பத்தை விட்டிருக்கிறோம். இரண்டு பேருமாய்ச் சென்று பார்த்தால் சீக்கிரம் கண்டுபிடிக்கலாம்!" என்றார்.

அவ்விதமே ஆயனரும் ஒற்றர் படைத் தலைவரும் தெப்பத்தைத் தேடிக்கொண்டு சென்றார்கள்.

இத்தனை நேரமும் சிவகாமி ஒரு பக்கத்தில் நின்று ரதியைத் தடவிக் கொடுத்துக் கொண்டும், மெல்லிய குரலில் ஏதோ ஒவ்வொரு வார்த்தை சொல்லிக் கொண்டும் இருந்தாள்.

ஆயனர், சத்ருக்னர் இருவரும் அங்கிருந்து சென்றதும், சக்கரவர்த்தி அவளருகில் வந்து, ஒரு பாறைமேல் உட்கார்ந்துகொண்டு, "சிவகாமி! உன்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். சற்று இந்தப் பாறை மேல் உட்காருகிறாயா!" என்றார்.

ஏதோ சந்தோஷமற்ற விஷயந்தான் சக்கரவர்த்தி பேசப்போகிறார் என்று சிவகாமியின் உள்ளுணர்ச்சி கூறியது. எனவே, தலைகுனிந்தபடி நின்று கொண்டேயிருந்தாள்.

"சிவகாமி! சற்று தலை நிமிர்ந்து இதோ இந்தக் கத்தியைப் பார்!" என்றார் மகேந்திர பல்லவர்.

சிவகாமி பார்த்தாள்.

"சற்று முன்னால் இந்தக் கத்தியைப் பற்றி ஒரு விஷயம் சொன்னேனே, அது ஞாபகம் இருக்கிறதா சிவகாமி!"

"இருக்கிறது, பிரபு" என்று சிவகாமியின் உதடுகள் முணுமுணுத்தன. அந்தக் கத்தியானது மாமல்லரின் முதுகிலே பாய்வதற்கு இருந்தது என்ற எண்ணம் அவளைத் துன்புறுத்தியது.

"நான் சொன்னது பொய், சிவகாமி!"

சிவகாமிக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவளுடைய உள்ளம் குழம்பிற்று. அந்தக் குழப்பத்தில் ஆறுதலும் மகிழ்ச்சியும் ஒருவகை ஏமாற்றமும் கலந்திருந்தன. சக்கரவர்த்தி முதலில் எதற்காக அம்மாதிரி பொய்யைச் சொன்னார்; இப்போது எதற்காகத் தாம் பொய் சொன்னதாக ஒப்புக்கொள்கிறார் என்பதொன்றும் புரியாமல் சிவகாமி திகைத்தாள்.

"ஆம்! சிவகாமி! உனக்குத் திகைப்பாகத்தான் இருக்கும். உண்மை விவரத்தை உன் தந்தையிடம் சொல்வதற்குக்கூட நான் இஷ்டப்படவில்லை. அதற்காகத்தான் அவரைத் தெப்பத்தைத் தேடுவதற்கென்று அனுப்பினேன். ஆனால், உண்மையான விவரம் உனக்கு மட்டும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும்..."

சிவகாமியின் மனக்குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. என்ன உண்மையைச் சொல்லப் போகிறார்? அது எதற்காகத் தனக்கு மட்டும் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார்!

"சிவகாமி! எஃகிலேயே நஞ்சைக் கலந்து செய்த இந்தக் கத்தி, என் ஒரே மகன், மாமல்லனுடைய முதுகிலே பாய்வதற்கு இருந்தது. இந்த அபாயம் யாரால் ஏற்பட்டது தெரியுமா?"

"பிரபு! அது பொய் என்று சொன்னீர்களே!" என்று சிவகாமி நாக்குழறக் கேட்டாள்.

"எது பொய் என்றேன்? மாமல்லன் முதுகில் கத்தி பாய்வதற்கு இருந்தது. பொய் இல்லை, சிவகாமி! பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அந்தப் பெரும் விபத்து நிச்சயமாக வருவதற்கிருந்தது. அந்த விபத்து உன்னால் தடைப்பட்டது என்றேனே, அதுதான் பொய்! சிவகாமி! நீ கேவலம் சாதாரணப் பெண்களைப் போன்ற கோழை அல்ல! நெஞ்சத்





துணிவு உள்ளவள். ஆகையால்தான் உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன்; மாமல்ல பல்லவன் நேற்று இந்த மண்டபப்பட்டுக் கிராமத்திலே இந்த விஷக் கத்தியினால் பின்னாலிருந்து குத்தப்பட்டுச் செத்துப் போயிருக்க வேண்டும். இந்தப் பாறையடியில் இந்த மகிழ மரத்தினடியிலேயே அவனுடைய உடல் அநாதைப் பிரேதமாக விழுந்து கிடந்திருக்க வேண்டும். அவ்விதம் நேராமல், அன்றொரு நாள் ஆலகால விஷத்தை உண்டு சகல உலகங்களையும் காத்த பரமசிவன்தான் நேற்றைக்கு மாமல்லனையும் பல்லவ குலத்தையும் காத்து அருளினார்.

நேற்று மாலை அதே பாறையடியில் மாமல்லர் உட்கார்ந்து தன் செவிகளில் இணையற்ற காதல் மொழிகளைப் பொழிந்து கொண்டிருந்தார் என்பதைச் சிவகாமி நினைவு கூர்ந்தபோது,

அவனுடைய தலை சுழல்வதற்கு ஆரம்பித்தது.

"சிவகாமி, கேள்! வாழையடி வாழையாக வந்த பல்லவ குலத்தில் மாமல்லனைப் போன்ற ஒரு வீரமகன் இதுவரையில் தோன்றியதில்லை. இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யம் இன்றைக்கு மாமல்லனை நம்பியிருப்பது போல் யாரையும் நம்பியிருந்தததும் இல்லை. அப்படிப்பட்டவன் நேற்றைக்கு இந்தப் பாறையடியில் வஞ்சகமாக நஞ்சு தோய்ந்த கத்தியினால் பின்னாலிருந்து குத்தப்பட்டுச் செத்து விழுந்திருப்பான். தவம் செய்து பெற்ற என் ஏக புதல்வனை நான் இழந்து விட்டிருப்பேன். பல்லவ சாம்ராஜ்யமே நாதியற்ற இராஜ்யமாகப் போயிருக்கும். கவிகளிலும் காவியங்களிலும் புகழ் பெற்ற காஞ்சி சுந்தரி வைதவ்யம் அடைந்திருப்பாள். இந்த விபத்துக்கள் எல்லாம் நேர்வதற்குக் காரணமாயிருந்தது யார் தெரியுமா...?" என்று சக்கரவர்த்தி நிறுத்தி ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு கூறினார்: "நான் என் பிராணனுக்கு மேலாகக் கருதி யாரிடம் விசுவாசம் வைத்திருக்கிறேனோ, அந்த ஆயன மகா சிற்பியின் அருமை மகள் சிவகாமிதான்!"

இதைக் கேட்டவுடனே சிவகாமியின் உச்சந் தலையில் பளீரென ஒரு மின்னல் பாய்ந்தது. அந்த மின்னலிலிருந்து ஆயிரம் ஆயிரம் ஒளிக் கிரணங்கள் கிளம்பி நாற்புறமும் பாய்ந்தன!

(தொடரும்)

அருள்வாக்கு

காலையில் லோகம் முழுக்கத் தூக்கத்திலிருந்து விடுபட்டு மலர்ச்சி அடைகிறது. சூரியன் பல பல என உதிக்கிறான்; உலக காரியங்கள் எல்லாம் தொடங்குகின்றன. எனவே குளிர்ந்த வைகறைப் பொழுதில் நீருண்ட மேகம் போல் குளிர்ந்த ஜகத் பரிபாலகரான விஷ்ணுவின் நாமங்களை உச்சரிக்க வேண்டும். மாலையில் அவரவரும் வேலை முடித்து வீடு திரும்புகிறார்கள்; மாடுகள் கொட்டிலுக்குத் திரும்புகின்றன. பட்சிகள் கூட கூட்டுக்குத் திரும்பி விடுகின்றன. சூரியனும் மலைவாயில் இறங்குகிறான். இப்படி லோக வியாபாரங்கள் ஒடுங்கத் தொடங்குகிற அந்திப் போதில் நம் ஆட்டங்களையெல்லாம் ஒடுக்கி அமைதி தருகிற ஞான மூர்த்தியான பரமேசுவரனின் நாமாவை உச்சரிக்க வேண்டும்.



அண்டம் பிண்டம் இரண்டும் அடிப்படையில் ஒரே சரக்கானதால் வெளி உலக நடப்புக்கும் நம் அக உணர்வுகளுக்கும் சம்பந்தம் இருக்கிறது. உலகில் அருணோதயத்துக்கு முன்பு பட்சி ஜாலங்கள் விழித்துக் கொண்டு கூவத் தொடங்குகிற வேளையில், 'லோகமெல்லாம் நன்றாக இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தை மனசில் நன்றாகப் பதிய வைத்துக்கொண்டு, சாட்சாத் ஸ்ரீமத் நாராயணனைத் தியானிப்பது எளிதில் கைவரும். இதேபோல் வெளியுலகம் ஒடுங்கித் தன்மயமாகி, இருள் கவிந்து வருகிற அந்தி வேளையில் இந்திரியங்களை ஒடுக்கிச் சாந்தமாக சிவபெருமானின் தியானத்தில் அமிழ்வது சகஜமாகவும் சுலபமாகவும் இருக்கும்.

நம்முடைய மனோபாவத்தைப் பொறுத்து இப்படி இரண்டு விதத்தில் உபாசித்தாலும் இரண்டு மூர்த்திகளும் ஒன்றேதான் என்ற நினைப்பு போகக் கூடாது. காலையில் பஞ்ச கச்சம் கட்டிக் கொண்டு சந்தியாவந்தனம் செய்த அதே மனிதர் பகலில் ஸூட் போட்டுக்கொண்டு ஆபீஸுக்குப் போகிறார். வெவ்வேறு காரியங்களுக்காக, வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக் கொண்டாலும் ஆசாமி ஒருத்தர்தான். ஸ்வாமியும் ஒருத்தர்தான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்



"கல்யாணம் பண்ணியிருந்தா இமேஜ் போயிருக்கும்!"

\- ரம்யா



'வெள்ளை மனசு' படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகமான ரம்யா கிருஷ்ணனைத் தேசிய நடிகை என்று கூடச் சொல்லிவிடலாம்.

"உங்களால் எப்படித் தொடர்ந்து இப்படித் தாக்குப் பிடிக்க முடிகிறது?" என்றதும் கொஞ்சமாய் சிரித்து விட்டு, சீரியஸ் ஆகப் பேசுகிறார்.

"ஓபனாச் சொல்லணும்னா நான் கல்யாணம் செய்துக்கலை. செய்திருந்தா இமேஜ் கொஞ்சம் விழுந்திருக்கும். இதுதான் நிஜம்! கல்யாணத்துக்குப் பிறகும் சிலர் நடிக்கிறாங்க... ஆனால் பெரும்பாலும் கல்யாணத்துக்குப் பிறகு இந்தத் துறையிலே பெண்கள் காணாமல் போயிடுறாங்க.. நான் தாக்குப் பிடிக்கிறதுக்கு இரண்டாவது காரணம், என்னோட உடம்பை கட்டுக் கோப்பா வைச்சிருக்கேன். தினசரி மூன்று மணிநேரம் உடற்பயிற்சி.. தலை போற வேலையிருந்தாலும் அதுல ரொம்ப கண்ணும் கருத்துமா இருக்கேன். அப்புறம் உணவுக் கட்டுப்பாடு.. மதியம் கொஞ்சம் தயிர்சாதம்.. துளி ஊறுகாயும் மிஞ்சிப் போனாக் கொஞ்சம் கோபி சிக்ஸ்டிபை, அவ்வளவுதான். இதையெல்லாம் தாண்டி சினிமாவை ரொம்ப நேசிக்கிறேன். என்னோட கேரக்டரை நேசிக்கிறேன்.. நான் அம்மன் வேஷம் போட்டாலும், வில்லி வேஷம் போட்டாலும் என் கேரக்டர் பேசப் படணும்னு கஷ்டப்படுவேன்..

"எனக்குக் கலைப் படத்துலே நடிக்கவும் பிடிக்கும்... இப்போ கூட 'குட்டி' பட இயக்குனர் ஜானகி விஸ்வநாதன் இயக்கத்துலே ஒரு படம் நடிக்கப்போறேன்... நிச்சயம் அதுக்குத் தேசிய விருதோ இல்லை மாநில அரசு விருதோ கிடைக்கலாம்" என்று படபடவென்று பேசிக் கொண்டே போன ரம்யா கிருஷ்ணனுக்கு, பஞ்சதந்திரம் படத்தில் இடம்பெற்றுள்ள தமது மரகதவல்லி கேரக்டர் நன்றாகப் பேசப்படுவது குறித்து ரொம்ப மகிழ்ச்சி!

"ஆகஸ்டில் 'பாபா' வரட்டும்... அப்புறம் சொல்லுங்க.." என்று சஸ்பென்ஸ் வைக்கிறார். கல்யாணம் எப்போ என்று இடைவிடையே கேட்டபோதெல்லாம்... உஷாராக வேறு விஷயங்களுக்குத் தாவிக் கொண்டேயிருந்தார்... ரம்யா!

அறிவின் பயன் ஏழைக்கு அன்னமிடல்! ஏழை பசிதீர்த்தல் அதுவே இறைவேட்டல்!

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றாக விளங்கும் இராமேஸ்வரத்தில்

ஆடி அமாவாசையன்று

நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

ஆன்மீக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புனித க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்குகொள்ள அன்புடன் அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

பன்னிரெண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுள் ஒன்றான இராமேஸ்வரத்தில் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீராமநாதசுவாமி உடனிருந்து அருள்பாலிக்கிறார். ஸ்ரீராமபிரான் இராவணனை வென்று இலங்கையிலிருந்து திரும்பியதும் சீதாதேவியாருடன் ராமேஸ்வரம் வந்து, அங்கு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட விரும்புகிறார். அப்போது சீதாதேவியார் மணலால் பிரதிஷ்டை செய்துவைத்த சிவலிங்கமே கர்ப்பக்கிரகத்தினுள் இன்று காட்சியளிக்கிறது. மூர்த்தி, தீர்த்தம், தலம் மூவகையாலும் இராமேஸ்வரம் சிறப்புற்று சிவவிஷ்ணு ஸ்தலமாக பிரகாசிக்கிறது. மாங்கல்ய தோஷம், புத்திர தோஷம், செவ்வாய் தோஷம், நாகதோஷம் போன்ற எல்லாவிதமான தோஷங்களுக்கும் பரிகாரத்தலமாக இராமேஸ்வரம் விளங்குகிறது. இத்தகைய சிறப்புமிக்க புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் நேரில் சென்று நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய இயலாத அன்பர்களுக்காக, "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் அன்னதானத்திருப்பணி நடைபெறுகிறது. புண்ணியபூமி இராமேஸ்வரத்தில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னதானம் அளிக்கும் பணியிலும், குடும்பம் நலம் பெற நெய் விளக்கேற்றும் பணியிலும் நாமும் பங்குகொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.


* தங்கள் சார்பாக நெய் தீபமேற்றி அன்னதானம் செய்ய தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பலாம்.
* ரூ.500/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
* ரூ.1000/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
* ரூ.5000/ - அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கும், நெய் தீபம் ஏற்றுவதற்கும் நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்த நாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபமேற்றி அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட **'கோடி தீர்த்த' சொம்பும், வலம்புரி சங்கும்** ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ இராமநாதசுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

* ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று இராமேஸ்வரத்தில் நெய் தீபம் ஏற்றி அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து வருடங்கள் பிரசாதமும், "ஆன்மீகம்" மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியினரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 336 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள "ஸ்ரீமத் இராமாயணம்" புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

அன்னதானம் செய்ய விரும்பும் ஆன்மீக அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் அமாவாசையன்று நெய் தீபம் ஏற்றுகிறோம். பதினாறு வகை இறைவழிபாட்டில் மிகச் சிறப்பாகச் சொல்லப்படுவது தீபவழிபாடாகும். இராமேஸ்வரத்தில் தீபமிடுவது மிகுந்த புண்ணியத்தைத்தரக்கூடியது. தாங்கள் என்ன வேண்டுதலுக்காக தீபம் ஏற்ற வேண்டும் என்பதையும், உங்கள் பெயர், நட்சத்திரத்தையும் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதி அனுப்பினால் அதன்படி அமாவாசையன்று தீபம் ஏற்றி தங்களுக்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

நெய் தீபமேற்றும் பணியிலும், அன்னதானப் பணியிலும் ஈடுபட விரும்பும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் புண்ணிய க்ஷேத்ரமான இராமேஸ்வரத்தில் அன்னதானப் பணியும், தீப வழிபாட்டுப் பணியும் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.



ஸ்ரீ பர்வதவர்த்தினி


Cheque/D.D/M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)


68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 4959302 Fax: (044) 4616311 E-mail: sivasiva@vsnl.net



ஸ்ரீ இராமநாதசுவாமி

இராமேஸ்வரத்தில் உள்ள தீர்த்தங்களில் நீராடினால மிகுந்த புண்ணியப்பலனைப் பெறலாம்!



• புதிய
ஜஸ்வந்தாதாரம்!

வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்வாராமே ஜஸ்வந்த்?



• முன்னில்லா மொழிகள்!

● ஜோ.பன்னீர்செல்வம், சென்னை - 84

? பதவிக்காக இருக்கும் இயக்கமல்ல தி.மு.க. 'பதினைந்து ஆண்டு காலத்துக்குத் தேர்தலில் போட்டியிட மாட்டோம்' என்று அறிவித்தால் இப்போது இருப்பதைவிட அதிக அளவு உறுப்பினர்கள் தி.மு.க.வில் சேருவார்கள்' என்று முன்னாள் அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளாரே?

! ஆண்டு அனுபவித்த தி.மு.க.வின் மூத்த தலைமுறை அப்படித்தான் பேசும். இளைய தலைமுறையின் பதவித் துடிப்பு அவர்களுக்குப் புரியாது.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? ஏ.ஆர்.ரஹ்மான் ஏன் லண்டனில் தங்கி விட்டார்?

! ஆன் லைனில் நோட்ஸ் அனுப்பி, மியூசிக் போட்டு, இசைப் பதிவும் செய்து அனுப்பிய 'பாபா' ஆடியோ கேஸட் விற்பனை உரிமை? கோடிக் கணக்கில் போயிருப்பதாகக் கேள்வி. இப்படிப்பட்ட சூழ்நிலையில் லண்டன் என்ன, கப்புராயன் நகர் என்ன, கவுண்டமணி பாஷையில் 'ஹை டெக்னாலஜி யார்!'

● குறுங்கை சீனு, திருநெல்வேலி ★

? ஜெயலலிதாவின் பிடிவாதத்திலிருந்து விமோசனம் பெற்ற பா.ஜ.க.வுக்கு மமதாவிடமிருந்து எப்போது விமோசனம்?

! மூக்கிருக்கும்வரை ஜலதோஷம். கூட்டணி ஆட்சி நிலவும் வரை மமதா தோஷம்!


● கே.வி. ராமன், சென்னை - 73

? நூறு வருஷம் பழைமை வாய்ந்த மதானி மசூதி குஜராத்தில் இடிக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றி...?

! மோடி அரசு இன்னும் நீடிக்கும் தைரியத்தில் பிறந்த வடிகட்டின திமிர்ச் செயல்.

● கே. தெய்வசிகாமணி, சென்னை.

• ஃப்ரம் லண்டன் வித் லவ்!




★ ஃபார்முலா பதினைந்து!

? பல வருஷங்களாக நஷ்டத்தில் இயங்கி வந்த ஏர் இந்தியா இவ்வருடம் 32 கோடி ரூபாய் லாப மீட்டி இருப்பது பற்றி...?

! Safe take off! Happy landing!

● தீபா, பாளையங்கோட்டை



★ பாதுகாப்புக்குப் பாதுகாப்பு!

? இல்லத்தரசிகளின் வாங்கும் சக்தியை உயர்த்துவேன் என்கிறாரே புதிய நிதியமைச்சர் ஜஸ்வந்த்?

! "யோவ்! இன்னய்யா சம்பளம் வாங்கிக்கினு வர்றே! உப்பு புளிகூட வாங்கக் காணமாட்டேங்குதே!" என்று தாய்க்குலங்கள் கணவன்மார்களை 'வாங்கு வாங்கு' என வாங்கும் சக்தியைச் சொல்கிறாரோ என்னவோ!

● பொன்விழி, அன்னூர்

? கவலை இல்லாத மனிதர் யார்?

! சாட்சாத் நீங்களேதான்! கடைசிக் கேள்வியாக 'மும்தாஜுக்கு எடைக்கு எடை நாணயம் தரலாமா?'ன்னு கேட்டிருக்கீங்களே... கவலையென்பது லவலேசமாவது இருந்தால் இப்படிப்பட்ட பிரமாதமான யோசனையெல்லாம் வருமா...?

● ப. ராமகிருஷ்ணன், காயக்காடு

? ஒரு பெண்ணுக்கு ஆண் துணை எப்போது அவசியமாகிறது?

! நிச்சயம் ரேஷன் அரிசி தரப்படும் நாட்களில்.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? உலகிலேயே மிகவும் அழகானவர் பிரதமர் வாஜ்பாய்தான் என்று நடிகை ரோஜா சொல்கிறாரே...?

! சமத்துக் குட்டி ரோஜா! கோர்ட், கேஸ் என ஏறி - இறங்கி, வில்லங்கமில்லாத பதில்களைச் சொல்லப் பழகிக் கொண்டு விட்டார்!

● எம். ஆரோக்கியதாஸ், சென்னை

? சென்னை, பாண்டிபஜாரில் கிரிமினல் வக்கீல் மதனகோபால் மர்ம மனிதர்களால் கடப்பட்டது குறித்து...?

! போதை மருந்து கடத்தல் வழக்குகளில் ஆஜர் ஆனதற்குக் கொடுத்த விலை! மிகவும் கொடூரமான மர்மக் கதையின் முடிச்சுகள் காவல்துறைக்குச் சவால்.

● கி.ம.சோ. வன்னியராசன், விருதுநகர்

? முன்புபோல் சினிமாவில் தொடாமல் நடிக்கும் நிலை வருமா...?


! ஏன், இப்போதே இருக்கிறதே! கதையையோ கருத்தையோ யாரும் தொடுவதேயில்லையே!

● வே.ந. கோபால், சென்னை - 91 ❒

? காஞ்சி மகாபெரியவர் இப்போது உயிருடன் இருந்திருந்தால், துப்பாக்கி ஏந்திய ஏ.கே. 47 பாதுகாப்பை ஏற்றிருப்பாரா?

! அதற்கான அவசியமே ஏற்பட்டிராது!

● இரா. கல்யாணசுந்தரம், அனுப்பானடி




★ கோஷ்டி...

? மத்திய அமைச்சரவையில் வாஜ்பாய் கோஷ்டி அத்வானி கோஷ்டி என்று செயல்படுவது உண்மையா...?

! பதில்களுக்கு எப்படி பதில் சொல்வது கல்யாண சுந்தரம்?

● ப. மூர்த்தி, பெங்களூர் - 72



★ ... சித்தாந்தம்

? நன்றி என்பதை மறந்து போகும் மனிதர்களைக் கண்டால் என்ன நினைத்துக் கொள்வீர்கள்?

! அமெரிக்க தேர்தலில் பெர்ஸி என்ற நாயை வேட்பாளராக நிறுத்தி, தடபுடலாகத் தேர்தல் பிரசாரமும் நடந்து வருகிறதே - அதைத்தான் நினைத்துக் கொள்கிறேன்.

● வி. ரூபஸ், கோவை

? திர்ப்பந்தத்தால் உண்டாக்கப்பட்ட கற்பனைதான் கடவுள் - சரியா?

! இல்லை. கற்பனைக்குள் அடங்காத மெய்ப் பொருள்.

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
வெ.ந.கோபால்,
14, முதல் குறுக்குத் தெரு, பாரத் நகர்,
மடிப்பாக்கம், சென்னை - 600 091.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
குறுங்கை செ. சீனு,
எச்.10, திருநகர், நெல்லை - 627 007.



கீர்த்திவாசகன்

ஆட்டோ, சிக்னலுக்காக நின்றது. அதில் இருந்த கீர்த்திவாசனின் கவனம் பக்கத்தில் வந்து நின்ற ஆட்டோவில் இருந்தவர் மீது பதிந்தது. அதிலும் தன்னைப் போன்றே ஓர் ஐம்பத்தைந்து வயதுக்காரர் ஒற்றையாகப் பயணம் செய்துகொண்டிருந்தார். நெற்றியில் பளிச்சென்ற சந்தனக் கீற்றுடனிருந்த அவர் மீது கீர்த்திவாசனின் கவனம் பதிந்ததற்கு முக்கிய காரணம், அவர் செய்துகொண்டிருந்த வித்தியாசமான செயல்.

ஒரு பலூனைச் சிறிது சிறிதாக ஊதிப் பெரிதாக்கிக் கொண்டிருந்தார் அவர். ஒரே மூச்சில் காற்றை உள்ளே நிரப்ப முடியவில்லை. அவ்வப்போது பலூனின் வாயை இரு விரல்களால் பற்றிக்கொண்டு உள்ளே போன காற்று வெளியேறாமல் பார்த்துக் கொண்டும், சற்று இடைவெளிக்குப் பிறகு மீண்டும் விரல்களைத் தளர்த்தி வாயில் உள்ள காற்றை, பலூனின் உள்ளே செலுத்திக் கொண்டும் இருந்தார்.

சிக்னலில் ஆரஞ்சு விழுந்திருக்க வேண்டும். இரு ஆட்டோக்களும் பொறுமை தவிர்த்து வேகமாகக் கிளம்பியபோதுதான் அந்தப் பெருத்த ஒலி கேட்டது.

ஏதோ சைக்கிள் ட்யூப் திடீரெனப் பஞ்சரானதைப் போன்ற சப்தத்துடன் பலூன் வெடித்திருந்தது. அதை ஊதிய சந்தனக் கீற்றுக்காரரின் முகம் ஒரேயடியாகத் தொங்கிப் போனதைக் கவனித்ததும் கீர்த்திவாசனுக்கு உடலில் பதற்றம் தொற்றிக்கொண்டது. உடனே அவருக்கு ஏதாவது ஆறுதல் சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்கெல்லாம் வழியில்லாமல் அந்தப் பலூன்காரரின் ஆட்டோ இவருடையதை முந்திக்கொண்டு சென்றுவிட்டது. அதன் பின்புறமிருந்த பலகையில் வடிவழகன், தாமரைச் செல்வி ஆகிய பெயர்கள் எழுதப்பட்டிருந்தது மட்டும் கீர்த்திவாசனின் நெஞ்சில் பதிந்தது. ஆட்டோ உரிமையாளரின் மகன் மற்றும் மகளின் பெயர்களாக இருக்கும்.

அருண் சரண்யா

வீட்டுக்குள் நுழைந்தவுடனேயே கணவரின் முகவாட்டத்தை அறிந்து கொண்டு விட்டாள் காத்யாயினி. "அசாத்திய வெயில்" என்றபடி ஒரு கையால் துண்டை நீட்டினாள். மறுகையில் தயார் நிலையில் தண்ணீர் சொம்பு இருந்தது.

ரோபோட் போல வியர்வையைத் துடைத்துக் கொண்டு சொம்புத் தண்ணீரையும் உள்ளுக்குள் இறக்கிக் கொண்டார். மீண்டும் மீண்டும் அந்த உடைந்த பலூனும் அந்தச் சந்தனக்காரரின் களையிழந்து போன முகமுமே கனவில் சுழன்றுகொண்டிருந்தன.

"சாப்பிட வாங்கன்னு எத்தனை தடவை தான் கூப்பிடறது" என்றபடி மனைவி தோளை உலுக்கியபிறகுதான் அவருக்கு அதைக் கேட்கத் தோன்றியது.

"நீ சாப்பிட்டியா?" என்றார். காலையில் அவராவது கொஞ்சம் நீராகாரம் அருந்திவிட்டு தான் கிளம்பியிருந்தார். அவள் அதைக்கூட உட்கொண்டிருக்க மாட்டாள் என்பது தெரியும்.

"முதல்ல நீங்க சாப்பிடுங்க" என்று உள்ளே போனாள். பெரிய தட்டை அலம்பி அவள் கீழே வைப்பது கேட்டது. குனிந்து வைக்காமல் சற்று உயரத்திலிருந்தே தட்டைப் போட்டது போன்ற டங்கென்ற ஒலி. பாவம் அவளால் இப்போதெல்லாம் நன்கு குனிய முடியவதில்லை. முட்டிவலி, நல்லவேளை அவருக்கு இல்லை. ஆனால் இருவருக்குமே ஆறு மாதங்களாக ஆறாத மனவலி.

கைகளைக் கழுவியபோதுதான் வீட்டு வாசலுக்கு எதிர்ப்புறம் ஓர் ஆட்டோ நிற்

பதைப் பார்த்தார். அதன் பின்புறம் வடிவழகன், தாமரைச் செல்வி என்ற பெயர்கள்.

கீர்த்திவாசனின் உடலில் ஒரு பரபரப்பு தோன்றியது. 'நீ சாப்பிடு. நான் இதோ வரேன்'' என்றபடி கழற்றிய சட்டையை மாட்டிக் கொண்டார். வேகமாகச் சென்று வாசலை அடைந்தார். ம. குடிக்கக் கிளம்பிக் கொண்டிருந்த ஆட்டோ ஓட்டுனரை கைநீட்டி நிறுத்தினார்.

"கொஞ்சம் முன்னே ஒரு பெரியவர் உன் ஆட்டோவிலே வந்தாரே தம்பி, அவர் இறங்கின வீட்டை எனக்குக் காண்பியேன்."

அவரை ஏற்றிக் கொண்டு ஆட்டோ திரும்பியது.

கொடுத்தபணத்தை வாங்கிக் கொண்டு ஆட்டோக்காரர் போய்விட்டார். கீர்த்திவாசனுக்கு இப்போதுதான் சங்கடம் பிறந்தது. வீடுவரை வந்துவிட்டோம். அவருக்கு ஆறுதல் சொல்வதற்கு முன் தன்னை அறிமுகம் செய்து கொள்ள வேண்டாமா?

சற்று உள்ளடங்கியிருந்த அந்த வீட்டின்



அழைப்பு மணியை ஒரு முறைக்கு இருமுறை அடித்த பிறகே "யாரு?" என்ற குரல் கேட்டது.

கதவு திறந்தது. நெற்றியில் சந்தனக் கீற்றும் வெள்ளை நிற ஜிப்பாவும், ருத்ராட்ச மாலையுமாக அதே மனிதர்தான். "மன்னிக்கணும். காது சரியா கேட்கறதில்லே. ஒரு முறைக்கிருமுறை அழுத்தி பெல்லை அடிச்சாத்தான் காதிலே விழுது" என்றார். தனக்கும் சமீப காலமாக வலது கண்ணில் காட்ராக்ட் என்பது நினைவுக்கு வந்தது கீர்த்திவாசனுக்கு.

கீர்த்திவாசனைப் பார்த்தவுடனேயே அவருக்கு ஒரு நல்ல கருத்து ஏற்பட்டிருக்க வேண்டும். "உள்ளே வாங்க" என்று அழைத்தார். 'யாரு?' என்ற அவரது முந்தைய கேள்விக்கு எப்படி பதிலளிப்பது என்று மனத்திற்குள் யோசித்துக் கொண்டிருந்தார் கீர்த்திவாசன்.

"நான் இந்திரா நகரில் இருக்கேன். பேர் கீர்த்திவாசன். உங்களை ஒருமுறை பார்த்திருக்கேன். இங்கே வந்ததற்கு எந்தக் குறிப்பிட்ட காரணமும் இல்லே" எனும்போதே அவருக்குக் கூச்சம் ஏற்பட்டது.

தம்மை சந்திரசேகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்ட அந்தச் சந்தனக் கீற்றுக்காரர் ஆனந்தமாகப் புன்னகைத்தார். "மனிதர்கள் பேசிக் கொள்வதற்குக் காரணம் எதற்கு? நல்ல மனிதர்கள் சந்திப்பதே சந்தோஷம்" என்றார்.

கூடத்தில் ஒரு பெண்மணியின் புகைப் படம் சந்தன மாலையுடன் காட்சி தந்தது. "என் மனைவி. பத்து வருஷத்துக்கு முன்னே காலமாயிட்டா. ஒரே மகள். நான்தான் வளர்த்தேன்."

பலூன் உடைந்ததும் விழுந்துபோன அவரது முகம் கீர்த்திவாசனின் மனத்தில் வந்துபோனது. ஆறுதல் அளிப்பதற்கான நேரம் நெருங்கிவிட்டது. தன் கண்களில் எட்டிப் பார்த்த நீரை கஷ்டப்பட்டு உள்வாங்கிக் கொண்டார்.

மாலையில்லாமலும் ஒரு புகைப்படம் தென்பட்டது. தன் யூகம் சரிதான். பதினெட்டு வயது இளம்பெண். கையில் இரண்டு கோப்பைகள்.

கீர்த்திவாசனின் பார்வை போன திசையைக் கண்டதும், "என் மகள்தான். படிப்பில் சூட்டிகை" என்றார்.

"என் காயத்ரியும்தான்" என்று கீர்த்திவாசன் கூற, காயத்ரி அவர் மகள் என்பதைப் புரிந்துகொண்டார் சந்திரசேகர்.

"சின்ன வயசிலே இருந்தே கந்தசஷ்டி கவசம். திருப்புகழ் எல்லாம் என் மகளுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன்."

"நானும் தேவாரம், திருவாசகமெல்லாம் பாடிக் காட்டியிருக்கேன். டக்குனு பிடிச்சுப்பா."

"அப்பா அப்பான்னு என்னைச் சுற்றி வருவா. இப்ப காலி வீட்டிலே இருக்க என்னமோ மாதிரி இருக்கு." சந்திரசேகர் கலக்கத்துடன் கண்களைத் தாழ்த்தியவுடன் திடீரென்று கீர்த்திவாசனின் உள்ளுக்குள் ஏதோ உடைந்தது.

'விட்டுத் தள்ளுங்க சார். உயிரைக் கொடுத்து வளர்க்கிற நாம் பெரிசில்லே இதுங்களுக்கு. ஜாதி, மதம் எதுவுமில்லாம ஒருத்தனோட இதுங்க வந்ததுன்னா நாம உடனே ஒத்துக்கணும்னு எதிர்பாக்கறதுகள். நன்றி கெட்ட ஜென்மங்கள்."

உடலெல்லாம் நடுங்க உக்கிரமாக கீர்த்திவாசன் பேசியது அவருக்குச் சிறிதும் புரியவில்லை. "என்ன சொல்றீங்க? என் மகள் நான் பார்த்துவச்ச மாப்பிள்ளையைத்தான் கல்யாணம் செய்துக்கிட்டா. அவங்களோட குழந்தைக்கு இரண்டாவது பிறந்த நாள் இன்னிக்கு. அதுதான் டவுனுக்குப் போய் குழந்தைக்குப் பரிசுகள் வாங்கிட்டு வந்தேன். கரடி பொம்மை, பலூன், இப்படி நிறைய ஐட்டங்கள்."


எதற்காகக் காரணமின்றி தன் வீடு தேடி வந்த அந்தப் பெரியவர் இப்படித் தளர்ந்து போன நடையுடன் வாசலை நோக்கிச் செல்கிறார் என்பது புரியாவிட்டாலும் அளவற்ற பரிதாபம் அவர்மீது சுரந்தது சந்திரசேகரனுக்கு. ○

ஸ்டீவர்ட்!

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் அலக் ஸ்டீவர்ட் சப்தமில்லாமல் ஒரு சாதனை செய்திருக்கிறார். நூற்றி ஐம்பது ஒரு தினப் போட்டிகளில் கலந்து கொண்ட முதல் இங்கிலாந்து வீரர் ஆகியிருக்கிறார்.



"பதிமூன்று வருடங்களாக விளையாடிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் இப்போதுதான் நூற்றி ஐம்பதாவது ஆட்டத்தைத் தொட்டிருக்கிறேன். வயது முப்பத்தொன்பது ஆகிவிட்டது. இன்னும் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை ஒரு மாணவனாகவே இருக்கிறேன்" என்கிறார் அடக்கமாக.



குறிஞ்சி மல்லி சாமந்தி...!



சினிமா ஃபைனான்ஷியர் போத்ரா விடம் மாட்டிக் கொண்டு விழிக்கும் நடிகை ரோஜாவைப் போல நடுங்கிக் கொண்டிருந் தாள் எட்டு வயது ரம்யா.

எதிரே சப்பணமிட்டிருந்த லலிதா, கிராஃபிக்ஸ் காளி போல ஒரு கையில் ஸ்கேல், இன்னொரு கையில் பாடப் புத்தகம் ஏந்தி மசாணக் கொள்ளைக்குத் தயாராக இருந்தாள்.

"உம்.. சொல்லுடி.. ஐவகை நிலங்கள் யாவை?"

"குறிஞ்சி... மல்லி.."

"ஆமா... மல்லி... சாமந்தி... கனகாம்பரம்." ஒவ்வொரு பூவுக்கும் நோட்டாலேயே அடி விழுந்தது.

"நேத்து சாயங்காலம் முழுக்க சொல்லிக் கொடுத்தேனா இல்லையா?"

'சுள்' என்று கன்னத்தில் கிள்ளு!

"மறந்து போச்சும்மா!"

"எப்படி மறக்கும்? 'அண்ணாமலை' மறக்குதா? 'பாப் ஐ ஷோ' மறக்குதா? இதெப் படி மறக்கும்?

"உம்... சொல்லு... குறிஞ்சி, முல்லை.."

"மருதம்... நெய்தல்.." ரம்யா, யோசனை செய்தபடியே, கழுத்தை உயர்த்தி அண் ணாந்து பார்க்க...

"அங்கே என்ன இழவு இருக்கு? ஒண்ணு விட்டேனா காஞ்சிபுரத்து பல்லி மாதிரி சுவத்துலே ஒட்டிக்குவே!"

ஸ்கேலால் முதுகில் ஒரு 'சப்.'

"உயிரை விட்டுச் சொல்லிக் கொடுக் கிறேன்.. மரமண்டையிலே ஏறுதா பாரு... என் வயிறு எரியுதுடீ! 'திருதிருன்னு அப்பாவி மாதிரி நடிக்காதே'. அப்படியே அப்பா மாதிரி. அழுக்கிராங்கிழங்கு."

'ட்யூஷன்ஷோ'வில் தனது பெயரும் ஒலிப் பது கேட்டு, 'ஷேவ்' செய்து கொண்டிருந்த சுகுமார் ஒரு கணம் திடுக்கிட, 'டோபாஸ்' பிளேடு தன் வேலையைக் காட்டிவிட்டது. 'சுரீர்' என ரத்தம் கிளம்பிய இடத்தில் துண்டு பேப்பர் வைத்து அடைத்தான்.

"குறிஞ்சி... முல்லை, மருதம், நெய்தல்... பாலை" திக்கித்திக்கிப் பதில் வந்ததில் லலிதாவுக்குச் சமாதானமில்லைதான்.

"ஒன் டைம் எழுதிக்காட்டு.."

'அப்பாடா! ட்யூஷன் முடிஞ்சுடுச்சு போலிருக்கே' என்று சுகுமார் சந்தோஷப் பட்டுக் கொண்ட மறுவினாடி, 'விடாது கறுப்பு' என மறுபடி ஆரம்பித்தது மசானக் கொள்ளை மூல தேவதை!

"தோ.பாரு! பேஸிக் ஸ்ட்ராங்கா இருக் கணும். இல்லன்னா நாளைக்கு ரொம்ப கஷ்டப்படுவே! வெளியிலே எங்கேயும் எக்ஸாம்பிள் தேட வேணாம். நம்ம வீட் டுலேயே இருக்கு பார்; நாற்பது வயசுலேயும் இன்னும் உருப்படியா எதுவும் செய்யாம, வருஷத்துக்கு ஒரு கம்பெனி மாறிக் கிட்டு."

சுகுமாருக்குத் துடித்தது புஜம். ஆனால் ஜெயிப்பது நிஜமில்லையே! அதனால் தின வெடுத்த் தோள்களை அடக்கிக் கொண் டான்.

'நேத்துதானே முழு பென்சில் கொடுத் தேன். இதென்ன ஆட்டுப் புழுக்கை மாதிரி..' அடுத்த அஸ்திரம் தொடுக்கப்பட்டது.

"சீவினா மொக்கு உடையுதும்மா."

"உடையும்டீ உடையும்! உங்கப்பன் சம் பாதிக்கிற நாலு காசையும் பென்சில் வாங் கியே சீவித் தள்ளிடுடி! புண்ணியவதி. ஐயோ!

ஆதாம், ஏவாள் – ஆதி தியரி – 10



நான் செஞ்ச பாவமெல்லாம் புருஷனாவும் பொண்ணாவும் மூட்டைக்கட்டி வந்திருக்கே!'' அவன் எரிச்சலை எல்லாம் திரட்டி, ரம்யாவின் தலையில் குட்ட, அவள் அலறினாள்.

ஷேவிங் முடித்த கையோடு,

அனுராதா சேகர்

''பாமாலிவ் கா ஜவாப் நஹி'' என்று சொல்லிக்கொண்டு குளிக்கப் போயிருக்க வேண்டிய சுகுமாரின் நாக்கு நுனியில் திருநள்ளாறு சூப்பர் ஸ்டார் வந்து உட்காரவே...

''கொஞ்சம் பொறுமையாத்தான் சொல்லிக் கொடேன் லலிதா!'' என்ற வார்த்தை வந்தே விட்டது.

''சம்மன் இல்லாம ஆஜர் ஆகாதீங்க... குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க பலிஷ்" இல்லை. பிரமாதமா பாஞ்சுக்கிட்டு வர்றீங்களே!''

''சரி... அடிக்காம சொல்லித் தாயேன்...''

''முருங்கையை முறிச்சு வளர்க்கணும். குழந்தையை அடிச்சு வளர்க்கணும். அடிக்காம விட்டா, உங்கக் குடும்பத்து ஆளுங்க மாதிரி, தத்தியா, இருக்க வேண்டியது தான்.''

''ஏய்... இப்ப எங்கக் குடும்பத்தை ஏன் வீணா இழுக்கறே!''

''அடேயப்பா! என்ன சுரணை!''

தோளில் இடி, முகத்தில் ஒரு வலிப்பு, கண்ணில் ஒரு சேஷ்டை! சண்டையின் முதல்பாகம் முடிந்தது.

''எல்லாம் என் தலையெழுத்து! ஒத்தை மூக்குத்தியோட வந்ததுங்க எல்லாம் இன்னிக்கு ஃபிளாட்டும், நகையும் நட்டுமா ஓஹோன்னு இருக்காங்க. நானும், தேஞ்சு போன நாலு வளையலை மாத்தி, கனமா ஒரு ஜோடி வளையலா பண்ணிக்கணும்னு ஜகஜ்ஜால வித்தை எல்லாம் பண்ணறேன்... எங்கே? வர்றதெல்லாம் வயித்தைக் கழுவவே சரியா இருக்குதே!''

''மொணமொண'வென்று சிடுசிடுத்துக் கொண்டே பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருந்தாள் லலிதா.

''என்னடி அது சப்தம்?''

''உங்க பாட்டி காலத்து அலுமினிய

பெண்கள் நமக்கு ஆறுதல் அளிப்பது உண்மையே. ஆனால் பெண்கள் இல்லாவிட்டால் நமக்கு ஆறுதலே தேவைப்பட்டிருக்காது!

— டான்ஹெரால்டு

துணுக்கு உதவி: பாற்கடல் வேந்தன்

பாத்திரம்... சப்தம் போடாமல், சிம்ஃபனியா பாடும்?"

சுகுமார் கப்சிப்...!

டிபன் சாப்பிடும் போது மறுபடி ஒரு உரசல்!

"இன்னிக்கும் தோசைதானா?"

"ஏன் மொகல் பிரியாணி, முந்திரி அடை, சக்கைப் பிரதமன், எல்லாத்தையும் நானே விழுங்கிட்டு, உங்களுக்குத் தோசை வைக்கிறேன்னு நினைச்சுட்டீங்களா? உங்களுக்காவது தோசை. எனக்குப் பழைய சாதம்தான்!"

'ணங்'என்று ஓசைப்பட தண்ணீர் தம்ளர் வைக்கப்பட, அது உருண்டு, டிபன் தட்டிலேயே சாய...

சுகுமார் எழுந்து ஓர் அறை விட்டதில், லலிதாவின் கன்னம்.. வாசகர் கற்பனை வளத்துக்கே விடப்படுகிறது.

தேர்தல் என்றால் இல்லுமுல்லு நடக்காமல் இருக்குமா? தாம்பத்தியம் என்றால் சண்டை வராமல் இருக்குமா? கண்டிப்பாக வரும்! பிரிட்டிஷ் இளவரசருக்கும் அழகுப் பெண் டயானாவுடன் சண்டை வரலையா!

கனவு நாயகன் சல்மானும், பௌர்ணமி பியூட்டி ஐஸ்வர்யாவும் சண்டைப் போட்டுக்கலையா?

ஸோ, சண்டை என்பது வரத்தான் செய்யும்.

"கணவன் – மனைவிக்குள் சண்டை வர மிக முக்கியக் காரணமாக அடிக்கோடு இடப்படுபவை ஆறு சமாசாரங்கள்தாம். பணம், செக்ஸ், முக்கியமான முடிவுகள், குழந்தை வளர்ப்பு, குடும்பப் பொறுப்பு, வெளி ஆளின் குறுக்கீடு – பெரும்பாலான தாம்பத்திய சச்சரவுக்கு இவைதான் காரணம்" என்று மேரேஜ் கவுன்சிலர்கள் சொல்கிறார்கள்.

ஆண்கள் போடும் சண்டையின் பின்னணியில் 'தான் மதிக்கப்படவில்லை, தான் நம்பப்படவில்லை' என்ற தாழ்வு மனப்பான்மை காரணமாக அமைவதாகவும், பெண்கள் போடும் சண்டையின் அடிஆழத்தில், 'தான் காதலிக்கப்படவில்லை; தன் அன்பு போஷிக்கப்படவில்லை' என்ற நிராசை காரணமாக அமைவதாகவும் மன(ண)வியல் ஆராய்ச்சிகள் சொல்கின்றன.

ஆணும், பெண்ணும் இதை உணர்ந்து கொண்டு, சண்டைகளைத் தவிர்க்க வேண்டும். வாக்குவாதங்களை முற்றவே விடக்கூடாது. இதற்கு 'வாளை உருவாமல் கேடயம் தூக்குங்கள்' என்ற யுக்தி சரிப்பட்டு வருமாம்!

ஒருவர் உங்களை வாளால் காயப்படுத்த வரும்போது, நீங்களும் ஒரு வாளை உருவித் தாக்கினால், ஆக்ரோஷம் அதிகரிக்குமே தவிர, நிலைமை சீராகாது. அதுவே கேடயம் தாங்கி, தடுக்கும் முறையால், எதிராளியைச் சமாளித்தால், யுத்தத்தின் தீவிரம் குறையும்.

கணவனோ மனைவியோ, ஏதோ ஒரு மனோபாவத்தால் ஆட்கொள்ளப்பட்டு, கத்தி தூக்கினால், நீங்கள் உடனே வேல் கம்பு, பட்டாக்கத்தியோட, 'வெற்றிவேல்.. வீர வேல்னு' கிளம்பிடாதீங்க.. நைச்சியமான பேச்சு, சாந்தமான பார்வை, அன்பான வார்த்தை, ரசனையான சமாளிப்பு எதையாவது செய்து, தடுத்தாட்கொள்ளுங்க! ஏன்னா இது நம்ம வாழ்க்கை!

அடுத்தவாரம், பெரிய பூசணிக்காய், குடம், கொழுந்து வெற்றிலை, எல்லாத்தையும் எடுத்து வைச்சுக்கோங்க. ஆ.ஏ.ஆ.தி. தொடர் முடிஞ்சுடும் போலிருக்கு. திருஷ்டிக் கழிச்சுடலாம்...!

கங்கூலி

"நான் கர்வம் பிடிச்ச கேப்டனா? யார் சொன்னது. உங்களுக்குத் தேவைன்னா பிளேயர்ஸ்ட்டே கேட்டுத் தெரிஞ்சுக்க வேண்டியதுதானே. இந்திய கேப்டன்களிலேயே வெறுக்கத்தக்க கேப்டனா நான் இருக்கேன்னுதான் சொல்லியிருக்கேன். என் உள்ளுணர்வு அப்படிச் சொல்லச் சொன்னது சொன்னேன். இதுக்கும் கர்வத்துக்கும் என்ன சம்பந்தம்? பத்திரிகையில என்னைப் பற்றிய கிசுகிசு நிறைய வருது. அதையெல்லாம் நான் படிக்கறதே இல்ல. அதைப் படிச்சுட்டுக் கேக்காதீங்க?"





விலகினாலும் கூடும் வீரியம்!

'போன ஆண்டை விட இந்தக் கோடையில் வெப்பம் ரொம்பவும் அதிகம்!' என்று வருடம் தவறாமல் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

நிஜமாகவே இந்த ஆண்டு பூமியின் மீது சூரிய வெப்பம் மிக அதிகமாக விழுந்திருக்கிறது என்று வானியல் அறிஞர்கள் சொல்கிறார்கள்.

காரணம், சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தொலைவு அதிகமாயிருப்பதுதான். மற்ற கோள்களின் பாதை நீள்வட்டமாக இருக்கிற அளவு, பூமி சூரியனைச் சுற்றுகிற பாதை அமையவில்லை. கிட்டத்தட்ட சரியான வட்டமாகவே படங்களில் பார்த்தாலும், கொஞ்சம் கோணலான பாதையில்தான் பூமி சுற்றி வருகிறது.


பூமி, சூரியனுக்கு வெகு அருகில் வருகிற தொலைவு 14.78 கோடி கி.மீ என்றும் வெகு தொலைவில் உள்ளபோது 15.26 கோடி கி.மீ என்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

"இந்த ஆண்டு ஜூலை எட்டாம் ஆம் தேதி சனிக்கிழமை இந்த அதிகத் தொலைவை பூமி எட்டியிருக்கிறது" என்கிறார் புளோரிடா பல்கலைக் கழக வானியலார் ஜார்ஜ் வெபோ.

"சூரியனுக்கு வெகு தொலைவில் பூமி வருகிறபோது (அப்ஹீலியன் என்பார்கள்) அதன் மீது விழுகிற வெப்ப அளவு, வெகு அருகில் பூமி வருகிற போது (பெரிஹீலியன்) விழுவதைவிட ஏழு சதவிகிதம் குறைவான உக்கிரமுடையது" என்கிறார் நாஸா அமைப்பைச் சேர்ந்த பருவநிலை ஆய்வாளர் ராய்ஸ்பென்ஸர். இதனால் பூமியின் மீது வீழ்கிற வெப்ப அளவு குறைவாகத்தானே உணரப்பட வேண்டும்?

உண்மையில் அவ்வாறில்லை. பூமிப் பந்து அதன் அச்சில் 23.5 டிகிரி சாய்வாகச் சுழல்கிறது. அப்படிச் சுழலும்போது வட பகுதியின் மீது கோடையில் சூரிய வெளிச்சம் அதிகமாகப் படுகிறது. அடுத்த ஆறு மாதத்தில் தென்துருவப் பகுதி சூரியனை நோக்கி அதிகமாய்ச் சாய்கிறபோது நிலைமை தலை கீழாகி விடுகிறது.

நாஸா விஞ்ஞானிகளின் கணிப்பின்படி, சூரியனை விட்டு பூமிப்பந்து அதிக தொலைவில் உள்ளபோது நான்கு டிகிரி வெப்பம் கூடுதலாகிறது. இதற்குக் காரணம் கண்டங்களின் நிலப்பரப்பும், கடல் பரப்பும் ஒழுங்கில்லாமல் கிடப்பதுதான். பூமியின் வட பாதியில் அதிகமான நிலப்பரப்பு இருப்பதால் சூரிய வெப்பம் உடனே தாக்கி விடுகிறது. தென் பாதியில் கடல் பரப்பு அதிகமாக இருப்பதால்,



அது வெப்பத்தை ஈர்த்துக் கொண்டு விடுகிறது.

இன்னும் ஒரு காரணமும் சொல்கிறார்கள். சூரியனுக்கு அதிகத் தொலைவில் பூமி சுழன்று வரும் போது, அது தன் 'வட்டப்' பாதையில் சற்று மெதுவாகவே நகர்கிறது.

வடபாதியில் ஏற்படும் கோடைக்காலம் தெற்கில் உள்ளதைவிட அதிகம் நீண்டதாய் இருக்கும்; இதனால் சூரியன் வட பகுதி நிலப்பரப்பை நிதானமாகவே வறுத்து எடுக்கிறது என்றும் சொல்கிறார்கள். ○

— சுப்ர. பாலன்

வண்ணத்துப் பூச்சிகள் துரத்த ஓடியவன்!



கொலைக்கரங்கள்
வாய்த்த பால்யமெனக்கு

செவக்காட்டில் மூச்சுமுட்ட
அம்மா புடுங்கி வந்த
புளியங்குறண்டியால்
பட்டாம்பூச்சிக்குக் குறிவைப்பேன்

ஏதேனும் துத்திப்பூவில்
தேனுறிஞ்சுவதைப்
பதுங்கிச் சென்று அறைகையில்
மௌன ஓலமிட்டுச் சரியும்

துண்டிக்கப்பட்ட
பல்லி வாலாய்த் துடிக்கும்
அதன் சிறகு பிய்த்து
மீண்டும் முளைக்குமோவென
கடாப்பெட்டியில் அடைக்க,
எறும்புகள் மொய்க்கச்
செத்துக் கிடக்கும் மறுநாள்

மூணுவேளைச் சோறு கிடைக்குமென
வேதப்பள்ளியில் சேர்க்கப்படும்வரை
ஊரெங்கும் இளவெயிலில் பறக்கும்
தட்டான்களை விடுத்து
வெள்ளை மஞ்சள் சிவப்பு என
அவற்றின் பின்னால்தான்
அலைந்து கொண்டிருந்தேன்

அப்புறம்தான் ஓடவேண்டியதாயிற்று
எதிர்ப்படும் நிறங்களிலிருந்து
உயிர்த்தெழும் வண்ணத்துப்பூச்சிகள்
துரத்த துரத்த

வே. ராமசாமி

குங்ஃபூ குணசேகரன்!



''என்னண்ணே.. நம்ம கவுன்சிலர் திடீர்னு 'குங்ஃபூ' கத்துக்க ஆரம்பிச்சுட்டாரு..''

''அத ஏன் கேக்குறே... தன் பேரை, குங்ஃபூ குணசேகரன்'னு மாத்திக்கிட்டு மேயரா வர்றதுக்கு ப்ளான் போடுறார்.''

— சித்ரா கிருஷ்ணமூர்த்தி



''உங்க கணவருக்கு எப்படி மனநிலை பாதிக்கப்பட்டது..?''

''ஏழேழு ஜென்மத்துக்கும் நான்தான் உங்க மனைவியா வரணும்னு நான் சொன்னதிலிருந்து டாக்டர்..!''

— சத்யா முருகவேல்



''என்னங்க அடிக்கடி ஏப்பம் விட்டுக் கிட்டே இருக்கிறாரு?''

''அவர் நிதிநிறுவனம் வச்சு நடத்திக்கிட்டு இருக்கிறாருங்க.''

— விட்டுக்கட்டி மு. பெரியசாமி



"என்னது! உன் மனைவி கோவிச்சுக்கிட்டு பிறந்தகம் போக இலக்கியத்தகராறு காரணமா...!"

''ஆமா! என் கவிதைத் தொகுதியை அவளுக்குச் சமர்ப்பணம் பண்ணாம என் அம்மாவுக்குச் சமர்ப்பணம் செய்ததில் அவளுக்கு ஏகக் கடுப்பு!"

— உ. ராஜாஜி



பாஸ்கர்

ஷோபனாவின் கணவன் பாஸ்கர், ஒரு தனியார் கம்பெனியின் நிர்வாகி. ஷோபனாவின் அம்மா மிகவும் கேட்டுக் கொண்டதன் பேரில், அவளது தூரத்துச் சொந்தமான சேகருக்கு, தன் கம்பெனியிலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்திருந்தான் பாஸ்கர். அந்த நன்றிக் கடனுக்காக சேகரும் அடிக்கடி, ஷோபனாவின் தாய் வீட்டுக்குச் சென்று எலெக்ட்ரிக் பில், ஃபோன்பில் கட்டுவது, ரேஷன் வாங்குவது போன்ற லொட்டு லொசுக்கு வேலைகளைச் செய்து வந்தான்.



ஆனால் இம்முறை, 'இந்த ரேஷன் சர்க்கரையைக் கொஞ்சம் வாங்கித் தர்றியாடா சேகரா?' என்று ஷோபனாவின் அம்மா கேட்டதும், ஒரேயடியாக மறுத்துவிட்டான். "இன்னிக்கு எங்க பாஸ் ஒரு முக்கியமான வேலை குடுத்திருக்கார். நம்ம ஸ்பென்ட்ரல்லா ஃப்ளவர் மார்ட்டுல நல்லதா ஒரு 'பொக்கே' தயார் பண்ணச் சொல்லணும். என்னைப் பக்கத்துலயே இருந்து, பார்த்து, நல்ல ஃப்ரெஷ் பூவா வைச்சு, கட்டி, அழகா டெகரேட் பண்ணி எடுத்துண்டு வரச் சொல்லியிருக்கார். அப்படியே கீதாஞ்சலி ஜெம்ஸிலிருந்து அவர் ஆர்டர் குடுத்த ப்ரேஸ்லெட்டை கலெக்ட் பண்ணி 'கிஃப்ட் பாக்' பண்ணனும்..." என்று சர்க்கரையில் அக்கறை காட்டாமல் பேசினான்.

"ம்ம்... யாராவது வெளிநாட்டுக்காரா உங்கக் கம்பெனியை விஸிட் பண்றாங்களா என்ன?"........ரேஷன் கார்டை உள்ளே வைத்தவாறே அம்மா கேட்டாள்.

"ஊஹூம்... இது நம்ம பாஸ்கர் ஸாரோட பி.ஏ.வா இருக்கற மிஸ் ரெஜினாவுக்கு, அவுங்க ரொம்ப நல்ல மேடம்" போகிற போக்கில் அவன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போனான்.

ரெஜினா ஒரு 'மிஸ்' என்பதை அம்மா 'மிஸ்' பண்ணவில்லை என்பது ஒரு புறமிருக்க, அவள் தவறாமல் பார்க்கும் மெகா சீரியல்களின் பொருந்தாத காதல்கள், மனசைச் சொதப்பிவிட்டிருந்தன.

முதலில் பெண்ணுக்கு டயல் செய்தான்.



ஆபீஸ் வேலையில் மும்முரமாக இருந்த ஷோபனா, "ஹலோ" என்றாள் எரிச்சலுடன்.

"ஷோபனா... நம்ம மாப்ளை, அவரோட பி.ஏ. மிஸ் ரெஜினாவுக்குக் குடுக்கன்னு ஸ்பெஷல் பூச்செண்டும் ப்ரேஸ்லெட்டும் வாங்கிட்டு வரச் சொல்லியிருக்கார்டி நம்ம சேகர் பயகிட்ட..."

"ஸோ வாட்?.."

"வாட்டாவது கீட்டாவது? இந்த வயசுல இப்படி கெக்கே பிக்கேன்னு பொக்கேவும் கிக்கேவும் தன்கிட்ட வேலை செய்யறவளுக் கெல்லாம் குடுக்கறது நன்னாவா இருக்கு?"

"பேத்தாத மா; ஃபோனை வையி; நான் இப்ப பிஸியா இருக்கேன்." ஷோபனாவால் துண்டிக்க முடிந்தது ஃபோனைத்தான். அம்மாவின் நினைவோட்டங்களையல்ல; அவள் மனத்திரையில் அதற்குள் ரெஜினா வும் பாஸ்கரும் ஸ்விட்ஜர்லாந்தில் டூயட் பாடிக் கொண்டிருந்தார்கள்.

சரியாக லஞ்ச் டயத்தில், மறுபடியும் ஷோபனாவை அழைத்தாள் அவள் அம்மா. "தப்பா நெனைச்சுக்காதமா... பெத்த வயிறு... நம்ம பொண்ணு ஏமாந்துடக் கூடாதேன்னு தான்."

"பாஸ்கர் அப்படிப்பட்டவரில்லை மா; நீ வீணா கவலைப்படாதே... நான் சாயங் காலமா வீட்டுக்கு வரேன்; நிதானமா இது பத்திப் பேசலாம்... என்ன? பைபை.. அவள் வெட்ட வெட்ட, அம்மாவின் கற்பனைகள் வளர்ந்து விருக்ஷமாகி, ஷோபனாவின் குழந் தைகள் ரெஜினாவை "சித்தி" என்றழைப் பதில் வந்து நின்றன!

மாலை, மகள் வரும்வரை காத்திருக்க முடியாமல், அவள் வீட்டுக்கே படை எடுத்து விட்டாள் அம்மா. அங்கே, பேத்திக்கு ஜூஸ் புகட்டிக் கொண்டிருந்த ஷோபனாவின் மாமியாரிடமே இந்த விஷயத்தை பிரஸ்தா பிப்பது நல்லது என்ற நினைப்புடன், மென்று, விழுங்கி, ஆரம்பித்தாள். கிட் டத்தட்ட முடியும் தருவாயில் ஷோபனா வந்துவிட்டாள். "என்னமோ... நான் சொன்னா, இதையெல்லாம் இவ ரொம்ப சாதாரணமா எடுத்துக்கறா" என்று அம்மா முடிக்கவும்...

"இந்தக் காலத்துப் பொண்களுக்கெல் லாம் சம்பாதிக்கற திமிரு. புருஷன் காரன் ஒழுங்கா இருக்கானா இல்லை யாங்கறதைப் பத்தி அக்கறையோ கவலையோ கிடையாது. தப்பான வழியில போறவனைத் திருத்திக்கொண்டு வரணும்ங் கற நினைப்பே இருக்காது. ஆன்னா ஊன்னா டைவர்ஸுன்னு கோர்ட்ல போயி நிப்பா; குழந்தை குட்டிகளைப் பாத்துக்கத் தான் நம்ம மாதிரி கிழங்களுக்கு ஆயுசைப் போட்டு வைச்சிருக்கானே அந்த ஆண்ட வன்." என நீட்டி முழக்கினாள் மாமியார்.

ஷோபனா அவசர அவசரமாக, "ஏம்மா எப்பப்பாரு தப்பாவே நினைக்கணும்? ஒரு

ஜெயஸ்ரீ ராஜ்

நட்போட, ஒரு சகோதரத்துவத்தோட கூட வேலை செய்யறவங்களுக்கு கிஃப்ட் குடுக்கக் கூடாதா?" என்று சமாதானப்படுத்தினாள்.

"ஆமாடீ... கூடப் பொறந்த அக்கா தங்கைகளுக்கு ஒரு நாள், ஒரு முழம் பூ, உன் வீட்டுக்காரன் வாங்கிக் குடுத்ததில்லை. கூட வேலை செய்யறவளுக்கு பொக்கே வேணுமா பொக்கே? பெத்த தாயாருக்கு ஒரு வளையல் பண்ணிப் போட்டதில்லை; கண்டவளுக்கும் ப்ரேஸ்லெட் அழுறதோ?" மாமியார் வேறு ட்ராக்கில் புகுவதை உணர்ந்து, "உங்களுக்கில்லாததாம்மா? இந்த தீபாவளிக்கு உங்களுக்கு கல்வெச்ச வளையல்தான்" என்று குஷிப்படுத்தி, வாயை அடைத்தாள்.

ஆனால் அம்மா விடுவதாயில்லை; தனக்குத் தெரிந்த ஓடிப்போன கணவன்மார்கள், ஆபீஸிலொரு மனைவி வீட்டிலொரு மனைவி என்று நாடகம் நடத்திய வேடதாரிப் புருஷர்கள், கதை எல்லாம் மேற்கோள் காட்டி, மாமியாரின் வயிற்றில் ஆஸிட்டைக் கொதிக்க விட்டாள்.

"நானே இதைப் பத்தி அலட்டிக்கலை... நீங்க எதுக்கு இப்பிடி அடிச்சிக்கணும்? ஆபீஸ்ல, வர்க்கிங் அட்மாஸ்ஃபியரை இம்ப்ரூவ் பண்ண இதெல்லாம் சில டாக்டிக்ஸ்; ஒரு நல்லிணக்கத்தைத் தவிர இதுக்கு வேற அர்த்தமே இல்லை..." ஷோபனா முற்றுப் புள்ளி வைக்கும் தருவாயில் "எதுக்கு வேற அர்த்தமில்லை ஷோபி?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் பாஸ்கர்.

"ஒண்ணுமில்லை... நீங்க கையைக் காலை அலம்பிட்டு டிஃபன் சாப்பிட வாங்க..." பெரியவர்களுக்கு ஜாடை காட்டியவாறே சுமுகமாகச் சிரித்தாள் ஷோபனா.

அவன் டைனிங் டேபிளை அடைந்ததும், 'கேளு-கேளு' என்று ஜாடை காட்டுவது, பெரியவர்களின் வேலையாயிற்று. தொண்டையைக் கனைத்துக் கொண்டே, 'ஏங்க இந்த ரெஜினாக்கு இன்னிக்குப் பிறந்த நாளா?' என்று துவங்கினாள்.

"எந்த ரெஜினா?" பாஸ்கர் விழித்தான்; 'நடிக்கிறான்' என நினைத்தனர் பெரிசுகள்.

"அதான்... உங்க பி.ஏ."

"ஓ அவளா? அவ ஸர் நேம் ரேகா; அவளை மிஸ் ரேகான்னு கூப்பிட்டுதான் பழக்கம், பேரே மறந்து போச்சு..."

"சரி... அந்த ரேகாவுக்கு இன்னிக்கு பர்த்டேவா?"

"யாருக்குத் தெரியும்?"

"பின்ன எதுக்கு அவளுக்கு அவ்வளவு அழகான ப்ரேஸ்லெட்?"

ஷோபனா பட்டென்று கேட்கவும், அவன் நிமிட நேரத்துக்கு அதிர்ந்தான். இவளுக்கு எப்படித் தெரிந்தது? கீதாஞ்சலிக்கு இவள் ஷாப்பிங் போயிருப்பாளோ? அந்தக் கடைக்காரர் தெரிந்தவர்தானே? அவர் எதையாவது வத்தி வைத்து, இவள் ஏதாவது புரிந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறாளா? அதற்குத்தான் அம்மாவையும் அழைத்து வந்திருக்கிறாளா?

"அது வந்து ஷோபனா... அந்தப் பொண்ணு ரொம்ப இன்டலிஜண்ட், ஃபாரின் கம்பெனிக்கான ப்ராஜக்ட் ஒண்ணு; ஒரே வாரத்துல முடிச்சுக் குடுத்துடுத்து. இதுனால கம்பெனிக்கு எக்கச்சக்க லாபம்; அதைப் பாராட்டற விதத்துல கம்பெனி தரப்புல ஒரு சின்ன 'கிஃப்ட்'; ஊக்க போனஸ் மாதிரி, மத்தவங்களுக்கும் ஒரு 'வர்க் இன்சென்டிவ்'வா இருக்குமே? வெறும் பணத்துக்குப் பதிலா இப்படி ஏதாவது கொடுத்தா ஒரு பர்சனல் 'டச்' இருக்கும்; அது முதலாளி தொழிலாளி உறவுகளை மேம்படுத்தும்னு, ஃபாரின்லருந்து வந்திருந்த எங்க எம்.டி. சொன்னார்... அதான்..."

இவள் இதை நம்ப வேண்டுமே? சூடம் கொளுத்தச் சொல்வாளா? துண்டைப் போட்டுத் தாண்டச் சொல்வாளா என்று அவன் கவலைப்பட்டுக் கொண்டிருக்க...

"போதுமா? நான்தான் அப்பவே சொன்னேனே? நீங்க அந்த ரெஜினாவை இவர் லவ் பண்றதா எண்ணி கவலைப்பட்டிருந்தீங்களேம்மா..." ஷோபனா சப்தமாகச் சிரித்தாள்.

"லவ்வா? அடக் கஷ்டமே? நீயாவது, சந்தேகப் பேயா மாறி என்னை வாட்டி வதைக்காம இருந்தியே... தாங்க்ஸ் ஷோபி... ஐம் ரியலி ப்ரௌட் ஆஃப் மை வைஃப்..." பாஸ்கர்

"சொன்னா கேளுங்கம்மா! உங்க மாமியார் ஓவர் குண்டா இருக்கலாம். அதுக்காக 'குண்டர் தடுப்புச் சட்டத்தின்' கீழ் அவங்களைக் கைது பண்ணி ஜெயில்ல அடைக்கறதுக்கெல்லாம் சட்டத்துல இடம் கிடையாது"

- பாளை பானு



உண்மையிலேயே கண்களில் நன்றி உணர்வைப் பிரதிபலித்தான்.

"என்ன இருந்தாலும் எம் பிள்ளை ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திதான்'' மாமியார் நொடிக்க...

"என்னமோ மாப்ளை; என் பொண்ணு இல்லாத, வேற ஒரு பொண்ணுக்கு நீங்க கிஃப்ட் வாங்கிக் குடுத்ததும் எனக்குப் பத்திண்டு வந்துடுத்து" என்று அம்மா வெடிக்க...

"அட என்னம்மா இது? எங்க ஆபீஸ்ல கூட எங்க பாஸ் என் பர்த்டே அன்னிக்கு, கேக்கும் க்ரீட்டிங் கார்டும் குடுத்தார். உடனே அவர் என்னை லவ் பண்றாருன்னு அர்த்தமா?'' என ஷோபனா முடித்தாள்.

அவ்வளவுதான்; சுற்றியிருந்தவர்கள் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களைப் படம் பிடித்தால், ஒவ்வொன்றையும் வைத்து ஒரு படம் சொல்லும் கதை பண்ணிவிடலாம்.

அம்மாவின் முகத்தில் நாலு காட்டேறிப் பேய்கள் தாக்கியது போலிருந்தது. "பாவிப் பெண்ணே... பர்த்டேவுக்கு இப்படி 'பாஸ்' கிட்ட கேக் வாங்கித் தின்னணும்னு தலை எழுத்தா? இந்தக் காண்றாவியை இப்பிடி எல்லார் முன்னாடியும் போட்டு உடைக்கணுமா.... ஈச்வரா..."

மாமியாரின் முகத்தில், எள், கொள், கடுகு, மிளகு எல்லாமே வெடித்தன.

"கேக்கு வாங்கிண்டிருக்காளாமே கேக்கு? அதுல ஒரு துண்டை நம்ம கண்ணுல கூட காட்டலியே? இப்படி பேக்கு மாதிரி ஒரு பிள்ளை இருந்தா, ஊர்ல இருக்கறவன்லாம் இவன் பொண்டாட்டிக்கு கேக்கு தருவான்; இவனுக்கு அல்வா தருவான்... கேக்கவே அசிங்கமாயிருக்கே... மானம் போறது..."

பாஸ்கர் முகம், இறுகி இருள் கவ்வியிருந்தது. 'பாஸ்கிட்ட இருந்து கேக்கு கேக்கறதா கேக்கு? இப்படி ஒரு விஷயம் நடந்ததை இது நாள் வரை என்கிட்ட சொல்லவே இல்லையே? அதுதான் பூச்செண்டு விஷயத்தை 'லைட்'டா எடுத்துக்கிட்டாளோ? ரொம்பப் பரந்த மனப்பான்மை இருக்கறாப்போல, 'இதெல்லாம் ஆபீஸ்ல சகஜம்; ஒரு நல்லிணக்கத்தைத் தவிர வேறு அர்த்தமே இல்லை'ன்னு லெக்சர் வேற! நான் ஒரு மாங்கா மடையன்; என் புத்தியச் செருப்பால அடிக்கணும். எல்லாப் பொம்பளைங்களையும் போல, பிரேஸ்லெட், பொக்கே விஷயத்தை வைச்சு என்னை மாட்டு மாட்டுன்னு இவ மாட்டாதிருக்கறப்பவே சந்தேகப்பட்டிருக்கணும். அந்தக் கிழப் பய மேல இனிமே ஒரு கண் வைக்கணும். ○

மாற்றான் தோட்டம்



• லட்சுமி

வாய்தாக்களில் வாழ்க்கை!

(பிற பத்திரிகைகளில் வெளியான சில கடிதங்கள். சற்றே சுருக்கமாக)

பொதுத் தொண்டுக்கு வருபவர்கள் மான அவமானம் பாராமல் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும்" என்று பெரியார் சொன்னதை, அரசியல்வாதிகளுக்கு மான அவமானம் தேவையில்லை என்ற அளவுக்கு ஆக்கிவிட்டார்கள் நம் அரசியல்வாதிகள்.

கே.ஆர். நாராயணன், அப்துல்கலாம், பி.சி. அலெக்சாண்டர், கேப்டன் லட்சுமி ஆகியோரை அந்த அரசியல்வாதிகள் அசிங்கப்படுத்துவதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்தப் பெருமக்கள் நால்வரில் யாரும் தாமே வலிய வந்து குடியரசு தலைவர் பதவிக்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. இனிமேலாவது நாட்டின் உயரிய பதவிக்கான தேர்தலைக் கடைச்சரக்காக ஆக்காமல் பிரதமரும் எதிர்க் கட்சித் தலைவரும் தனியே விவாதித்து முடிவெடுக்கும் பண்பாடு ஏற்படுமா?

(தினமணி - இ.சோமசுந்தரத்தேவர், பிள்ளையார்பட்டி)



• பெரியார்

திருமணத்துக்குப் பிறகு மகளுக்கு விடை கொடுக்கும்போது லாலுபிரசாத் யாதவ் கண்ணீர் விட்டதாகப் படித்தேன். இதே போன்ற உணர்ச்சிகரமான காட்சிகள் பாட்னாவில் டெல்கோ ஷோரூமைச் சேர்ந்தவர்கள் தங்கள் கார்களைப் பிரியும்போதும் நிச்சயம் அரங்கேறியிருக்கும்.

(இந்தியா டுடே (ஆங்கிலம்) - பிரசாத், சென்னை)

சமீபத்தில் ஒரு தோழியின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். வெளியே சென்றிருந்த அவளது மகன் வீட்டுக்கு வந்தான். உடனே என் தோழி, தன் மகனைப் பார்த்து அவளுக்குக் குளிர்ந்த நீரை அளிக்கச் சொன்னாள். பிறகு கொஞ்சம் தேநீரையும் தயாரித்துத் தரச் சொன்னாள். எனக்கு வியப்பாக இருந்தது. பின்னர் தோழியிடம் இது குறித்துக் கேட்டபோது, பெண்கள்தான், அதிலும் முக்கியமாக அம்மாக்கள்தான், ஆண் பெண் சம உரிமையைக் கொண்டு வர முடியும் என்றும், மகனைப் போலவே மகளும் முக்கியமானவள் என்பதை இரு தரப்பினருக்கும் பதிய வைக்க முடியுமென்றும் கூறினாள்.

(பெமினா - மீனா சைலா, மும்பை)

வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்போது, நீதிபதிகளே வழக்குகளை ஆராயவேண்டுமே தவிர, விசாரணையைத் தள்ளிப் போடக் கூடாது என்று ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சந்திரனைக் கையில் பிடிக்க வேண்டும் என்பது போன்றது இது. வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் வாய்தாக்களில்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பது தெரியாதா?

(அலைவ் - கே. ரத்தினவேலு, மணப்பாறை)

ஆங்கிலப் படங்கள் இந்தியாவிலும் இந்திப் படங்கள் வெளிநாடுகளிலும் சக்கைப் போடு போடுவதற்குக் காரணம் விளம்பரம் அல்ல. அது இந்தியர்களின் மனப்பான்மையைக் காட்டுகிறது. வெளிநாடுகளில் தங்கிவிட்ட இந்தியர்களுக்கு மனத்தில் பெரியதொரு குடும்பச் சூழலில் இருக்கமாட்டோமா என்ற ஏக்கம். இதனால்தான் "ஹம் ஆப்கே ஹைன்கௌன்", "கபி குஷி கபி கம்" போன்ற படங்கள் அங்கு பெரும் வெற்றி பெறுகின்றன. இந்தியாவில் வசிப்பவர்களுக்கோ ஹாலிவுட்டிலிருந்து எந்தப் படம் வந்தாலும் அது உசத்திதான். சராசரி இந்தியனுக்கு கற்பனைக்குத் தீனி போடும் மசாலாப் படங்கள் மிகவும் பிடிக்கும். ஆனால் இவை இந்தியாவில் தயாரிக்கப்பட்டிருக்கக் கூடாது! சந்தேகமிருந்தால் ஹிர்த்திக் ரோஷனை நாயகனாகக் கொண்டு 'ஸ்பைடர் மேன்'' தயாரிக்கப்பட்டிருந்தால் என்னவாகும்? அல்லது இந்தியச் சிறுவன் ஒருவன் "ஹாரி பாட்டராக" நடித்து அது இந்திய மொழியில் தயாரிக்கப்பட்டு வெளிவந்தால் என்னவாகியிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். தோல்வியைத்தான் சந்தித்திருக்கும்."

(தி வீக் - ஆர்.பாலசுந்தரம், மும்பை)

தொகுப்பு : ஜி.எஸ்.எஸ்.





செடிகளுக்கு சைவச் சத்துணவு!

உங்கள் வீட்டில் ஒரு சின்ன தோட்டம் போட்டிருக்கிறீர்கள். ஒரு வாரம் வீட்டைப் பூட்டிக் கொண்டு ஊருக்குப் போகிறீர்கள். ''செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற முடியாதே; செடிகள் வாடிவிடுமே!'' என்று கவலையா?

வீட்டில் தோட்டம் போட நல்ல விதைகள் வேண்டுமா உங்களுக்கு?

உங்கள் வீட்டு வாழை மரம் நன்றாக வளர்ந்தாலும், குலை தள்ளவில்லையே! ஏன் என்று வல்லுனரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?

இப்படி எந்தத் தேவையானாலும், கை கொடுக்க ஒரு மையத்தைத் திறந்திருக்கிறது ஈ.ஐ.டி பாரி நிறுவனம். சென்னை அண்ணாநகரில் உள்ள இந்த மையத்தை, எழுத்தாளர் சிவசங்கரி அண்மையில் திறந்து வைத்தார்.



''சமீப காலமாக செடி வளர்க்கிற, தோட்டம் போடுகிற ஆர்வம் அதிகரித்து வருகிறது. தரமான விதைகள், செடிகள், தோட்டக்கலை உபகரணங்களை மக்கள் வாங்க விரும்புகிறார்கள். அவர்களுக்குச் சேவை செய்யவே இந்த மையம்.'' என்கிறார் ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தின் சிவராமகிருஷ்ண பிள்ளை.

தவிர, இங்கே இன்னொரு புதிய ஐட்டமும் அறிமுகமாகியுள்ளது. அதன் பெயர் கார்டன் ப்ளூம்!

அது என்ன கார்டன் ப்ளூம்?

சுருக்கமாகச் சொன்னால், செடிகளுக்குச் சைவச் சத்துணவு.

ஆமாம்! சர்க்கரை ஆலையில் கரும்பைப் பிழிந்து சாறு எடுக்கிறபோது, அதில் சில கசடுகளும் சேர்ந்திருக்கும். அதைச் சுத்திகரித்து, வடி கட்டுகிறபோது, கசடுகள் தேங்கிவிடும். மண் மாதிரியான இதை, வழக்கமாக, தொழிற்சாலைக்கு வெளியே மலைபோலக் குவித்து வைத்திருப்பார்கள். சுமார் இரண்டாண்டுகளில் இது இயற்கையான உரமாகும்.

ஆனால், பாரி நிறுவனம், இரண்டாண்டுகளை வீணாக்காமல், உடனடியாக, அதிலிருக்கும் கார்பன், நைட்ரஜன் விகிதாசாரத்தை மாற்றியமைத்து இயற்கை உரமாக்கி விடுகிறது. அது மட்டுமில்லை. மண் போன்ற உரத்தை, துப்பாக்கி ரவை போன்ற உருவம் கொண்ட துண்டுகளாக்கி, பேக் செய்து, கார்டன் ப்ளூம் என்ற நூறு சதவிகித சைவ, இயற்கை உரமாக்கி விடுகிறது. (விலை ஒரு கிலோ முப்பத்து இரண்டு ரூபாய்)

''ரசாயன உரங்கள், நல்ல விளைச்சலைக் கொடுத்தாலும், மண்ணின் தன்மையை மிகவும் பாதிக்கும். எனவே, இப்போது இயற்கை உரம் பிரபலமாகி வருகிறது. வழக்கமான சாண எரு உரம் நூறு கிலோ போட வேண்டிய இடத்தில், கார்டன் ப்ளூம் இயற்கை தாவர உணவை, ஐந்து கிலோ போட்டாலே போதும். இதில் வேம்புச் சத்தும் சேர்க்கிறோம் என்பதால், செடிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படுகிறது. மண்ணில், தண்ணீரைத் தக்க வைத்துக் கொள்ளும் திறனை அதிகரிக்கிறது. மொத்தத்தில், தாவரங்களுக்கு, நல்லதொரு சைவ சத்துணவு!'' என்கிறார் பிள்ளை.

— கௌதம் ராம்



மனம் உருகுதே...

"யாரு? சங்கரன் ஸாரைத் தேடறீங்களா... இந்த வீடுதான்."

விசாரிக்காமலேயே வீட்டை அடையாளம் காட்டினார்கள். நிறைய பேர்கள் விசாரித்திருப்பார்கள் என்று இதனால் புரிந்துபோயிற்று.

இந்தப் பகுதியில் வந்து தயங்கி நின்றால் அவர்கள் சங்கரன் வீட்டைத்தான் தேடுகிறார்கள் என்பதாக அங்குள்ளவர்கள் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டு, 'யார், சங்கரன்தானே?' என்று பேச ஆரம்பித்து விடுகிறார்கள். நல்ல இடத்திற்கு நான் வழி காட்டுகிறேன் என்று சற்றுப் போட்டி போட்டுக் கொண்டு வழி காட்டுகிறார்கள்.

அவர்களைக் கடந்து சங்கரன் வீடு நோக்கிப் போகும்போது அவர்களையே பார்க்கிறார்கள். பாவம் என்ன கஷ்டமோ என்பதுபோல் அவர்கள் கண்கள் பேசுகின்றன. அப்படிக் கஷ்டப்பட்டவர்கள் பலபேர் சங்கரன் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள் என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

தெரு ஒட்டிய வீடு, கடைசி வாசற்படியில் கோலமிட்டு அதில் ஆரத்தி கரைத்துக் கொட்டியிருந்தது. ஆக, இந்த வீட்டில் ஏதோ விசேஷம். ஆனால், உற்றுப் பார்க்க பலமுறை ஆரத்தி கொட்டியிருக்கிறதால் தினமும் ஆரத்தி கரைத்துக் கொட்டுவார்களோ என்றும் தோன்றுகிறது.

தெருவிலிருந்து இடுப்புயர வராண்டாவுக்கு மூன்று படிகள் ஏறி நிற்க அந்த வீட்டின் அமைப்பும் தான் இருக்கும், வீடு போலவே இருந்தது. அதுவும் நூறு வருஷத்திய வீடு.

தேக்கு மரக்கதவு. வாசற்படி. வீட்டு வாசலில் கஜலட்சுமி இருப்பாள். இந்த வீட்டு வாசலில் அமிர்த குடம் இருந்தது. இரண்டு அன்னப்பட்சிகள் இருந்தன. அன்னப் பட்சிகளுக்கு அடுத்தபடி குலை தள்ளிய வாழைகள் இருந்தன. இதுவும் மிக மங்கலமான ஒரு வாசற்படி. மிகப் பழைமையான வாசற்படி.

பிராமணர்கள் வீட்டு வாசற்படி இப்படித்தான் இருக்கும். பிராமணர்கள் வீட்டு வாசற்படியில் கஜலட்சுமியை வைத்திருப்பார்கள்.

அவர்கள் படியேறும் சப்தம் கேட்டு ஜன்னல் வழியே தெரிந்த பெண்மணி ஓடிவந்து மரக்கதவு திறந்தாள். மரக்கதவு சற்று ஓசையுடன் திறந்துகொண்டது.

"யாரு சங்கரன் ஐயரா" மாடிக்குப் போங்க."

கீழ் உள்ளவர்கள் ஐயர் இல்லையென்று பேச்சிலும், சங்கரனைக் குறிப்பிட்ட விதத்திலும் தெரிந்தது.

அந்தப் பெண்மணிக்கு நாற்பது வயதிருக்கும்.

"ரொம்ப தொலைவிலேர்ந்து வறீங்களா. மூஞ்சியெல்லாம் வேர்த்திருக்கே. கண்ணு கலங்கியிருக்கு. வாங்க. கைகால் கழுவிட்டு மாடிக்குப் போங்க" என்று கதவைப் பெரிதாகத் திறந்தார்.

கதவு தாண்டி ரேழி. ரேழி தாண்டி இன்னொரு கதவு. இன்னொரு கதவு தாண்டி பெரிய முற்றம். முற்றம் தாண்டி இன்னொரு ரேழி என்று நாலுகட்டு வீடு என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

ராதாகிருஷ்ணன் தன் மனைவி ரேவதியைப் பார்த்தார்.

"ரேவதி முகத்தை அலம்பிக்கலாம்



9

பாலகுமாரன்

போலதான் தோன்றியது" என்று சொல்ல அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

அந்தப் பெண்மணி கிட்டத்தட்ட முற்றத்திற்கு ஓடினாள். போகும்போதும் அடுத்த கதவையும் பெரிதாகத் திறந்து வைத்தாள். முற்றத்தின் ஓரத்தில் குழாய் இருந்தது. குழாய் திறக்க முக்கால் நிரம்பியிருந்த பெரிய வெங்கல கங்காளம் புளி போட்டு பளபளவென்று தேய்த்து வைக்கப்பட்டிருந்தது. வீட்டில் அதிக சாமான்கள் இல்லை. ஆனால் சுத்தமாக இருந்தது.

அந்த வீட்டுக் கூடத்திலும் பெரிய மாக் கோலம் போட்டு நாளாகி மெல்லத் தேய்ந்து போயிருந்தது. வீட்டின் அடிப்பகுதியில் காவியும், வெள்ளையும் பூசியிருந்தார்கள். ஒருவேளை அங்கு ஹோமங்கள் ஏதும் நடந்திருக்குமோ என்னமோ என்று ராதாகிருஷ்ணன் நினைத்துக்கொண்டார். சொம்பை நீரில் முக்கி முகம் அலம்பிக் கொண்டார். கழுத்தில் மார்பில் நீர் விட்டுக் கொண்டார். கை கால் கழுவிக் கொண்டார். இன்னொரு சொம்பு ஜலம் எடுத்து மனைவியிடம் கொடுத்தார்.

மனைவி முகம் அலம்பிக்கொள்ள துவங்கினாள். கை ஜலம் முகத்தில் தெளித்து அலம்பியதும் சட்டென்று திரும்பி அந்தப் பெண்மணியிடம் குங்குமம் இருக்கா என்று இலேசான பயத்தோடே கேட்டாள்.

"இருக்குமா இருக்கு. நல்லா முகம் கழுவிக் கோங்க. சோப்பு தரட்டுங்களா" என்று கேட்க ஒரு தயக்கத்துடன் ரேவதி சரி என்று சொன்னாள். அந்தப் பெண்மணி மறுபடியும்

உள்ளே ஓடினான்.

புது சோப்பைக் கொண்டு வந்து பிரித்து ஒரு டப்பாவில் வைத்து, அவளிடம் நீட்டினான். அவனும் சோப்பு போட்டுக்கொண்டு முகம் தேய்த்துக் கொள்ளலாம் என்று ராதாகிருஷ்ணனுக்குத் தோன்றியது.

"நீங்க சோப்பு போட்டுக்கறேளா, புது சோப்புதான்" என்று ரேவதி கேட்க மறுபடியும் அவர் முகம் அலம்பிக்கொண்டார். சோப்பால் முகம் தேய்த்துக்கொண்டார். கண்ணில் நீர் வழிய மேல் துண்டை எடுத்து முகத்தை துடைத்துக்கொண்டார்.

"எதுக்கு அதை ஈரம் பண்றீங்க. இந்தாங்க டவல்"

டவல் தரப்பட்டது.

அவருக்கு அந்த உபசரணை ஆச்சரியமாக இருந்தது. மேலே சங்கரன் ஐயரை பார்க்க வருபவர்களையெல்லாம் இப்படி வரவேற்பது வழக்கமுண்டோ என்று எண்ணம் வந்தது. சங்கரய்யர் அப்படிக் கட்டிப் போட்டிருக்கிறாரா என்று கேள்வி வந்தது. அவ்வளவு பெரிய ஆளா என்று ஆச்சரியம் எழுந்தது.

முகம் துடைத்துக்கொண்டு வீடு சுற்றிப் பார்த்தார். சுவரில் விளக்குப் பிறை இருந்தது. விளக்கு இன்னும் எரிந்துகொண்டிருந்தது. சுவரில் பழங்காலத்துப் படங்கள் மாட்டப் பட்டிருந்தன. ரவிவர்மாவின் தலை விரித்த லட்சுமியும் சரஸ்வதியும் திசைக்கொருவராய் உட்கார்ந்திருந்தார்கள். நடுவில் ராமர் பட்டாபிஷேகம் எல்லாம் மூன்றடிக்கு நாலடி படங்கள் நூறு வருஷத்துப் படங்கள்.

"யார் வீடு இது?"

ராதாகிருஷ்ணன் அடிக்குரலில் கேட்டார்.

"எங்க வீடுதான்."

அந்த நாற்பது வயதுப் பெண்மணி பொதுவாகச் சொன்னாள்.

"இல்லை. ஓனர் யாருன்னு கேட்கறேன்."

"எங்க மாமனார். பேர் துரைசாமி."

"முதலியாரா?"

"இல்லை, நாயக்கர்."

"துரைசாமி நாயக்கருக்கு முன்னாடி யாரு?"

"அவங்க அப்பாரு. அவங்க அப்பாவுக்கு அப்பாரு. இது வெள்ளைக்காரன் காலத்துல அவங்களுக்குக் கொடுத்த வீடு. ஒரு வீடா இருந்ததை மூணு மாடி கட்டடமா மாத்திட்டாங்க."

"மூணு மாடியா?"

"ஆமாம்.

"மேல சங்கரன் வாடகைக்கு இருக்காரா?"

"ஆமாம்."

"வாடகை என்ன?"

"அவரு இருக்கறதுக்கு நாங்க கொடுத்து வச்சிருக்கணும். மாசா மாசம் அவரா பேங்க்ல கட்டிட்டுக் கொடுத்துட்டேன்னு சொல்வாரு. சரின்னு சொல்லுவோம். எவ்வளோன்னு கேட்கறதில்லை."

"சரி. அதுக்கு மேல் மாடியில யார் இருக்கா?"

"அவருதான் இருக்காரு."

"ரெண்டு மாடியிலேயும் சங்கரனா."

"ஆமாம். முதல் மாடியில கூட்டம் நடக்கும். பூஜை நடக்கும். பாட்டுக் கச்சேரி நடக்கும். அதுக்கு மேல் மாடியில அவரு குடித்தனம் இருக்காரு."

"இங்கயும் பூஜை பண்ணுவாங்க போலிருக்கே."

"ஆமாம். ஹோமங்களெல்லாம் பண்றதா இருந்தா சங்கரன் ஐயர் கீழே வந்துருவாங்க."

"ஹோட்டல் சாப்பாடு உங்க உடம்புக்கு ஒத்துக்காது..."
"சரி, டாக்டர்... கோயில் சாப்பாடு?"
- வெள்ளாளப்பட்டி சந்தோஷ்

"நாங்க ஜார்ஜ் டவுன்ல இத்தனை நாள் இருக்கோம். இவரு யாருன்னே தெரியலையே."

"வெளிய ஜாஸ்தி இவர் போறதுமில்லை. தன்னைப் பத்தி சொல்லிக்கறதுமில்லை. ஆனா, தெரிஞ்சவங்க மறுபடிமறுபடி வந்துருவாங்க."

"ஐயா என்ன பண்றாங்க?"

ராதாகிருஷ்ணன் ஆவலோடு கேட்டார்.

"நல்ல வார்த்தைச் சொல்லுவாங்க. போய் பிரச்னைன்னு கேட்டா கண்ணை மூடிக்கிட்டு மௌனமா இருப்பாங்க. டப்புனு கண்ணைத் திறந்து, ஆகும் ஆகாதுன்னு சொல்லுவாங்க. என்னமோ அவரு பேசறத கேட்டா மூணு காலமும் தெரிஞ்ச முனிவர் மாதிரிதான் இருக்கும்."

"இன்னும் புரியும்படியா சொல்லுங்களேன்."

ராதாகிருஷ்ணன் அவளைப் பார்த்து திரும்பி உட்கார்ந்துகொண்டார். ரேவதியும் ஆவலாக இன்னொரு நாற்காலியில் அவளைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

“உதாரணமா கேட்கறீங்களா? நிறைய சொல்லலாம். என் தங்கச்சி மாமனார் வீட்லேர்ந்து அவங்க பொண்ணு சரியா இல்லைன்னு கூட்டிக்கிட்டு வந்தாங்க. உண்மையிலேயே என்ன பிரச்னைன்னு எனக்கே தெரியாது. என் தங்கச்சிக்கும் அரைகுறையாகத்தான் தெரியும். அவங்க வீட்டுப் பிரச்னை நாம பேசுவானேன்னு சொல்லிட்டு, என் தங்கச்சியும் மௌனமா இருந்துட்டா, எங்கிட்டயும் சொல்லலை. நானும் வந்த விருந்தாளிய சரின்னு சொல்லி உட்கார வச்சு சாப்பாடு போட்டேனே தவிர என்னா பிரச்னைன்னு கேட்கலை. உள்ள போய் காலடி எடுத்து வச்சவுடனே ஒரு உறுமல். சட்டுனு திரும்பிப் பார்க்கறாரு. என்னா புருஷன் போயிட்டானா. உன்னோட குடித்தனம்



பண்ண முடியாதுன்னு போயிட்டானா, போகட்டும் விடு. அவனை விட்டுடு. அந்த நாய் எங்கயோ போய் செருப்படி படப்போகுது. அவனைத் தேடாத. அவனை விட்டுடு.”

அந்தப் பொண்ணு பெருசா அழ ஆரம்பிச்சது. அந்தப் பொண்ணோட அப்பா, அம்மாவைக் கிட்ட கூப்டாரு. டைவர்ஸுக்கு அப்ளை பண்ணுங்கோ. நான் நின்னு வாங்கித்தரேன். என்னடா உள்ள நுழைஞ்சவுடனே இப்படி பேசலாமான்னு தோணுதா. உன் பொண்ணு உயிரோட இருக்கணும்னா அவனை விட்டு விலகியிருக்கறதுதான் முக்கியம். இருந்து ரெண்டு வருஷம் கழிச்சு மறுபடியும் வேற ஒருத்தனோட அவளுக்குத் திருமணம் ஆகும். ரொம்ப சந்தோஷமா இருப்பா. இதுக்கு வெட்கப்பட வேணா. அச்சப்பட வேணாம். இப்படி ஆயிடுச்சேன்னு நொந்து கொள்ள வேணாம். குழந்தை நல்லாயிருக்கணும். அதான் முக்கியம்னு சொல்லி ஒரு நாள் முழுக்க கூடவே இருக்கச் சொன்னார். அந்த மாப்பிள்ளை எப்படியிருப்பான்னு என் தங்கச்சிக்கும் தெரியாது, எனக்கும் தெரியாது. இவன் எப்படியிருப்பான்னு அக்கக்கா புட்டு வைக்கறாரு. பச்சைக்கறி சாப்பிடணும்னு ஆசைப் படறான் இல்ல. அவன்கூட எவ குடித்தனம் பண்ண முடியும்? அப்படின்னு கேட்டாரு? அந்தப் பொண்ணு ஆடிப்போச்சு.

“எனக்கு மட்டும்தாங்க தெரியும். வேணும்னாலும் வெந்நீர் முக்கி பச்சைக்கறி சாப்பிடுவாரு. அப்படின்னா அதான் வலுவுன்னு சொல்வாரு. தங்கச்சி மாமனார் ஏம்மா இதெல்லாம் எங்கிட்ட சொல்லலைன்னு ஒரே சண்டை. அந்தப் பொண்ணு இடிஞ்சு போய் உட்கார்ந்தது. நான் தனியா கூட்டிட்டுப் போய் அவர் என்ன சொன்னாரோ அதுப்படி கேட்டுக்கோ. நீயா எதுவும் தீர்மானம் பண்ணாத. வேணும்னா மறுபடியும் வா. என் வீட்ல தங்கியிரு. ரெண்டு நாள் உட்கார்ந்து என்ன, ஏதுன்னு விவரமா கேட்டுக்க. உங்கப்பா அம்மாவ கூட்டிட்டு வராத. பேச முடியாதபடி போயிடும்னேன். அந்தப் பொண்ணு நான் மொள்ள வரேன்ப்பா. இவங்க வீட்ல தங்கிக்கறேன்னு என்கூட தங்கிடுச்சு. ஒரு வாரம் இங்க இருந்தது. மேல போவும். பூஜையில கலந்துக்கும். திரும்பி வந்துரும். சாயந்தரம் பூஜையில் கலந்துக்கும். திரும்பி வந்துரும்.

“ஏழாவதுநாள் ஐயரு கூப்பிட்டுச் சொன்னாரு. எல்லா பூஜையும் உனக்காக பண்ணிட்டேன். தாயே உனக்கு ஒரு கவலையும் இல்லை. இன்ன தேதிக்கு இந்த வக்கிலை வச்சு அப்ளை பண்ணு அப்படின்னு சொல்லி கையில ரட்சை கட்டி அனுப்பினார். டைவர்ஸ் நோட்டீஸ் பார்த்து ஆ...ஊ...ன்னு குதிச்சான். அப்புறம் டைவர்ஸ் வாங்கிடலாம்னு சொல்லி, அவனும் அப்ளை பண்ணி மியூச்சுவலா பிரிஞ்சிட்டாங்க. கொண்டு போன பாத்திரம், பண்டம், பீரோ, கட்டில் எல்லாத்தையும் திருப்பிட்டா.

“இவளுக்குச் சொந்தக்காரனே முன்னால வந்து நான் இவளைக் கட்டிக்கறேன்னு சொல்லி, இவ வீட்டோ மாப்பிள்ளை ஆயிட்டான். அவ அப்பா, அம்மாக்கு ரொம்ப சந்தோஷம். எங்க ஊர்ல எங்க ஜாதியில மாப்பிள்ளை எதிர்க்க, மாமியார் வந்து பேச மாட்டாங்க. இப்போ அந்தப் பொண்ணோட அம்மா முத்து... முத்து... முத்துக்குமார்னு போக வர மாப்பிள்ளை பேர் சொல்லிக் கூப்ட்டு புள்ளை மாதிரி வச்சு கொண்டாடிக்கிட்டிருக்காங்க. இப்போ அந்தப்

பொண்ணு உண்டாகியிருக்கா. போனவாரம் கூட வந்திருந்தா. இந்த மாதிரி நிறைய சொல்லலாம்."

"அவரு குறி சொல்றவரா?"

"இல்லீங்க. பொய்யில்லை. ஒரு அம்மாவோட புருஷன் ரொம்ப முரடு. தொட்டதுக்கெல்லாம் அடி உதைன்னு எகிறுவாரு. வந்து ஐயாகிட்ட விவரம் சொல்லி அழுதாங்க. ஐயா தினம் வந்து போயிகிட்டிருன்னு சொன்னாங்க. அந்தம்மா சாயந்தரம் ஒரு அரை மணி நேரம் வரும். உட்கார்ந்திருக்கும். அவரு வந்துடுவாரு. லேட்டாயிடுச்சுன்னு விறுவிறுன்னு வீட்டுக்குப் போயிடும். ஆனா அதுவே கையால தொடுத்த ரெண்டு முழம் பூ கொண்டு வந்து ஐயாகிட்ட கொடுக்கும். மூணு மாசம் இப்படி தினம் கொண்டு வந்து கொடுத்தது. ஐயா என்ன பண்ணாங்களோ, ஏது பண்ணாங்களோ? ஒரு நாள் அந்தப் புருஷன் வந்து "ஓ"ன்னு அழுது, இனிமே என் பொண்டாட்டியைத் தொந்தரவு பண்ண மாட்டேன். இது சத்தியம். அம்பாள் மேல சத்தியம்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. ஏன் என்னாச்சு அப்படின்னு சுத்தி இருக்கறவங்க கேட்டாங்களாம்.



"பொண்டாட்டிய தொந்தரவு பண்ணா என்னவிதமான நரகம் கிடைக்கும்னு மூணு தடவை கனவாச்சாம். அவனுடைய கை விரல்களையெல்லாம் சுத்தி வச்சு நசுக்கறாங்களாம். எழுந்த அரைமணி நேரம்... விரல் வலிக்குமாம். முதல்ல இது கனவுன்னு இருந்த அப்புறம், தினம் கனவு வரவே பயந்துட்டாராம். மனைவிகிட்ட ஜாஸ்தி வம்பு வச்சிக்காத இருந்தாராம். கோபம் வருது அப்படின்னா மறுபடியும் விரலெல்லாம் வலிக்க ஆரம்பிக்குமாம். வீட்டுக்குப் போய் மனைவியைக் கோவிக்கணும். அடிக்கணும்னு பல்லை கடிச்சுக்கிட்டிருக்கும்போது முழங்கால் எதுனா ணங்குனு இடிபடுமாம். யாராவது சைக்கிள்ள வந்து பின்னாடி இடிச்சுடுவாங்களாம். எப்போ மனைவி மேல கோபம் வந்தாலும் எங்கேயாவது அடிபடுதுன்னு பார்த்து ஒரு நாள்; இது யாரோ நம்மள கடுமையா எச்சரிக்கறாங்கன்னு தெரிஞ்சு யாரு யாருன்னு கேட்டபோது, இன்னொரு கனவு வந்ததாம். சங்கர ஐயர் இது நியாயமா நல்ல பொண்ணை சித்ரவதை பண்றியே, நீ நல்லாயிருப்பியா? அப்படின்னு கேட்கறாராம். ஒழுங்கு மரியாதையா அடங்கப் போறியா அப்படின்னு சொல்லிக் கேட்டுக் கனவு கலைஞ்சு போச்சாம். எழுந்து உட்கார்ந்து என்ன பண்றதுன்னு தெரியாம மொள்ள பொண்டாட்டிய எழுப்பி யாரு சங்கர ஐயருன்னு கேட்டு அவ சொல்ல... என்னா... அவராண்ட சொல்லி எதுனா மருந்து வச்சிட்டியா எனக்கு, அப்படின்னு கேட்க, அதெல்லாம் பண்ணலை. தினம் பூ கட்டிக் கொடுக்கறேன், அப்படின்னு சொல்ல அவரு எழுந்து வெளிய போயிட்டாராம்.

"சங்கரய்யர் என்னை என்னா பண்றது. நான் சங்கரய்யரை ஒன்னும் பண்ண முடியாதா அப்படின்னு காளிகாம்பாள் கோயிலுக்குப் போனார்."

"அங்க என்னாச்சு...என்னாச்சு?"

ராதாகிருஷ்ணன் மிகுந்த ஆவலோடு கேட்டார்.

அவனும் தொடர்ந்து பேசினான்.

(தொடரும்)

சச்சின்

இங்கிலாந்துக்கு எதிராக முதன் முதலாக கடந்த நான்காம் தேதிதான் செஞ்சுரி அடித்திருக்கிறார் சச்சின் டெண்டுல்கர்.

"இங்கிலாந்துக்கெதிரான முதல் ஒரு தின போட்டியில் 1990ம் ஆண்டில் ஆடினேன். அந்த அணியுடன் இதுவரை இருபது ஆட்டங்களில் ஆடியும் சதத்தை நெருங்கும் தருவாயில் எப்படியோ கோட்டை விட்டிருக்கிறேன். இப்போதுதான் சாத்தியமாகி இருக்கிறது. இந்தச் சதத்துக்கு எதிர்முனையில் என்னோடு ஆடிய டிராவிட்டும் காரணம்" என்கிறார் இந்த மாஸ்டர் பேட்ஸ்மேன்.

முதல் படத்திலேயே அஜித்துக்கு நாயகியாக அறிமுகமானாலும் அடுத் தடுத்துச் சொல்லிக் கொள்கிற மாதிரி வாய்ப்புகள் வரவில்லை மாளவிகாவுக்கு. ஆனால் மலையாளப் பட உலகம் அவரை அரவணைத்துக்கொண்டது. 'பாந்தம்' என்றொரு படம். மம்முட்டிக்கு ஜோடியாக நடித்ததில் மளமளவென்று வாய்ப்புகள். எல்லாம் சேலை கட் டிய, அடக்கமான, குடும்பத்துப் பெண் வேடம். "திருவனந்தபுரத்திலோ, திரிச் சூரிலோ, கோழிக்கோட்டிலோ ஷாப்பிங் பிளாசாக்களில் என்னைப் பார்த்து விட் டால்... "ஏய்... மாளவி சேச்சியாக்கும்! என்று ஓடி வந்து பெண்கள் கட்டிப் பிடித்துக் கொள்கிறார்கள் எப்படி இத்தனை அழகாக புடைவை கட் டிக் கொள்கிறீர்கள்...? கொஞ் சம் டிப்ஸ் ப்ளீஸ்" என்கிறார் களாம்.

ஒரு ரசிகை, "வீடு பக்கத் துலேதான். வந்து சாயாவாவது குடிக்கணும்" என்று தரதர வென்று இழுத்துக் கொண்டு போய்விட்டாள். இந்த மரியாதையை நான் அங்கே காப்பாத்திக் கொள்ள வேணும்" என்கிறார், 'ஞாபகங்கள் தாலாட்டும்' படப்பிடிப்பில் இருந்த மாளவிகா.

"இந்தப் படத்தில் முர ளிக்கு முறைப் பெண் ணாக நடிக்கிறேன். கிரா மத்துக் கதை. எனக்குக் கதை ரொம்ப பிடிச்சதாலே ஒப்புக் கிட்டேன். இந்தப் படம் வெளியே வரட்டும், அப்புறம் பாருங்க... எனக்குன்னு தமிழ்லே நிரந்தரமா ஒரு இடம் இருக் கும்" என்று நம்பிக்கை தெரிவித்த மாளவிகாவுக்கு, மலையாளத்தில் தாம் நடித்த படங்கள் தமிழில் வரிசையாக 'டப்' செய்யப்படுவதில் பரம சந்தோஷம்! சேலைதான் எனக்கு வாய்ப்புகளை வாரித் தந்திருக்கிறது எனும் மாள விகாவுக்கு மிகவும் பிடித்த உடை ஜீன்ஸ், டீசர்ட்தானாம்!

— ஸ்ரீ சக்கரம்



மீண்டும் மாளவிகா!

நடக்குமென்பார் நடக்கும்!

மேஷம் : உத்தியோகத்தில் எவ்வளவோ எதிர்ப்பிருந்திருக்குமே! அதெல்லாம் இப்ப 'சூ, மந்திரக்காளி'னு மந்திரம் போட்டதுபோல ஓடியே போயிடும். வார மத்தியில் புதன், கடக ராசிக்குள் பிரவேசம் என்பதால் பொருளாதார வசதியில் நல்ல முன்னேற்றம் தெரியும். குரு பார்வையின் காரணமாக, வியாபாரத்திலும் சரளமான பணவரவிருக்கும். கூட்டுத் தொழில் செய்பவங்களுக்கு ஏற்றமிகு காலம். வெளிநாட்டுத் தொடர்புகள், அனுகூலமான திருப்பங்கள் நிகழும். கலைத் துறையைச் சேர்ந்தவர்கள் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். பெண்களுக்கு மிகவும் அதிர்ஷ்டமான வாரம்.

ரிஷபம் : குல தெய்வப் பிரார்த்தனை, ஸ்தல யாத்திரை, தெய்வீக காரியங்கள் செய்ய நல்ல நேரம் எதிர்பார்த்து காத்துக் கிட்டிருந்தீங்க. இல்லையா? இந்த வாரம் மாதிரி, அருமையான வாய்ப்பு அமையாது. உடனே பயன்படுத்திக் கொள்ளவும். குரு பார்வையும் சேர்ந்தே விழுவதால், சுப காரிய முயற்சிகள் சட்டென்று கை கூடி, மங்களம் பெருகும். கோர்ட், கேஸ், வழக்கு வியாஜ்ஜியங்களில் சமரசக் கொடி ஏற்றி, சமாதானப் புறாவை பறக்க விடுவது நல்லது. தடாலடி முரட்டுக் காரியங்கள் நன்மை தராது. உணவு, ஓட்டல், லாட்ஜ், சினிமா, சங்கீதம், நாட்டியம் போன்ற இனங்கள் ஆதாயம் கொண்டு வரும்.

மிதுனம் : குரு பலம் பெற்று, செவ்வாயும் ஜோராக ஜொலிப்பதால், உங்கள் அறிவாற்றல், சமயோசித புத்தி, எதிரிகளை வெல்லும் சாதுர்யம் எல்லாமே பன்மடங்காக ஒளிரும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். கடக ராசியில் குரு, செவ்வாய், சூரியனுடன் உலவுவதால், எதிர்ப்புகள் எல்லாம் தவிடுப் பொடியாகும். எதிரிகள் விலாசமில்லாமல் போவார்கள். கை நீட்டி வாங்கியக் கடன்களின் சுமை உங்களை அழுத்திக் கொண்டிருந்ததல்லவா? 6ம் இடத்தில் உள்ள கேது, 12ல் உள்ள ராகு சனி மூவரும் கடன் தொல்லைகளிலிருந்து காத்து ரட்சிப்பார்கள்.

கடகம் : அடடா! குரு மங்கள யோகம் அமோகமா இருக்கே! நல்ல அதிர்ஷ்டமான வாரமாகத்தான் அமையப் போகுது. அரசு விவகாரங்கள் எல்லாமே அனுகூலமாகும். தொழிலாளிகள் முன்னேற்றம் காண்பார்கள். கூட்ஸ் ரயில் வேகத்தில் 'தடக்கா புடக்கா' என்று சென்று கொண்டிருந்த வியாபாரம், இந்த வாரம் சதாப்தி வேகம் காணும். வண்டி ஸ்பீடு எடுக்க எடுக்க, பொருளாதாரக் கஷ்டங்கள் குறைந்து சந்தோஷமாக நிலைமை உண்டாகும். ஏற்றுமதி இறக்குமதி, அலங்காரப் பொருள்கள், கம்ப்யூட்டர், மருத்துவம், இனங்கள் சூப்பர் லாபம் அள்ளி வரும்.

சிம்மம் : 'எவ்வளவோ உழைக்கிறோம். மேலிடத்துலே கண்டுக்கவே மாட்டேங்கிறாங்களே' என்று புலம்பிக் கொண்டிருந்தீர்கள் அல்லவா? உங்க மனவருத்தம் அவங்களுக்குப் புரிஞ்சு போச்சு. இதோ, நீங்க ஆசைப்பட்ட படியே, சலுகைகள், உத்தியோக உயர்வு, அலுவலக அதிகாரம் என நிறைய கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். சொத்து, கடன், பழைய பாக்கி போன்ற விஷயங்களில் நிலவி வந்த குளறுபடிகள் காணாமல் போய், எல்லாமே சாத்வீகமாக பைசல் ஆகும். பிரிந்து சென்ற உறவினர்கள் ஒன்றுகூட வாய்ப்புண்டு.

கன்னி : 'அம்மா வீடு எங்கே? இன்னும் கொஞ்ச தூரம்'னு கண்ணா மூச்சு அடிக்கிட்டிருந்த விஷயங்களை, சாதுர்யமாக அருகில் அழைத்துக் கொள்வதோடு, வெற்றியும் காண்பீர்கள். உத்தியோகத்தில் உற்சாகமானச் சூழ்நிலை ஏற்படும். கலைத் துறைக்காரங்களுக்குக் கரும்புத் தின்ன கூலி கிடைச்ச மாதிரி, அவர்களுடைய புகழும் ஏறும். பணமும் கிடைக்கும். பெண்களுக்கு வாரம் முழுக்க உற்சாகமான பலன்கள் நடக்கும். ஸ்பெகுலேஷன் இனங்களில் அளவோடு நன்மை கிடைக்கும். குடும்பமானாலும், அலுவலகமானாலும், உங்களைத் தேடி புதிய பொறுப்புகள் வரும். மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, கடமையைச் செய்யுங்கள். உங்கள் செல்வாக்கும் மதிப்பும் வானத்துக்கு எகிறும்.

துலாம் : ராசிநாதன் 11ல் சஞ்சாரம் என்பதால், உங்கள் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். தெளிவான மனநிலை, உடல் ஆரோக்கிய மேன்மை, நண்பர்கள் - உறவினர்கள் ஆதரவு, தெய்வீக ஈடுபாடு ஆகிய சுப பலன்கள் நிகழும். 10ல் சூரியன் மற்றும் குரு - செவ்வாய் வார பின்பகுதியில் புதன் சஞ்சாரம் என்பதால், சரளமான பண வசதி உண்டாகும். கடன் தொல்லைகள் ஓடி ஒளிய, குடும்பத்தில் குதூகலமான நிலை ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் கூடி வரும். கொடுக்கல் - வாங்கல் அனுகூலம் தரும்.


விருச்சிகம் : 'இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? நம்மளாலே நிச்சயமா முடியாது' என்று பலராலும் கைவிடப்பட்ட காரியங்களை, சொடுக்கு போடும் நேரத்தில், கனகச்சிதமாக செய்து முடித்து, பாராட்டு பெறுவீர்கள். குருமங்கள யோகம் அமைவதால், அனுகூலமானத் திருப்பங்கள் ஏற்பட்டு, உங்கள் வாழ்க்கைக்கே ஒளி கூட்டிவிடும். உத்தியோக விஷயமாக வெளிநாடு போகும் வாய்ப்பு அமையும். உங்கள் ராசிநாதன் நீச்சம் அடைந்து, உச்ச குருவுடன் உலவுவது சிறப்பான அம்சம் என்பதால், உடல் ஆரோக்கியம் மேன்மையாக இருக்கும். மக்கள் மூலம் மகிழ்ச்சி, பெருமை ஏற்படும். குருபலம் பரிபூரணமாக இருப்பதால், பொன், பொருள், ஆடை, அணிகலன், ஆபரணம் சேர்க்கை ஏற்படும்.

தனுசு : குரு மங்கள யோகம் என்பதால், எட்டாம் இட தோஷம் விடுபட்டு அல்லது குறைந்து நல்ல பலன்களைக் கொடுப்பார்கள். தேக ஆரோக்கியம் மேன்மை அடையும். அலுவலகத்தில் ஒற்றுமையும், ஆரோக்கியமானச் சூழ்நிலையும் நிலவும். புதிய தொழில் முயற்சிகள் யாவும் வெற்றி அடையும். வியாபாரிகள் வளர்ச்சி பெறுவார்கள். பொன், வெள்ளி, நவரத்தினம், ஆடை, ஆபரண இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். தொழில் சம்பந்தமான பயணம் திட்டமிட்டபடி இனிதே நடைபெறும். விருந்து, கேளிக்கை, உபசாரங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்.

மகரம் : ராசிநாதன் சனி, ராகுவுடன் ரிஷபத்தில் 7ல் குரு உச்ச பலத்துடன் செவ்வாய், சூரியன், புதன் சேர்க்கை பெற்று, உங்கள் ராசியைப் பார்ப்பது சிறப்பாகும். எடுத்த காரியங்களில் இருந்து வந்த தடைகளும், தாமதப் போக்கும் நீங்கி, தெளிவான மனநிலையுடன் எதிலும் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகம், நிர்வாகம், தொழிலாளர்கள் முன்னணிக்கு உயரப் பெறுவார்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் படிப்பில் படு கட்டியாகவும், உழைப்பில் படு கெட்டியாகவும் இருப்பார்கள். மருத்துவம், இயந்திரம், ரசாயனம், தோல், உலோகம், வாகனம், கட்டடம் போன்ற இனங்கள் லாபம் கொண்டு வரும்.

கும்பம் : நவக்கிரக தேவதைகளுக்குப் பூஜை சாந்தி செய்து வருவது நல்லது. குரு, தனஸ்தானத்தைப் பார்ப்பதால், பண வசதி தாராளமாக இருக்கும். குடும்பத்தில் அமைதியானச் சூழ்நிலை உருவாகும். குடும்ப வாக்கு ஸ்தானத்தை குரு பார்ப்பதால், செல்வாக்கு அதிகரிக்கும். பேச்சில் வசீகரம் கூடும். பிரசங்கிகள், மத போதகர்கள், ஆசிரியர்கள், சட்ட வல்லுனர்கள் ஆகியோர் முன்னேற்றம் அடைவார்கள். மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். வர வேண்டிய பாக்கித் தொகை சிரமமின்றி வசூலாகும். போக்குவரத்து, இயந்திரம், வீடு, ரியல் எஸ்டேட், வாகனம், மனை போன்ற இனங்கள் ஆதாயம் கொண்டு வரும்.


மீனம் : கிரக சஞ்சாரம் உச்சம் பெற்று, பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய 5ம் இடத்தில், புதன் செவ்வாயுடன் சஞ்சாரம் என்பதால் சகல காரியங்களிலும் அனுகூலம் உண்டாகும். சனியும் ராகுவும் பலம் பெற்றுத் திகழ்வதால், எதிரிகள் அடங்கிப் போவார்கள். இனிமையும் அமைதியும் கலந்த சூழ்நிலை உருவாகும். புதிய உத்தியோகம், பதவி உயர்வு விரும்பத்துக்குரிய இடத்துக்கு மாறுதல் என எல்லா முயற்சிகளும் வெற்றி அடையும். ●



மகர ராசிக்காரரான எழுத்தாளர் அசோக மித்திரனுக்குப் பயணத்தால் அனுகூலம் உண்டாம்.

அக்னிசர்மா பக்கம்

ஜூலை 17 முதல் 23 வரை



மயிலையுறை வேலவன்

சிவபெருமானைப் போலவே ஐந்து தலைகளுடையவராயிருந்தார் பிரும்மா. அந்தப் பெருமையில் அத்தனைத் தலைகளும் கனத்துவிட, தானும் சிவனுக்கு நிகர் என்ற செருக்குடன் அலைந்திருக்கிறார். ஆகாயமுக மாக இருந்த ஒரு தலையை மட்டும் கிள்ளி யெறிந்து அதன் கபாலத்தைக் கையில் ஏந்தி நின்றார் சிவன். பிரும்மா படைப்புத் தொழிலை இழந்தார்!

பிரும்மா கர்வமடங்கி சிவபெருமானிடம் தமது தவறுக்கு மன்னிப்புக் கேட்டார். சிவபெருமான் அனுக்ரஹத்தில், தாம் இழந்த படைப்புத் தொழிலை மீண்டும் பெற்றார். பிரும்மா வேண்டிக் கொண்டதன் அடிப் படையில் கபாலீஸ்வரர் என்ற பெயரை ஏற்று கோயில் கொண்டார் பரமசிவன். அந்த இடம்தான் திருமயிலை. சென்னை யின் கலாசார, ஆன்மிக மையமாகக் கருதப் படுகிற பகுதி.

சில காலம் முன்புவரை சிறு கிராமமாக இருந்தது திருமயிலை. கபாலீசுவரனுக்கொரு பெயர்க் காரணம் இருப்பதுபோல் இத்தலத் தின் பெயருக்கும் காரணம் உள்ளது. அந்த வரலாறு சென்னைவாசிகளின் கண்ணின் மணியாம் கற்பகாம்பாள் தொடர்பானது:

கைலையில் சிவபெருமான், உமை அம் மைக்குப் பஞ்சாக்ஷர மந்திரத்தின் சிறப்பை எடுத்துரைத்துக் கொண்டிருந்தாராம். அப்போது அங்கு வந்து தோகையை விரித் தாடிய மயிலினிடத்தில் அம்பிகையின் கவனம் திரும்பியதாம். தோகை மயிலைக் கண்டதும் வாகை வேல் முருகன் ஞாபகம் வந்துவிட்டதோ என்னவோ... அம்பிகை, சிவன் சொல்வதைக் கேளாது கவனத்தைச் சிதறவிட்டுவிட்டாள்!

பொறுப்பாரா பரமசிவன்...? அவளையே மயிலாகும்படி சபித்துவிட்டார். அவ்வடிவி லேயே பூவுலகம் வந்து புன்னை மரத்தடியில் ஈசுவரனை வழிபட்டு, சாபம் நீங்கப்பெற்று ஆட்கொள்ளப்பட்டாள் அம்பிகை. கையி லையில் பெற்ற சாபம் மயிலையில் தீர்ந்தது! அம்பிகை விரதமிருந்து சிவனை வழிபட்ட புன்னைவனத்து நிழல்பகுதி மயிலாபுரி என்றழைக்கப்படலாயிற்று.

அம்பிகை வழிபட்ட இத்தலத்தில் சுக்கி ரனும் சதுர்மறைகளும் முனிவர்கள் பலரும் சிவனை வழிபட்டதாக புராணங்கள் உண்டு.

நம் தமிழ்க்கடவுள் முருகன் பார்த்தான்... அம்மையப்பர்களும் தேவரும் முனிவரும் சிறப்புச் செய்து குடியேறிய இடத்தில் தானுமிருந்துவிட முடிவு செய்தான். புரா ணம், வரலாறு என்று நிமித்தங்கள் தோன்ற காத்திராமல் மயிலையில் வந்து குடியேறி விட்டான் _ சிங்காரவேலவனாக!


மயில்மீதமர்ந்த திருக்கோலத்தில் ஆறு முகங்களும் பன்னிரு கரங்களுமாக ஜொலிக் கிறான் சிங்காரவேலன். இருபுறமும் இரு மாதர் யானைகளின் மீது அமர்ந்திருக்கும் அபூர்வ தோற்றத்தில் காணப்படுகிறார்கள்.

மயிலாபுரியே இவர்களால்தான் சிறப்புற் றது என்பதுபோல் தமது திருப்புகழ் பாக் களில் பாடிச் சென்றிருக்கிறார் அருணகிரி நாதர்:

"அழகும், இலகிய புலமையும் மகிமையும்
வளமுமுறை திருமயிலை"


"வடிவுலாவி ஆகாசமினிர்
பலாவின் நீள் சோலை
வனஜவாவி பூவோடை வயலோட

குருஜி ஏ.எஸ். ராகவன்




மணிசெய் மாட மாமேடை சிகரமோடு
வாகான மயிலை..."

என்று இப்பழம்பதியின் இயற்கை வளங்களை வர்ணிக்கிறபோது வேத கோஷமும் தாமரை மலர்களின் மென்வாசமும் தேரோடும் வீதிகளும், தமிழ் முழங்கும் திண்ணைகளும் நம் மனக்காட்சியில் விரிகின்றன.



கபாலீசுவரத்தைச் சுற்றி வருவோம். மதில்கள் சூழப்பெற்ற திருக்கோயிலின் கிழக்கிலும் மேற்கிலுமாக இரு ராஜகோபுரங்கள். கிழக்கு கோபுரம் உயரமானது. மேலை கோபுர வாசலில் கபாலி தீர்த்தகுளம் – சீரான படிக்கட்டுகள்.

கீழை கோபுர வாசலுள் நுழைந்து தல விநாயகரான நர்த்தன கணபதியை வழி



பட்டுவிட்டு அண்ணாமலையார் – உண்ணாமுலை அம்மன் சன்னிதியையும் கண்டு வழிபடலாம். கொடிமரம், பலிபீடம் என்று தொன்மையான அம்சங்கள். அதன் பிறகு நந்தி மண்டபம் உள்ளது. மகா மண்டபத்தின் வடபுறம் கற்பகாம்பாள் சன்னிதி; கிழக்கில் கபாலீஸ்வரர் சன்னிதி. கருவறையில் அம்பாள் எழிலே உருவாக, அருளைப் பொழியும் கற்பகமாகக் காட்சி தருகிறாள்.

ஈசுவரன் சன்னிதியில் துவார கணபதி, சுப்ரமண்யர் உள்ளனர். உயர்ந்த மேடையில் அமைந்துள்ள கருவறை. இவ்யாலங்கார னாய்க் காட்சி தருகிறான். திருச்சுற்றில் நடராஜரும் அறுபத்து மூவரும் ஸோமாஸ் கந்தரும் இதர உற்சவ மூர்த்தங்களும் காணக் கிடைக்கின்றன.

சிங்காரவேலவனுக்குத் தனி சன்னிதி இருக்கிறது. மேற்கு நோக்கிய அமைப்பில்

கொடிமரத்துடன் காட்சி தருகிறது. எதிர்த் திசையில் அருணகிரிநாதர் முருகனைத் தொழுதபடி நிற்கிறார். தீப ஆராதனையின் ஒளியில் ஆறு முகங்களை நிதானமாக, தினம் தினம் தரிசிக்கும் அவருடைய பேறு பெரும் பேறல்லவா என்று தோன்றுகிறது.

நாமும் அந்த ஆராதனையின்போது முருகனைக் காண, பாபனாசம் சிவன் ஆனந்தமாக ஆனந்தபைரவியில் அவனைப் பாடியது நினைவுக்கு வருகிறது:

சிங்கார வேலவன் வந்தான் – எந்தனை
ஆள
பொங்காதரவோடும் அடங்கா
மகிழ்வோடும்
பெருங்காதலோடும் ஐயன்
தங்கமயிலினிடை துங்க வடிவினொடும்
(சிங்கார)

நம்மை ஆள அவன் பெருங்காதலுடன் தங்கமயில் ஏறி வருகிறான் என்பது எத்தகைய உற்சாகமான கற்பனை!


முந்தென் வினை பயந்த
பந்தம் தொலைத்தருளை
இந்தா இந்தா என்று
ஏழை குடிமுழுதும் வாழ அருள் புரிய

வந்தானாம் சிங்கார வேலவன்.

'இந்தா! இந்தா!' என்று அருளை நாம் கேளாமலே தரக்கூடிய தெய்வம் இந்த மயிலை சிங்காரவேலவன்.

'அதற்காக அவன் அருளை வேண்டாமல் இருந்துவிடுவதாவது!' என்று விடாக் கொண்டராய் வேண்டித் தொழுகிறார் அருணகிரியார்:

"அறமி லாவதி பாதக வஞ்சத்
தொழிலாலே
அடியனேன் மெலி வாகிம னஞ்சற்
றினையாதே
திறல்கு லாவிய சேவடி வந்தித்
தருள்கூடத்
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத்
தருவாயே
விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப்
பொரும்வேலா
விமல மாதபி ராமித குஞ்செய்ப்
புதல்வோனே
மறவர் வாணுதல் வேடைகொ
ளும்பொற் புயவீரா
மயிலை மாதகர் மேவிய கந்தப்
பெருமானே."



ஷூட்!

செ**ன்னையின் முன்னணி புகைப்படக் கலைஞர்களில் ஒருவரான சுந்தர் அண்மையில் புகைப்படக் கண்காட்சி ஒன்றை நடத்தினார்.

சினிமா பிரபலங்கள், மாடல்கள், இயற்கைக் காட்சிகள், வீடுகளின் உட்புறங்கள், சாமானிய மனிதர்கள் என்று பல தரப்பட்டப் படங்கள் கண்காட்சியில் இடம் பெற்றுப் பாராட்டு பெற்றன. இவர் ஏராளமான விளம்பரங்களுக்கும் புகைப் படங்கள் எடுத்திருக்கிறார். நிறைய உடை டிசைனர்களுடன் பணி புரிந்திருக் கிறார்.

சுந்தரின் சில புகைப்படங்களில், மாடல்களுடன் சேர்ந்து, பால் வண்ண பினாஸ்டிக் ஷீட்களையும் கலைநயத்துடன் பயன் படுத்தி







யுள்ளார். "ஜெப்ரி வர்தன் என்பவர் அற்புதமான டான்ஸர். அவரது நிகழ்ச்சி ஒன்றின்போது, பிளாஸ்டிக் ஷீட்களை மிக அற்புதமாகப் பயன்படுத்தி, வண்ண ஒளியைத் திசை மாற்றியதை மிகவும் ரசித்தேன்.

'அமெரிக்கன் பியூட்டி' படத்தில் சில நிமிடங்களுக்கு, ஒரு துண்டு பிளாஸ்டிக் காகிதம், காற்றில் பறந்து மிதந்து வருவதை ரசித்துப் பார்த்திருக்கிறேன். இவைதான் பிளாஸ்டிக் காகிதத்தைப் பயன்படுத்த என்னைத் தூண்டின" என்கிறார் சுந்தர்.

— பாரதி





சர்ச்சையைக் கிளப்பிய விஜி!

“எங்கள் ஆபிஸுக்கு ஒரு நாள் ஹிதேஷ் ஷா என்றவர் ஃபோன் செய்தார். மெக்டோனால்஡ில் தரும் ஃப்ரெஞ்ச் ஃப்ரை (உருளை சிப்ஸ்)யில் மாட்டிறைச்சி கலக்கிறார்கள் என்று சந்தேகம். நீங்கள்தான் துப்பு துலக்க வேண்டும்" என்று சொல்ல, நான் உடனே 'மெக்டோனால்ட்' அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு உண்மை நிலையைக் கேட்டேன். 'விவரங்களைத் தருகிறோம்' என்று இழுத்தடித்தனர். 'கஸ்டமர் சாட்டிஸ்ஃபாக்ஷன்' பிரிவைத் தொடர்பு கொண்டு உங்கள் ஹோட்டல் ஃப்ரெஞ்ச் ஃப்ரை பிரமாதம். எப்படி இப்படிச் செய்ய முடிகிறது? அதில் என்னவெல்லாம் சேர்க்கிறீர்கள் என்று குழைவாகக் கேட்டேன். பத்திரிகையாளர் என்று சொல்லவில்லை. கைமேல் பலன்! மாட்டிறைச்சி கலந்திருப்பதாகச் சொல்ல, உடனே அவர் பெயர்; டைட்டில் எல்லாம் நோட் பண்ணிக் கொண்டு ஃபுட் அண்ட் ட்ரக் அட்மினிஸ்ட்ரேஷனுக்குத் தகவல் கொடுத்தேன். பிறகு இதைக் கட்டுரையாக எழுதி, பத்திரிகையில் வெளிவந்தவுடன் பயங்கர பரபரப்பு. மெக்டோனால்ட் நிறுவனம் மன்னிப்புக் கேட்டதுடன், பத்தாயிரம் டாலர் இந்து அமைப்புக்கும் கிடைத்தது" என்கிறார் விஜி சுந்தரம். இவர் சொல்லும் மெக்டொனால்ட் உணவகம் அமெரிக்காவில் இருக்கிறது. இது போன்ற பல உண்மைகளைச் சமூக அவலங்களை, வெளிக் கொண்டு வந்திருக்கும் இந்தப் பத்திரிகையாளரைப் பெங்களூரில் சந்தித்தோம்:

“என் அப்பா காப்டன் சுந்தரம் சர்தார் படேல், நேரு போன்ற மாபெரும் தலைவர்களுக்காக விமானம் ஓட்டியவர். அம்மா உஷா சுந்தரமும் விமானிதான். முதல் பைலட் என்ற கௌரவத்தைப் பெற்றவர். நான் படித்தது ஸ்டெல்லா மாரீஸில். முதலில் லிட்ரேச்சர்தான் எடுத்தேன். பிறகு சயின்ஸுக்கு தாவிவிட்டேன். பிற்காலத்தில் பல விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதுவதற்கு உதவியாக இருந்தது. பிறகு ஜர்னலிஸத்தில் டிப்ளோமா முடித்தேன். 82ல் அமெரிக்கப் பயணம். அதற்குள் சென்னையிலிருந்தே வாய்ஸ் ஆஃப் அமெரிக்காவுக்காகப் பணியாற்றினேன். எனக்கு அப்போது இருபது வயதுதான். 'தபோவனா' என்ற சின்மயா மிஷனின் ஆன்மிகப் பத்திரிகைக்கு ஆசிரியரானேன்."

அமெரிக்கப் பயணம் மேற்கொண்ட விஜி அங்கு பாஸ்டனில் ஜர்னலிஸத்தில் மேற்படிப்பு முடித்துவிட்டு பல்வேறு பத்திரிகைகளில் பணிபுரிந்திருக்கிறார். பிறகு கலிபோர்னியாவிலிருந்து வெளிவரும் 'இன்டியா வெஸ்ட்' பத்திரிகையில் பொறுப்பேற்று பல சமூக அவலங்கள், கொடுமைகள், ஊழல்களை வெளிக் கொண்டு வந்திருக்கிறார். தெற்கு ஆசிய பெண் மணிகள் சந்திக்கும் விபரீதங்கள், விபத்துக்கள், கொடூரங்களைப் பற்றி தெரிந்து கொண்டு அவர்

களுக்கெனவே 'நாரிகா' என்ற ஹெல்ப்லைனும் தொடங்கினார். இதன் மூலமாக விஜி தெரிந்து கொண்டது ஏராளம்.

'நஸீம் கனி என்றொரு பாகிஸ்தானி. அவன் மனைவி மரியம். திருமணமாகி அங்கு வந்தபின்தான் தன் கணவன் ஒரு 'போர்ன் பிலிம்' எடுக்கும் காமப் பிசாசு என்று தெரிய வந்தது. தினம் ஒரு பெண்ணைக் கூட்டி வருவான். மரியமையும் அந்த மாதிரி படங்களில் நடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தவே, அவள் தன் குழந்தையுடன் வீட்டை விட்டு ஓடிவிட்டாள். உடனே நஸீம், குழந்தையை கிட்நாப் செய்து ஓடிவிட்டாள் என போலீஸில் பொய் கேஸ் பதிவு செய்தான். அங்கு கிட்நாப்பிங் என்பது பெரிய குற்றம். எப்படியோ மரியம், பாகிஸ்தானுக்கு ஓடி விட்டாள். நான் அப்போது இதைப் பெரிய ஸ்டோரியாக' எழுதினேன். அதற்கு பலரைச் சந்தித்து உண்மை என்ன என்று அறிந்தேன். மரியமின் தகப்பனாரும் என்னைச் சந்தித்தார். போலீஸுக்கு நஸீமின் சுயரூபத்தைக் காண்பித்தேன். தற்சமயம் மரியம் மிக அருமையான வேலையில் இருக்கிறாள். சந்தோஷமாக தன் குழந்தையுடன் இருக்கிறாள்.

"நாரிகாவில் இது போல் பல கேஸ்கள்! சென்னையிலிருந்து திருமணமாகிப் போன ஒரு தமிழ்ப் பெண் தன் கணவனிடம் பட்ட கொடுமைகள் அதிகம். அவன் பெர்க்லி பல்கலைக் கழகத்தில் ரிஸர்ச் செய்கிறான். ஆனால் ஒரு சைக்கோ. அவள் வாயில் சாக்ஸை அடைத்து உடலே நீலம் பரித்துப் போகும் வரை அடித்துத் துவைத்துப் போடுவான். தயங்கித் தயங்கி எங்களிடம் வந்தாள். அவளை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைத்தோம். இங்கிருந்து போகும் பெண்கள் அவர்களுக்கென்று ஒரு வட்டம் போட்டுக் கொண்டு, தங்கள் இனம் சேர்ந்த மக்களுடன் தான் பழகுகிறார்கள். அவர்களைப் பெரும்பாலும் கணவன்மார்கள் வேலைக்குப் போக விடுவதில்லை. ஒருவித தனிமையிலேயே வாழ்ந்து நாளா வட்டத்தில் டிப்ரஷன் ஏற்பட்டு விடுகிறது..'' நீளமாக சொல்கிறார் விஜி.

இந்தியாவிலிருந்து வெளிவரும் தினசரிகள் மீது விஜிக்கு வருத்தம். ''இங்கு ஏதோ மேலெழுந்தவாரியான நியூஸ்தான் படிக்க முடிகிறது. அங்கு எழுத்துச் சுதந்திரம், கருத்து சுதந்திரம் மிக அதிகம். பத்திரிகையின் வீச்சு, பலத்தின் முன்னே மற்றவர் பல வீணமாகிப் போவார்கள்'' என்கிறார். '98-ம் வருடம் 'ஆஸ்ரா' எனும் பெண் அமைப்பில் நடக்கும் ஊழல்களை அம்பலப் படுத்தியதற்கு SAJA விருதும் பெற்றிருக்கிறார்.

ஒரு சிறந்த பத்திரிகையாளருக்கான டிப்ஸும் தருகிறார் விஜி. "நேர்மை, என்ன வந்தாலும் துணிந்து நின்று போராடும் தன்மை, விட்டுக் கொடுக்காமல், நாணயமாகச் செயல்படுதல், ஒரு பிரச்னையை எடுத்துக் கொண்டால் அதன் இரு பக்கங்களையும் அலசி ஆராய்தல்..'' எனச் சொல்லிக் கொண்டே போகிறார். சரி விஜிக்குப் பிடித்த பத்திரிகையாளர்?...

'சோ' என பட்டென்று பதில் வருகிறது.

— லதா சேகர்





மீண்டுமொரு மும்பை நாயகி!



தமிழ்த் திரைக்கு மும்பையிலிருந்து புதிதாகப் பயணப் பட்டிருக்கும் பாலக்காட்டுத் தாரகை வித்யா பாலன்! ஏற் கெனவே விளம்பர உலகில் மின்னியவர்தான்; இப்போது, 'மனசெல்லாம்' மத்தாப்பூச் சிதறல்களுடன் கோலிவுட்டில் பிரவேசிக்கப் போகிறார்.

மும்பை செம்பூர் பகுதியில் வித்யாபாலன் படு பாப்புலர்; அதிர்ஷ்ட தேவதை. இந்த அழகு தேவதையுடன் சின்ன வயதி லிருந்தே ரொம்ப "தோஸ்த்!" செயின்ட் ஆன்டனீஸில் பள்ளிப் படிப்பை முடித்து, செயின்ட் சேவியர்ஸில் பட்டப் படிப்புக்கு அடி எடுத்து வைத்த போதே, அங்கே இந்தி சீரியல் ஒன்றுக்காக புதுமுக வேட்டை ஆடியவர்களின் கண்ணில் பட்டு, செலக்ட்டும் ஆகிவிட்டாரே?

முதல் சீரியலோ முதல் படமோ வெளிச்சத்தைக் காணா மலிருப்பது திரையுலக ஃபார்முலாப்படி நல்ல சகுனம்! பாருங் களேன். இவர் அஷோக் ஸராஃபின் ஐந்து பெண்களில் ஒருவ ராக (ராதிகா) நடித்து, வந்த "ஹம் பாஞ்ச்" காமெடி ஸீரியல், ஓஹோ என்று ஓடியது! அந்த அடிப்படையில் இப்போது இவர் ஹீரோயினாக நடிக்கும் 'மனசெல்லாம்' சூப்பர் ஹிட் டாக வேண்டும்; ஏனென்றால், இவர் முதன் முதலாக மோகன் லாலுடன் நடித்த 'சக்ரம்' மலையாளப்படம், பாதியிலேயே நின்றுவிட்டது!

சீரியல்கள் கொஞ்சம் அலுப்புத் தட்ட ஆரம்பித்தபோது விளம்பரப்படங்கள் இவர் மடியில் வந்து விழுந்தன. நான்கு வருடங்களில் ஐம்பது விளம்பரப் படங்கள்! இவருடைய மாடல் கோ ஆர்டினேட்டர்கள்தான் 'மலையாளப் படத்தில் நடிக்கிறாயா?' என்று ஆசை காட்டியிருக்கிறார்கள். அதுவும், எந்த மோகன்லாலுடன் நின்று ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொண்டால் கூட ஜன்ம சாபல்யமடைந்து விடும் என்று நினைத்துக் கொண்டிருந்தாரோ, அதே மோகன்லாலுடன் ஹீரோயினாக நடிக்கும் வாய்ப்பு வந்ததும் நெஞ்சம் ஆகா சத்தில்தான் பறந்திருக்கிறது. ஏகமாக விளம்பரப்படுத்தப் பட்ட பிறகு, முப்பது சதவிகித ஷூட்டிங்கும் முடிந்தபின், படம் ஏதோ கசமுசாவில் கைவிடப்பட்டதில் மனம் தரை தட்டிவிட்டது.

அந்தச் சோகம், இவரைக் காட்டிலும், இவருக்கு மேக்கப் போட்ட பாண்டியனை அதிகம் வருத்தவே, அவர் இவரது படங்களை ஆஸ்கர் ஃபிலிம்சாருக்குக் காட்டப்போக, நல்ல உள்ளத்தின் உண்மையான முயற்சி 'க்ளிக்'காகிவிட்டது!

'மனசெல்லாம்' இவரைப் போலவே, இதன் இயக்குனர் சந்தோஷுக்கும் முதல் முயற்சி.

"இரண்டரை மணி நேரம் அவர் எனக்குக் கதை சொல்லி நடித்துக் காட்டினார். இதை வெற்றிப் படமாக்க வேண்டும் என்ற அவரது உத்வேகம் எனக்குப் புலப் பட்டது'' என்பவருடன் ஜோடியாக நடிப்பது ரோஜாக்கூட்டம் நாயகன் ஸ்ரீகாந்த்! "இதுவரை எந்தப் பிரச்னையுமே இல்லாமல் எல்லாம் ஸ்மூத்தாக ஓடிக் கொண்டிருக்கிறது'' என்கிறார். படத்தைப் பற்றி, அது ரிலீசாகும்வரை மூச்சு விடக் கூடாது என்ற நிபந் தனைக்காட்பட்டிருக்கும் நாயகி.

சாஸ்த்ரீய சங்கீதத் துடன் எட்டு வருடங்கள் போராடிய பிறகு, குருவின் மேலிருந்த அன்பினால், அவரை மேலும் கஷ்டப் படுத்த விரும்பாமல் விட்டு விட்டேன் என்று பளிங்குத் தரையில் சிதறிய சோழிகள் மாதிரி மனம்விட்டுச் சிரித்த வித்யாவின் உரை யாடல் நெடுகிலும் மலை யாள வாசம். நடிப்பில் இவர் ரோல் மாடல்களா கக் கொண்டிருப்பவர்கள் தபு, ஷபானா, ரேவதி, சிம்ரன், ம்ம்... மனோரமா... ஆச்சியைப் பின் பற்றினால் 'அச்சி'யான எதிர்காலம் தான்! என்ன சொல்றீங்க?

— ஜெயஸ்ரீ ராஜ்

அட்டை, படங்கள்: 'மனசெல்லாம்'

சீரியல் போரடிச்சுப் போகும்!

மூப்பத்து மூன்று மொழிகளில் ஒளிபரப்பாகும் டிஸ்கவரி சேனல் இப்போது தமிழிலும்!

"இப்போதைக்கு தினமும் இரண்டு மணி நேரம் மட்டுமே நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும். இரவு எட்டு மணி முதல் பத்து மணி வரை ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள், மறுநாள் பகல் பத்து மணியிலிருந்து பன்னிரண்டு வரை மறு ஒளிபரப்பாகும். சுமார் மூன்று மாதங்களில், தினம் ஆறு மணி நேரமாக அதிகரிக்கப்பட்டு, இன்னும் இரண்டு வருடங்களில் இருபத்தி நாலு மணி நேர ஒளிபரப்பு முழு வீச்சில் நடைபெறப் போகிறது" என்கிறார் டிஸ்கவரி சேனலின் இந்திய ஒளிபரப்பு நிறுவன பொது மேலாளரான தீபக் ஷோரி. மத்திய அமைச்சர் அருண் ஷோரியின் சகோதரர் இவர்.

"இந்தியாவில், டிஸ்கவரி சேனல் ஏற்கெனவே ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருபத்து நாலு மணி நேர சேனலாக ஒளிபரப்பாகி வருகிறது. நாங்கள் நடத்திய கருத்துக் கணிப்பின்படி, ஆங்கிலம், இந்தி தெரியாதவர்கள், தங்கள் தாய் மொழியில் டிஸ்கவரி நிகழ்ச்சிகளைக் காண விரும்புகிறார்கள். எனவே, மற்ற இந்திய மொழிகளில் ஒளிபரப்ப நினைத்தோம். தென்னிந்தியாவில் டிஸ்கவரி சேனலைப் பார்ப்பவர்கள் 29 சதவிகிதம்தான் (அகில இந்திய அளவில் 42 சதவிகிதம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால், தென் மாநிலங்களுள், தமிழ்நாட்டில்தான் டிஸ்கவரி சேனலுக்கு, அதிகமாக வரவேற்பு இருக்கிறது. தமிழில் டிஸ்கவரி சேனலை ஆரம்பித்தால், பார்க்கிறவர் எண்ணிக்கை உயரும் என்பது எங்கள் கணக்கு."

"என்ன மாதிரியான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பப் போகிறீர்கள்?"

"தமிழுக்கென்று தனியாக நிகழ்ச்சிகளைத் தயாரிக்கப் போவது இல்லை. தினமும் ஆங்கில, இந்தி டிஸ்கவரி சேனல்களில் என்ன நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறதோ, அதையே தமிழ் நேயர்கள், மொழித் தடங்கலின்றி புரிந்து கொண்டு, நன்றாக ரசிக்க முடியும்.


"இன்றைக்கு, சினிமா, சீரியல் இவற்றைத்தானே மக்கள் விழுந்து விழுந்து பார்க்கிறார்கள்! வர்த்தக ரீதியில் சமாளிக்க முடியுமா உங்களால்?"

"ரொம்ப சரி! ஆனால், சினிமா, சீரியல் போரடித்துவிடும். ஓர் அளவுக்குத்தான் அது. புதுசாய்த் தெரிந்து கொள்ள, புதுமையான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைப் பார்க்கலாமே! என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் எங்கள் இலக்கு. நிகழ்ச்சியின் விறுவிறுப்பு, புதுமை, காரணமாக மற்றவர்களுக்கும் நாளடைவில் டிஸ்கவரி பார்க்கிற ஆர்வம் ஏற்படும் என்பது உறுதி. அதை, தமிழ் டிஸ்கவரி சேனல் சீக்கிரமே சாதிக்கும்!"

— மௌலி

• தீபக்ஷோரி





இமயத்துடன்...

''கோவை பட்சிராஜா ஸ்டுடியோ. 'நான் நல்லா பாடுவேன்! சினிமாவில் பாட ஒரு வாய்ப்பு வேணும்! புரொடியூசரை, டைரக்டரைப் பார்க்கணும்' என்று கெஞ்சினேன். காவலாளி, உள்ளே விடவில்லை. ஏழு மாதகாலம் கஷ்டப்பட்டு, கடைசியாக அனுமதிக்கப்பட்டேன். இப்போது ஐம்பத்தைந்து வருடங்களுக்குப் பிறகு அதே ஸ்டுடியோவில் கால் வைத்தபோது பரவசமடைந்தேன்'' என்கிறார் பின்னணி பாடகர் டி.எம். சௌந்தர்ராஜன்.

டி.எம்.எஸ். பற்றிய மெகா தொடர் ஒன்று 'இமயத்துடன்' என்ற தலைப்பில் ஜெயா டி.வி.யில் விரைவில் வர இருக்கிறது. பட்சி ராஜா ஸ்டுடியோவில், முதன் முதலாகத் தாம் பாடி, ஒலிப்பதிவு செய்யப்பட்ட அறையில், அதே பழைய பாடல் வரிகளைப் பாடி, பழைய அனுபவங்களை நினைவு கூரத்தான் அங்கு சென்றார் டி.எம்.எஸ்.

மதுரையில் தெற்கு கிருஷ்ணன் கோவில் தெருவில் உள்ள டி.எம்.எஸ். பிறந்த வீடு, அவர் பாட்டு கற்றுக் கொண்ட வரத ராஜ பெருமாள் கோவில், அவர் படித்த பள்ளிக்கூடம் என்று டி.எம்.எஸ். சம்பந்தப்பட்ட இடங்களுக்கெல்லாம் மறுபடியும் சென்று, டி.எம்.எஸ். பழைய விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள, படம் பிடிக்கப்படுகிறது.

பிலிம் இன்ஸ்டிடியூட் மாணவரான விஜயராஜ் இயக்க, அவரது நண்பர்கள் அமிர்த்ராஜும், சொர்ணவேலும் தயாரிக்கிறார்கள்.

"இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பாடகர் டி.எம்.எஸ். அவருக்கு, தமிழக அரசு கொடுத்த கலைமாமணி விருது தவிர, வேறு எந்த அரசு கௌரவமும் இதுவரை அளிக்கப்படவில்லை என்பது வருத்தமான உண்மை. அவரது வாழ்க்கையைப் படம்பிடித்து, பதிவு செய்ய வேண்டியது கடமை என்று நினைத்துத்தான் இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறோம். இந்தத் தொடருக்கு, முதல்வர் மற்றும் ஜெயா டி.வி. தரப்பில் பெருமளவில் ஊக்கம் தருகிறார்கள்." என்கிறார்கள் விஜயராஜும், அமிர்த்த ராஜும்.



• படப்பிடிப்பில்

52 வாரத் தொடரின் மிக முக்கியமான பகுதிகளை மட்டும் தொகுத்து டி.எம்.எஸ். பற்றிய ஒரு டாகுமென்டரி உருவாக்கும் எண்ணமும் இருக்கிறதாம்!

— மானஸா



ராஜா

அடிதடி, ஆக்ஷன் வழியில் மெசேஜ் சொல்லிக் கொண்டிருந்த அஜீத், மீண்டும் டூயட் பாடி, காதலித்து, கவலைப்படும் ரொமாண்டிக் முத்திரையோடு வலம் வருகிறார்.

திருமணம் வேண்டாம் என்று பிடிவாதமாக இருக்கும் நாயகனின் கல்லூரி வாழ்க்கையில் ஒரு சோகமான காதல் வடு! பின்னணியில் இரண்டு நாயகிகள். வெவ்வேறு கோணங்களில் இருவருமே நாயகன் மீது காதல் கொள்கிறார்கள். மேற்கொண்டு கதை நகர வேண்டுமே...! எனவே, ஒருவர் எதிர்பாராமல் இறந்துவிட, எஞ்சிய நாயகி, நாயகனோடு இணைய முடிந்ததா? என்பதை குழப்பமில்லாத திரைக்கதை மூலம் மெல்லிய நகைச்சுவை கலந்து படமாக்கியிருக்கிறார்கள். ஆனால் கதையோடு ஒன்றிய காமெடி என்றபோதும், பல காட்சிகளில் புளித்த பழைய சோறு வாசம்!

படத்தைத் தூக்கிப் பிடிப்பது இடைவேளைக்குப் பிறகு வரும் நீண்ட, ஆனால் போரடிக்காத ஃப்ளாஷ்பேக் காட்சிகள். ஃப்ளாஷ்பேக்கில் வரும் இரண்டாம் கதாநாயகி, ப்ரியங்கா திரிவேதி நன்றாக நடித்திருக்கிறார்.

கொஞ்சம் முதிர்ச்சியான தோற்றம் என்றாலும் பாத்திரத்தோடு கச்சிதமாகப் பொருந்திவிடும் அஜீத்தும் பளிச்செனத் தெரிவது ஃப்ளாஷ்பேக்கில்தான். கல்லூரியில் ராகிங் பண்ணிக்கொண்டு உள்ளுக்குள் மென்மையான காதலைப் புதைத்து வைத்திருக்கும் பாத்திரத்தில் ஜோதிகா ஜொலிக்கிறார். ஆனால் அவரது கண்களில் தெறிக்கும் அந்தக் குறும்பும், ஒளியும் எங்கே? ஒரே ஒரு பார்வையில் வில்லத்தனத்தை வெளிப்படுத்தும் மும்பை வரவு சோனுவும் கவனிக்க வைக்கிறார்.

கடைசி இருபது நிமிடங்கள் மட்டும் பின்னணி இசையில் கவனம் செலுத்தியிருக்கும் எஸ்.ஏ. ராஜ்குமாரின் இசையில் ஹிந்தி டூயட்களின் சாயல் அப்பட்டமாய்த் தெரிகிறது. எனினும் 'கரிசல் காட்டுப் பெண்ணே' பாடலுக்குத் தியேட்டரில் ஒன்ஸ்மோர் விண்ணப்பம்!

காதலியை இழந்த சோகத்தைச் சுமந்துகொண்டிருக்கும் அஜித், படத்தின் தொடக்க காட்சியில் எப்படி மந்திராவுடன் ஜாலியாக ஆட்டம் போடுகிறார் என்பது இயக்குனருக்கே வெளிச்சம்... காதலியைக் கண்முன் கொன்றவனை மறந்து விட்டு, கூலாக கிராமத்தில் வந்து இருப்பது மாதிரி தோன்றுவதும் பலவீனம்தான். இது போன்ற லாஜிக் தவறுகள், ரசிகன் கண்ணுக்குத் தெரியாத பட்சத்தில் ராஜா அஜித்துக்கு ஒரு வெற்றிப்படம்!

— விஷுவல்தாசன்

• ஆவெரஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka